# புதிய இந்திய நிர்மாண கட்டமைப்பு பொருளாதார மேம்பாட்டு கோட்பாடுகள்

"ஊழலை ஒழித்து கட்டுவோம்"

"பற்றாக்குறையை இல்லாமை ஆக்குவோம்"

"பொருளாதாரத்தை மேம்படுத்தி காட்டுவோம்"

## "தனி ஒரு விதி செய்வோம்"

– ஆர்வலர்

முத்தியால்சாமி அண்ணாதுரை



முன்னாள் படைவீரர் இடைவிலகல்

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் முதல் | பக்கம் வரை |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 3 | 37 |
| 2. | அகவுரை | 38 | 40 |
| 3. | அணிந்துரை | 41 | 43 |
| 4. | ஆய்வுரை | 44 | 46 |
| 5. | பரிந்துரை | 47 | 49 |
| 6. | பணிந்துரை | 50 | 51 |
| 7. | தெளிவுரை | 52 | 53 |
| 8. | ஏற்புரை | 54 | 55 |
| 9. | மதிப்புரை | 56 | - |
| 10. | ஒப்பிட்டுரை | 57 | - |
| 11. | தீவிரவாத தடுப்புரை | 58 | - |
| 12. | கள்ளப்பணம் / கறுப்புப்பணம் தடுப்புரை | 59 | - |
| 13. | முடிவுரை | 60 | 62 |
| 14. | அறிமுகம் இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை | 63 | - |
| 15. | மின்னணு பயோமெட்ரிக் ரொக்கப் பரிவர்த்தனை அட்டை | 64 | - |
| 16. | கணக்கிட்டு உரை | 65 | 77 |

## முன்னுரை:

அகர முதல எழுத்தெல்லாம்ஆதி

பகவன் முதற்றே உலகு.

**– வள்ளுவர் வாக்கு**

எல்லா ஆக்கபூர்வமான சிந்தனைகளுமே எழுத்து வடிவில் இருக்கும் வரை அது ஓர் ஜடப்பொருளைப் போலவே பாவிக்கப்படுகின்றது. அதற்கு உயிரூட்ட வேண்டுமெனில் ஒசை எழுப்பப்பட வேண்டும். அதாவது எழுதும் வரை அந்த எழுத்தை எழுதுபவர் அதை படிப்பவர் சுற்றுக்கு மட்டுமே உணரப்படுகிறது.

அந்த எழுத்துக்கள் ஒலிபரப்பு, சொற்பொழிவு, பிரச்சாரம், மேடைப்பேச்சு போன்ற ஒசை வடிவு கொண்டால் மிக விரைவாக பல கோடி மக்களைச் சென்றடையும் வாய்ப்பு, மிகச் சுலபமாய் நடந்தேறும்.

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக

**– வள்ளுவர் வாக்கு**

வருமுன் காப்பவனே அறிவாளி. அது வந்த பின்னே புலம்புபவன் ஏமாளி

**– ஔவை பிராட்டியார்.**

மேற்கண்ட பொன்மொழிகள் யாவும் இன்றைய காலகட்டத்தில் காற்றோடு கரைந்து விட்டக் கதையாகிவிட்டது.

நாம் அனைவரும் எந்த அளவுக்கு அறிவாளிகளாக உள்ளது போல் கற்பனை செய்து கொண்டிருக்கிறோமோ, அதே அளவுக்கு முட்டாள்தனமான மாயைக்குள் சிக்கி ஏமாளிகளாகவும் உள்ளோம் என்பதை பின்னர் இறுதியில் வரும் கணக்கிட்டு உரையின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த உலகில் யார் அறிவாளி? யார் ஏமாளி? ஆர்வலர்

**– தனியொரு விதி செய்வோம்.**

## தத்துவஞானி மகரிஷி வேதாத்ரி – பார்வையில் புதியதோர் இந்திய கட்டமைப்புகள் ஓர் பார்வை.

வாழ்க வேதாத்ரியம்
போரில்லா நல்லுலகம்
பொருள் துறையில் சமநீதி,
நேர்மையான நீதிமுறை
நிலவுலகில் ஓர் ஆட்சிமலர
சீர்செய்த பண்பாடு
சிந்தனையோர் வழிவாழ்வு
சிறப்புணர்ந்த பெண்மதிப்பு
தெய்வநீதி வழிவாழ்தல்
தேர்த்திருவிழா தவிர்த்தல்
சிறுவர்கட்கே விளையாட்டு
செயல் விளைவு உணர்கல்வி
சீர் காந்த நிலை விளக்கம்
பார் முழுவதும் உணவு – நீர் பொதுவாக்கல்
பலமதங்கள் பலகடவுள் பழக்கம்
ஒழித்துண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல்

– தத்துவ ஞானி வேதாத்திரிமகரிஷி

## வாழ்வியல் கோட்பாடுகளில் பகுத்தறிவின் தொகுத்தறிவு சிந்தனைச் சங்கம் ஓர் கண்ணோட்டம்:

தனி மனித ஒழுக்க மேம்பாடு
பொருளாதார முன்னேற்ற மேம்பாடு
இவைகளுக்கான நம்பகத் தன்மை வாய்ந்த வழிகாட்டுதல் நெறிமுறைகள். ஓர் பார்வை.

## நோக்கங்களும் பயன்களும்:

1. ஊழலை அடியோடு ஒழித்துவிடுவது.
2. அனைத்து மக்களையும் தனிமனித ஒழுக்கத்திற்குள் பழக்கிவிடுவது (மின் ஆளுமை, மின்னணு பரிவர்த்தனை)
3. பொருளாதார மேன்மையை உண்மையான அடிப்படை நம்பகத் தன்மை வாய்ந்த கட்டமைப்புகளுடன் அடைந்துவிடுவது.
4. அனைத்து மக்களுக்கும் அடிப்படை பாதுகாப்பான வாழ்வாதாரம் கொடுக்கப்படுவது.
5. அபரிமிதமான வேலை வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்படுவது.
6. முடக்கப்பட்டிருக்கும் ஊழல் சொத்துகளும் கருப்புப் பணமும் வெளிப்படுத்துவது.
7. உலக அரங்கில் இந்தியாவை தலை நிமிரச் செய்து முன்னிலைப்படுத்துவது.

## இந்திய அரசின் உண்மையான வரிவசூல் முகாந்திரம் முழுவதும் நம்பகத்தன்மை வாய்ந்த வழிகாட்டுதல், கட்டமைப்புகள்:

## உபயோகப்படுத்துப்படும் பொருட்கள்:

1. மின் அணு பொது செலவின வரிவசூல் ரொக்கப் பரிவர்த்தனை தனி நபர் பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை.
2. மின் அணு பொதுசெலவின வரிவசூல் பல்தொழில் விளைபொருட்கள்/ உற்பத்தி சேவை, வருவாய் ஈட்டு நுகர்வு தனிநபர் பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை.
3. மின் அணு பொதுசெலவின வரிவசூல் மதிப்புக்கூட்டு உற்பத்தி சேவை வருவாய் ஈட்டு நுகர்வு, தனிநபர் பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை.
4. மின் அணு பொதுசெலவின வரிவசூல் அனைத்துப் பொருட்கள்/ வணிக சேவைகள் ஈட்டு நுகர்வு தனி நபர் பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை.
4. தானியங்கி மின்னணு ஸ்வைப் கையடக்க கருவி.
5. தானியங்கி மின்னணு இதர கருவிகள்.

தற்போது நாட்டில் அரசின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த வேண்டி பல்வேறு வரி வசூல் இனங்களை கையாண்டு மனித / இயந்திர / கருவிகளின் உழைப்புகள் எல்லாம் முழுமையாக செயல்படுத்தி செய்து பார்த்தும் அரை நூற்றாண்டுகள் கடந்த பின்பும் கூட மக்களின் வாழ்வாதாரங்கள் இன்றைய நாள்வரை பற்றாக்குறையாகவே உள்ளது.

இந்த சூழ்நிலை மாறுவது போலவும் தெரியவில்லை. மாற்றும் முயற்சிகளும் பலனளிக்கவில்லை. மாற்று முனைப்பும் காணப்படவில்லை.

இந்தக் இக்கட்டான காலக்கட்ட சூழ்நிலையில் மேற்கண்ட பூதகரமான பிரச்சனைகளின் நிரந்தர விடிவுக்காக வடிவமைக்கப்பட்ட கோட்பாடுகள்தான் ‘‘தனியொரு விதி செய்வோம்’’ என்ற தலையாய பொருளாதார மேம்பாட்டு வாழ்வியல் விதி முறையாகும்.

## வழிகாட்டு நெறிமுறைகளின் நடவடிக்கைகள்:

1. முதலில் அனைத்து மக்களிடமும் தற்போது புழக்கத்தில் வைத்துள்ள ரூபாய் நாணயங்கள் முழுமையும் விரைவாக கையகப்படுத்த வேண்டி, மத்திய அரசு ஓர் பொது நல சிறப்பு வாய்ந்ததோர் அறிவிப்பு வெளியிட வேண்டும்.

ஓர் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, மக்களிடம் இருப்பில் புழக்கத்தில் இருக்கும் அனைத்துவித ரூபாய் நாணயங்களும் எந்தவிதத்திலும் பண்ட மாற்றுப் பரிவர்த்தனைகளுக்கு அனுமதியே இல்லை என்ற சிறப்பு வாய்ந்த அறிவிப்புத்தான் அது.

இந்த இடைப்பட்ட காலத்திற்கு உள்ளாகவே அரசாங்கமே அதன் முழுப் பொறுப்பில் அவரவர் வசம் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் தொகைக்கு நிகராக அவரவர் பெயரில் வங்கிக் கணக்குத் தொடங்கப்பட்டு மொத்த தொகையின் இருப்பு நிலவரம் பதிவு செய்து, மின்னணு ரொக்கப் பரிவர்த்தனை அட்டை கொடுக்கப்பட வேண்டும்.

இந்தக் கோட்பாடுகளை ஆக்கப்பூர்வமாக நடைமுறைப்படுத்தி செயல்பட்டால் நம்பகத் தன்மையாகக் கிடைக்கப் பெறும் பலன்கள்.

2. மறுக்கப்பட்டு வந்த பரிவர்த்தனை கணக்கீடுகள் அனைத்தும் அரசுக்கு வீண் சிரமம் இன்றி தெளிவாக வெளிப்படையாக அறியமுடியும்.

3. இந்த கோட்பாட்டின் வழிமுறையில் உபயோகப்படுத்தப்படும் உபகரணங்களுக்கு ரூபாய் நாணயங்களை போல் அல்லாமல் ஆயுள் காலம் அதிகம் தொடர் தயாரிப்பு செலவு குறைவு.

4. சட்ட விரோத தயாரிப்புகள் அறவே இருக்காது.

5. சில்லறைத் தட்டுப்பாடு, தேவை, வாக்குவாதம் போன்ற சர்ச்சைகளுக்கு இடமில்லை.

6. பரிவர்த்தனைகள் அனைத்தும் மிகத் துல்லியமாகவும், நம்பகத் தன்மையுடனும் விரைவாகவும், சுமுகமாகவும் நடைபெற்று தகவல் வெளிப்படைத்தன்மையோடு முழுமையாகக் கிடைக்கப் பெறும்.

7. அரசின் வழிகாட்டு நிர்ணய விலைக்கு மேல் எவ்விதத்திலும் பொருளாதாயப் பரிவர்த்தனை செய்ய முடியாது.

8. இனாம், கையூட்டு, கமிஷன், லஞ்சம், சூது விளையாட்டு, அதிகாரப்பூர்வமற்ற பணசேமிப்புகள் மற்றும் பண சுழற்சிகள் போன்ற பணபரிவர்த்தனைகள் எதுவும் நடைபெற்று வருவாய் ஏய்ப்பு சமூக விரோதக் குற்றச் செயல்கள் நடைபெறுவது அடியோடு தடைபடும்.

9. இக்கோட்பாடுகளின் வரையறைக்குள், எந்த ஓர் தனி நபரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தவித பரிவர்த்தனைகளையும் செய்வதற்கு அடிப்படையே இல்லை.

10. நம்பகத் தன்மை, நாணயம், நேர்மை, நீடித்த உழைப்பு, நிலையான விலைவாசி நுகர்வு, அரசின் நிலையான வரிவசூல் உறுதியான அதிகரிப்பு போன்ற அனைத்து பயன்களும், அனைத்து தரப்பு மக்களுக்கும், அரசுக்கும் கிடைக்கப் பெறுவது தெளிவான உண்மையாகும்.

# நாட்டில் விலைவாசிகளின் நிலவரம்

**சிந்தனைகள் – மாற்றங்களை கொடுக்க வல்லது.**

**மாற்றங்கள் எல்லையற்றது – தெய்வீகமானது**

**தெய்வீகம் எல்லையற்றது – பரிணாம மாற்ற வளர்ச்சியே முடிவானது சுழற்சிக்குட்பட்டது.**

தனியொரு விதி செய்வோம் கோட்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்ட உடன் செயல்பாட்டிற்கு வந்த ஒரு வருடத்திற்கு பிறகு அரசுக்கு கிடைக்கப் பெறும் மின்னணு பொது செலவின வரி வசூல் நிலைப்பாட்டை, இறுதியாக பின்வரும் பகுதிகளில் காண்போம்.

2008ஆம் ஆண்டின் விலைவாசி நிலவரப்படி நாட்டில் வாழும் பெரும்பான்மை ஏழை மக்களின் அன்றாட செலவின வாங்கும் திறன் ரூ.60/– முதல் இருந்துள்ளது.

122 கோடி மக்களில் 75 சதம் ஏழைகள் என்றால் = 90 கோடிக்கு மேல் மக்கள் வருகிறார்கள் (ஏறத்தாழ 90–100 கோடி பேர்) மக்களின் அன்றாட வாழ்வாதார பொருள்களின் விலைவாசி 119சதம் வரை உயர்ந்துள்ளதாக கனரக வாகன எரிபொருளான டீசலின் அவ்வப்போதைய விலை ஏற்றத்தை, நமது அரசியல் தலைவர்கள். அவ்வப்போது ஒப்பிட்டு சுட்டிக்காட்டி வந்துள்ளனர். ஆக 90 கோடி மக்களின் 2008–ஆம் ஆண்டின் அன்றைய விலைவாசி அடிப்படையில் கணக்கிடும் போது அன்றாடம் சராசரியாக செலவின வாங்கும் திறன் ரூ.600/– வரை எட்டி உள்ளது உண்மை ஆகிறது. இதற்கு உதாரணமாக கட்டுமானப் பிரிவில் பணிபுரியும் அன்றைய ஒரு மேஸ்திரியின் கூலி ரூ.600/–க்கு குறைவில்லாமல் கொடுக்கப்படுவது உண்மையென்று அனைவருக்கும் தெரியும். இதன் மூலம் நாம் அறிவது 2008 ஆம் ஆண்டு செலவின வாங்கும் திறன் ரூ.60/– ஆக இருந்தது பல மடங்கு உயர்ந்துள்ளது நிரூபனமாகிறது. தற்போது (2013–ல்) உள்ள விலைவாசியின் அடிப்படையில் பார்த்தோமானால் 200–300 மடங்கு வரை பொருட்களின் விலை, மற்றும் சேவைகளின் கூலிகள் மேலும் கணிசமான அளவு உயர்ந்துள்ளது அனைவருக்கும் நன்கு தெரிந்த விஷயமே ஆகும்.

## இந்தியப்பொருளாதாரம் – தன்னிறைவை அடைதல் – தேவையான நிதி ஆதார கட்டமைப்பு – சேவைகளின் பங்களிப்புக்கள்

| மேலாண்மை | பொருட்கள் | சேவைகள் | ஆதாயம் அடைபவர்கள் |
|---|---|---|---|
| உணவு | வேளாண் தானிய, உணவு வகைகள், காய், கீரை, பழ வகைகள் மதிப்பு கூட்டு வேளாண் உணவு தானிய வகைகள் , மதிப்பு கூட்டு உணவு பண்டங்கள் | தானிய வகைகள் உற் பத்தி மதிப்பு கூட்டுப் பொருட்கள் உற்பத்தி காய்கறி, கனி வகைகள் உற்பத்தி, இயற்கை, செயற்கை உரங்கள், உற்பத்தி நிறுவனங்கள், நிலையங்கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல்லு னர்கள் இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| உடை | பருத்தி, கச்சா, பட்டு, இதர நூல் வகைகள், துணிகள் ஆடைகள், உப இரசாயன பொருள்கள் | பருத்தி நூற்பாலை, பட்டு நூற்பாலை, இர சயான வர்ணக் கல வை கள், இதர உப பொருள் தயாரிப்பு துணிகள் தயா ரிப்பு ஆடை வடிவமைப்பு நிறுவனங்கள், பின்னலா டைகள் நிலையங்கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லு னர்கள் இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| வசிப்பிடம் | விளை கனிமப் பொருட் கள், மதிப்புக் கூட்டிய கனி மப் பொருட்கள், கட்டு மானப் பொருட்கள், மதிப்பு கூட்டியவை இரசாயன வண்ணக் கலவைகள், இதர ரசாயன பொருட்கள் | பொருட்பகுதியில் கூறப் பட்டு உள்ள அனைத் தும் பயன்பாட்டிற்கு சேவைகள் மூலமாக பங் களிக்கப்படுகிறது. நிலையங்கள் நிறுவனங் கள். | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லு னர்கள் இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| மருத்துவம் | கல்வி நிலையங்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் | மருத்துவ கல்வியாளர் கள், ஆசிரியர்கள், கல்வி நிலைய ஊழியர் கள், ஆராய்ச்சியாளர்கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லு னர்கள் இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| கல்வி | கல்வி, உபகரணங்கள், கல்விக் கூடங்கள், சாலை கள், கல்லூரிகள் | அடிப்படைக் கல்வி, ஆரம்பக் கல்வி, இடை நிலைக் கல்வி, உயர் நிலைக் கல்வி, கல்லூ ரிக் கல்வி நிலையங்கள் நிறுவனங்கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லு னர்கள் இடைத்தரகர் கள், வணிகர்கள் |

| மேலாண்மை | பொருட்கள் | சேவைகள் | ஆதாயம் அடைபவர்கள் |
|---|---|---|---|
| பொழுது போக்கு | பயிற்சி பட்டறைகள், அரங்குகள், உபகரணங் கள், சாதனங்கள் | இயல், இசை, நாடகம், சினிமா நிலையங்கள் நிறுவனங்கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லு நர்கள், இடைத்தரகர் கள், வணிகர்கள், கலைஞர்கள், தயாரிப் பாளர்கள் |
| போக்குவரத்து | சாலைகள், வாகனங்கள், எரிபொருள், பராமரிப்பு, மற் றும் பழுது நீக்குதல் தேவை யான உபகரணங்கள் | சிறு, மித, கனரக வாக னப் பயணிகள் போக்கு வரத்து, பொருட்கள் போக்குவரத்து, தொடர் வண்டி போக்குவரத்து, கடல்வழி போக்கு வரத்து, ஆகாய வழி போக்குவரத்து. | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள், வல் லுனர்கள் இடைத் தர கர்கள், தயாரிப்பாளர் கள், வணிகர்கள் |
| சுகாதாரம் | உபகரணங்கள் தேவை யான சாதனங்கள் | சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு கழிவு கள் நீக்குதல், நோய் தடுப்பு நிலையங்கள் நிறுவனங்கள் | அடிப்படைக் கூலிகள், குடிநீர் மேலாண்மை, நிலத்தடி நீர் மேலா ண்மை, துப்புரவு மேலா ண்மை, கழிவு நீக்கு தல், நோய்தடுப்பு மேலாண்மை, மாசு கட் டுப்பாடு மேலாண்மை, பணியாளர்கள் வல்லு நர்கள், இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| பாதுகாப்பு | பாதுகாப்பு தளவாடங்கள், தற்காப்பு கருவிகள் சாத னங்கள், வாகனங்கள், நீதி மன்றங்கள், காவல்நிலை யங்கள், பஞ்சாயத்துக்கள் | பாதுகாப்பு, தற்காப்பு, சட் டம் ஒழுங்கு பராமரிப்பு தீவிரவாத தடுப்பு, தீ தடுப்பு பேரிடர் பணிகள் நிலையங்கள் நிறுவனங் கள் | அடிப்படைக் கூலிகள், பணியாளர்கள் வல்லு நர்கள், இடைத்தரகர் கள், வணிகர்கள் |
| ஆன்மீகம் | பயிற்சிக் கூடங்கள், உபகர ணங்கள், சாதனங்கள், வழிபாட்டு ஆலயங்கள் | சேவைகள் பயிற்சி முறைகள் தனி மனித ஒழுக்கப் பயிற்சிகள், வாழ்வியல் இரகசியப் பயிற்சிகள் இதர சமு தாய சேவைகள், விழாக் கள் நிகழ்வுகள் நிலை யங்கள் நிறுவனங்கள் | ஆதாயங்கள், அடிப் படை கூலிகள், பணி யாளர்கள், வல்லுநர் கள், இடைத்தரகர்கள், வணிகர்கள் |

மேற்கண்ட இந்த சேவை மற்றும் வணிக வகைகளில் வருவாய் ஈட்டுவோர்கள் நாட்டில் வாழ்கின்ற 150 கோடி ஜீவன்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்காக தங்களை ஈடுபடுத்தி, பொருளாதாயம் தேடும் பெரும்பான்மையான மக்கள் மேற்கண்ட இனங்களுக்குள்ளேயே தங்களின் பிழைப்பாதாயத்தைத் தேடிக் கொண்டே வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் தங்களின் பங்களிப்பின் மூலம் ஈட்டப்படும் பொருளாதாயத்தை, உண்மையாகவும், நேர்மையாகவும், அரசுக்கு வருவாய்க் கணக்கீடுகளைத் தெரிவித்து, அதற்குண்டான அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வசூல் வகைகளை செலுத்தாமல் மறைப்பதன் விளைவால் அரசின் கவனத்தை இவர்கள் பக்கம் திருப்பி, இவர்களை மேற்கொண்டு ஒழுங்குமுறைப் படுத்தப்படாமல் அப்படியே விடப்பட்டு உள்ளனர். இதன் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு, பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய வாழ்வாதார அடிப்படை உரிமைகள் முழுமையாக அடைய முடியாமல் உள்ளது.

ஆகையால், இவர்கள் அனைவரையும் **"தனி ஒரு விதி செய்வோம்"** கோட்பாட்டு கட்டமைப்பிற்குள் நெறிமுறைப்படுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டால் நாட்டின் உற்பத்தி அபரிமிதமாக உயர்ந்து வருவதும், அரசின் வருவாய் கூடுதலாவதையும் கண்கூடாக காணலாம்.

## சேவை விலைப்பட்டியல் கணக்கிடுதல்:

தனியொரு விதிசெய்வோம் எனும் கோட்பாட்டின் வழிகாட்டுதல் நெறிமுறைகளில் பொருட்கள் / சேவைகள் விலைப்பட்டியலின், மதிப்பீடு கணக்கிடுதல், மாதிரி வரைவுத் தொகுப்பு.

உடல் உழைப்புப் பங்கு
கருவிகள் முதலீட்டு ஆதாயப் பங்கு
கருவிகள் தேய்மான நிவாரணப் பங்கு
பராமரிப்பு பங்கு
பாதுகாத்தல் பங்கு
விநியோகித்தல் பங்கு
போக்குவரத்துப் பங்கு
இதர நானாவிதப் பணிப்பங்கு

மேற்கண்ட இந்த பங்கு இனங்களுடன் தொழில் முதலீட்டு ஆதாயப் பங்கையும் கூடுதலாகச் சேர்த்து வரும் தொகையைக் கணக்கிட்டு ஒட்டுமொத்தமாக நிர்ணயிக்கப்படும் தொகையே சேவை விலைப்பட்டியலின் அடக்கத் தொகையாகும்.

## பொருள்கள் விலைப்பட்டியல் கணக்கிடுதல்:

சேவை விலைப்பட்டியலில் கூறப்பட்டுள்ள கணக்கீடுகளின்படி கிடைக்கப் பெற்றத் தொகைதான் பொருள்களின் அடக்கவிலையாகும். இதற்கு மேல் 10 சதவீத இந்தியர் பொது செலவின வரியை கூடுதலாகக் கணக்கிடப்பட்டு வரும் தொகையே பொருட்களின் விற்பனை விலை ஆகும். ஆக நாட்டில் எந்தப்பகுதியிலும் எல்லா இடங்களிலும் பொருட்களின் விலை சீராக ஒரே விலையாக இருக்கும், போக்குவரத்து சேவைக்கூலிகள் மட்டுமே மாறுபட்டு பொருட்களின் விற்பனை புதிய விலையாக இருக்கும்.

## நாடு முழுமைக்கும் ஆன வாகன எரிபொருள் விலைப்பட்டியல் வரைவு மாதிரி கணக்கீடு:

(கொல்கத்தா டி.என்.என். செய்திப்பிரிவு ஜீன் 06ம் தேதி வருடம் 2010 காலை 05.25 ஐ.எஸ்.டி. நேர தகவல்படி) **இந்திய ரூபாய் மதிப்பீட்டில்**

| | |
|---|---|
| கச்சா எண்ணெய் விலை ஒரு லிட்டர் | ரூ.22.24 சரியாக |
| சுத்திகரிப்புப் பணிச்செலவு ஒரு லிட்டர் | ரூ.00.52 தோராயமாக |
| மொத்த உற்பத்தி விலை | ரூ.22.76 தோராயமாக |
| 10 சதவீத இந்தியர் பொது செலவின வரிவசூல் | ரூ.02.27 சரியாக |
| மொத்த அடக்கவிலை | ரூ.25.03 சரியாக |
| போக்குவரத்து சேவைக்கூலி / நானாவித சேவைக்கூலி வகைகள் தோராயமாக | ரூ.04.97 தோராயமாக |
| ஆக மொத்த விற்பனை விலை | ரூ.30.00 |

மேலும்கூடுதலாகவும் விற்கப்படுவது பொதுமக்கள் மீது திணிக்கப்படும் விலை உயர்வாகும். ஆனால் நாடு முழுக்க ரூ.30/– வரைதான் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் விற்கப்படும் விலையாக இருக்க வேண்டும் என்பதுதான் பொதுமக்கள் நலன் கருதும் ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். போக்குவரத்து சேவைக்கூலி செல்கின்ற தூரத்திற்கு ஏற்ப மாறுபட்டு விற்பனை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் – மேலாண்மை நிர்வாகம் ஒரு பார்வை:

தற்போது நடைமுறையில் மத்திய அரசு பின்பற்றி வரும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை "100 நாட்களுக்கு மட்டுமே" என்ற நிலைப்பாட்டை மாற்றி "வருடம் முழுமைக்கும்" என்ற நிலைப்பாட்டை எடுத்து வருடம் முழுமைக்கும், அதாவது "300 வேலைநாட்கள்" என்று முடிவு எடுத்து உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் பல கோடி மக்களுக்கு உறுதியான வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் அவர்களின் அடிப்படை வாழ்வாதாரம் நம்பகத் தன்மையுடன் மேம்படுத்தும் நோக்கம் நிறைவு பெறும். இதன் பலன் நாட்டின் பொருளாதாரம் முன் எப்பொழுதும் இல்லாதிருந்த அளவிற்கு மேல் செல்வது உறுதியாகும். அதாவது ஒரே செயலில் "மும்முனை ஆதாயம்" அரசுக்கும் அரசின் நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் கிடைக்கப்பெறும் பெருமை ஆகும்.

**தற்போதை நிலவரம்:–**

1. 100 நாட்களுக்கு மட்டும் வேலை உறுதி.

2. தற்போது தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் அன்றாட சராசரி கூலி ரூ.142/–ஆக உள்ளது.

3. ஒரு மாதத்திற்கு (25 வேலைநாட்கள்) என்று கணக்கிட்டால் ரூ.3692/– வருகிறது. ஒரு வருடத்திற்கு (300 வேலை நாட்கள்) என்று கணக்கிட்டால் ரூ.44,300/– வருகிறது.

இந்தத் தொகையானது இந்த மக்களை இன்றளவும் வறுமைக் கோட்டிற்குள் வைத்து இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதை மேம்படுத்த என்ன செய்ய வேண்டும் என்றால், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை கீழ்க்கண்டவாறு வகைகளாகப் பிரித்தாளப்பட வேண்டும்.

1. பொருட்கள் அடிப்படை உற்பத்தி சார்ந்த வகை உடல் உழைப்பு.

2. பொருட்கள் மதிப்புக்கூட்டு வகை உற்பத்தி சார்ந்த வகை உடல் உழைப்பு.

3. பொருட்கள் விற்பனை வணிக சேவைகள் சார்ந்த வகை உடல் உழைப்பு

(அ) மூலப் பொருள்களை அடிப்படையாக வைத்து உடல் உழைப்பு செய்து விளை பொருட்களாக உற்பத்தி செய்வதாகும். உதாரணம். விவசாயம், நெசவு, கட்டுமானம்.

(ஆ) மூலப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட விளை பொருட்களை மதிப்பு கூட்டிய பொருட்களாக தரம் உயர்த்தி உற்பத்தி செய்வது.

(இ) மேற்கொண்டு உற்பத்தி செய்த பொருட்களை தரச்சான்று பதிவேற்றி இருப்பதை உறுதி செய்வது பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் விற்பனை வணிக நோக்கு சேவைகள் உழைப்பாகும்.

(ஈ) தரச்சான்றுகள் அளிக்கப்பெற்ற அனைத்து பொருட்களையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் விற்பனை வணிக நோக்கு சேவைகள் உழைப்பாகும்.

ஆக நம்நாட்டில் வாழ்ந்து வரும் பெரும்பான்மை மக்கள் இந்த மூன்று பிரிவிற்குள் அடங்குவார்கள் என்று நம்புகிறேன். நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பப் பணிகளுடன், இதர அடிப்படைத் தொழில் முறைகளையும் நம்பகத் தன்மைக்கு உண்டான அடிப்படைக் கூட்டமைப்புகளை மேம்படுத்திவிட்டால் உற்பத்தி அபரிதமாவது உறுதி, பொருளாதாரம் மேம்படுவது உறுதி, வாழ்வாதாரம் மேம்படுவது உறுதி ஆகிவிடும். இதற்கு மேல் என்ன தேவை நம்நாடு வளர்ச்சியடைந்த வல்லரசு நாடு ஆவதற்கு? ‘‘தனியொரு விதி செய்வோம்’’ கோட்பாடுகள் ஆரம்பித்த ஓர் வருடத்தில் நாட்டில் ஏழ்மை முற்றிலும் ஒழிக்கப்பட்டிருக்கும் ஊழல் வேரோடு அழிக்கப்பட்டிருக்கும். தீவிரவாதம் தலைதூக்காமல் நசுக்கப்பட்டு மறைந்து இருக்கும்.

**இனிவரும் காலங்களில்:**

300 நாட்களுக்கு வேலை உறுதி

அன்றாட சராசரி கூலி ரூ.200/– முதல்

ஒரு மாதத்திற்கு ரூ.5000/–

ஒரு வருடத்திற்கு ரூ.60,000/–

மேற்சொன்ன தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் தற்போதைய அன்றாட சராசரி கூலியினை உயர்த்தி துவக்கத்தில் ரூ.200/–ல் இருந்து ஆரம்பித்து ஒவ்வொரு ஆண்டும் சிறிது சிறிதாக உயர்த்தி வழங்கப்பட்டுக் கொண்டு செல்வதை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் மக்கள் வெகுவாக பலனடைந்து, நம்பகத்தன்மை அதிகரித்து வீணாக நகர்புறத்தை நாடி இடம் பெயர்வது முற்றிலும் தடுக்கப்பட்டு கிராமங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கி வெகுவிரைவில் முன்னேறி வருவதன் மூலம் ‘‘காந்தி மகான்’’ கண்ட கனவு மெய்ப்படுவது உறுதி செய்யப்படும்.

மேலும் இந்த புதிய அணுகுமுறையில் கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் இணைக்கப்பட்டு வாழ்வாதாரம் மேம்படுவது உறுதி ஆகும்.

## பொருட்கள் – பழுது – காலாவதி – திரும்பப் பெறுதல்

## மேலாண்மை நிர்வாகம்:

நாட்டில் உற்பத்தி / தயாரிக்கப்படும் அனைத்துப் பொருட்களும் குறிப்பாக மின், / மின் அணு பொருட்களின் காலாவதியாகும் காலத்தை ஒரு வருடமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். காலாவதியானதும் திரும்பப் பெறப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் மாற்றாக புதிய பொருட்களை கொடுக்கப்படும்போது சிறிது கூடுதல் விலை பெற்று கொடுக்கப்பட வேண்டும். இதுபோன்று நிர்வாகம் செய்யப்படும் ஏற்பாட்டில் மக்களுக்கு அவ்வப்போது புதிய மேம்பட்ட தரத்துடன் ஆன பொருட்கள் ஒவ்வொரு வருடமும் கிடைத்துக் கொண்டு இருக்கும். இதன் பயனாக கோடிக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அபரிதமாக உருவாக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி மிகவும் அபரிதமாக வந்துவிடும். பொருளாதாரம் நம்பகமாக உயர்ந்து வரும், வாழ்வாதாரம் தரத்துடன் மேம்பட்டு வரும்.

பொருட்கள் அனைத்தும் காலாவதி ஆனதும், அல்லது பழுது ஆனதும் உற்பத்தி செய்த தயாரிப்பாளர்களே அவர்கள் தம் முழுப் பொறுப்பில் திரும்ப பெற்றுக் கொள்ளும் ஓர் வழி காட்டுதல் நடைமுறையை கண்டிப்பாக பின்பற்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை அனுசரித்து செல்லும் வணிகர்கள் மட்டுமே அவர்களின் வணிகத்தை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும் முடியும். மற்றவர்களுக்கு அனுமதி கிடைப்பது சாத்தியமே இல்லாது போகும். அந்த சூழ்நிலையில் புதியதாக தொழில் முனைவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப அரசே தன் முழு பொறுப்பில் புதிய தொழில் முனைபவர்களை ஊக்கப்படுத்தி முன்னிலைப்படுத்த அனைத்துவித உதவிகளையும் செய்து கொடுக்க முன்வர வேண்டும். புதிய கண்டு பிடிப்பாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகக் கருதி மென்மேலும் தாங்கள் கண்டுபிடிக்கும் புதிய பொருட்களை உலகத்தரத்திற்கு நிகராக வெளிப்படுத்த முடியும். ஆக புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு மூலதனம் அவர்களுடைய புதிய சிந்தனைகள் மற்றும் செயல்திறன் நம்பிக்கை மட்டுமே, மற்றவை அனைத்தும் அரசே தன் முழு பொறுப்பில் செய்து கொடுக்க முன் வர வேண்டும் என்பது புதிய அணுகு முறையாகும்.

இன்னொரு புதிய அணுகு முறையை இங்கு பகிர்ந்து கொள்வோம். அதாவது முதலீடுகள் அனைத்தும், மற்றும் செய்யப்பட்டுள்ள முதலீடுகளின் மதிப்பீடுகள் அனைத்தும் ஒரு வரைமுறைப்படுத்தப்பட்ட அரசின் முழு பொறுப்பில் உள்ள மூலதன ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை நிர்வாக ஆணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு தொடர் கண்காணிப்பில் இருக்கும். நம் உள்நாட்டில் செய்யப்படும் அனைத்து உற்பத்தி வகைகள் அல்லது தயாரிப்பு வகைப் பொருட்கள் எந்தவித லாப நோக்க விலைப்பட்டியலுக்குள்ளும் இருக்காது. ஆனால் ஏற்றுமதி செய்ய வேண்டி செய்யப்படும் அனைத்து பொருட்களும் லாப நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்டு ஏற்றமதி தரச்சான்றிதழுடன் இருக்க வேண்டும் என்பது கூடுதல் சிறப்பாகும்.

## இன்றைய அரசியல் நிலவரம் – எதிர்கொள்ள வேண்டிய சவாலான அறிவிப்புக்கள்:

1. ஊழலுக்கு துணை போகும் வெளிப்படையற்ற ரொக்க கட்டணப் பரிவர்த்தனைகளை அடிப்படையில் இருந்து முற்றிலும் நீக்கிவிடுவோம்.

2. வெளிப்படையான நிர்வாக நடைமுறைகள் நம்பகத்தன்மை வாய்ந்த மின்னணு ஆளுமையின் கண்காணிப்பு நிர்வாகத்தின் கீழ் அனைத்து செலவினங்களுக்கும் மின்னணு பரிவர்த்தனை அட்டைகளை அறிமுகப்படுத்தி அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் பங்களிப்பின் ஆதாயத்தின் மீது – அனைத்து தொழில் மற்றும் வணிக சேவைகள் பங்களிப்பின் ஆதாயத்தின் மீது 10% ‘‘இந்தியர் பொது செலவின வரிவசூல்’’ நிர்வாக கட்டமைப்பை கொண்டு வருவோம்.

3. தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து வரி கட்டமைப்புகளையும் முழுமையாக ரத்து செய்துவிட்டு, மாற்றாக ஒரே சீரான வரிவகைக் கட்டமைப்பான ‘‘இந்தியர் பொது செலவின வரிவசூல்’’ என்ற கட்டமைப்பை அறிமுகப்படுத்தி நிர்வாகம் செய்வோம்.

4. நாட்டில வாழ்கின்ற சுய சார்பு வருவாய் இனத்தில் ஈடுபட்டுள்ள அடித்தட்டு பாமர அனைத்து மக்களையும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிதிட்டத்தின் கீழ் அங்கத்தினர்களாக ஆக்கப்பட்டு அன்றாட வாழ்வாதார பாதுகாப்பு நிதியாக ரூ.200/– முதல் வழங்கி வருவோம், ஒவ்வொரு வருடமும் கூடுதலாக வழங்கி கொண்டே வருவோம்.

5. நாங்கள் தொடர்ந்து ஆட்சிப்பொறுப்பேற்று வந்தபிறகு, வரும் மறு வருட துவக்கத்தில் இருந்து நாட்டில் வாழுகின்ற சுயசார்பு வருவாய் இனத்தில் ஈடுபட்டுள்ள அடித்தட்டு பாமர அனைத்து மக்களையும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் அங்கத்தினர்களாக ஆக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் 20 கோடி மக்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு அன்றாட வாழ்வூதியம் ரூ.200/– முதல் வழங்குவோம், எங்களின் ஆட்சிகாலமான 5 ஆண்டு காலத்திற்குள் அனைத்து பாமர மக்களுக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, ‘‘வேலை வாய்ப்பு இல்லாமையை நாட்டில் இல்லாமை ஆக்குவோம்’’, ஊழலை ஒழித்துக் கட்டுவோம், பற்றாக்குறையை இல்லாமை ஆக்குவோம். பொருளாதாரத்தை மேம்படுத்தி காட்டுவோம்.

6. நாட்டில் நடைபெற்று வரும் அரசின் அனைத்து நிர்வாக நடைமுறைகளும் மக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் வீண் சிரமம் இன்றியும் மக்களுக்கு கிடைக்க வேண்டி மக்கள் வாழும் பகுதிகளிலேயே ஏற்கனவே தயார் செய்த (கன்டெய்னர்), மற்றும் மொபைல் வேன் போன்ற உடனடி அலுவலகங்கள் நிறுவப்பட்டு மின்னணு ஆளுமை மூலம் நிர்வாகம் செய்வோம் என்பதை உறுதிபட கூறுகிறோம்.

7. நாட்டில் பொதுமக்கள் நுகர்வு வணிகத்திற்கு கொண்டு வரப்படும் அனைத்து வித வாழ்வாதாரப் பொருட்கள் மற்றும் வணிக சேவைகள் அனைத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின் மூலம் கிடைப்பதை இனிவரும் காலத்தில் உறுதி செய்து நிலையான விலைவாசி

## நாட்டுக்கு தேவை – வலுவான சிந்தனையாளர்கள் – சிந்தனைகள்:

நல்ல நல்ல சிந்தனையை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
நல்ல நல்ல மனிதரை நம்பி
வருங்காலம் இருக்குது தம்பி
நாடு தவிக்குது ஊழலில் சிக்கி
விடுவித்து தரும் ஆளை நம்பி
தனியொரு விதி செய்தால் உண்டு
வழி நம்பினால் பிறக்கும் புதிய வழி
இதுவே எதிர்கால இந்தியாவின் தலைவிதி
அதுவே தனியொரு விதி என்ற
நல்லநல்ல சிந்தனையை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி

நாட்டு நடப்புகளில் இருந்து என்ன தெரிந்து கொள்ள முடிகிறது. அடித்தட்டில் இருப்பவர்களுக்கு அவர்கள் வாழும் காலம் வரை கரையேறுவதற்கும் அங்கீகாரம் கிடைப்பதற்கும் சுய முயற்ச்சிக்கு எந்தவித வரவேற்ப்பும் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதுதான் அந்த உன்மை. நாட்டில் தலைமை பொருப்பில் இருப்பவர்கள், முன்னிலையில் இருப்பவர்கள், முன்னிலைபடுத்தப்படுபவர்கள் மேலும் இவர்களின் உறவினர்கள் பங்களிப்பு உள்ளவர்களைத் தவிர வேறு சாதாரன மனிதர்களுக்கு இங்கே இடமில்லை என்பது தெளிவு, இவர்கள் அனைவரும் சந்தர்ப்ப சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இன்றுவரை பேசுவதும், சொல்வதும், செய்வதும், காட்டுவதும், வாசிப்பதும், விவாதிப்பதும், நடந்து கொள்வதும் போன்ற அனைத்து வித நடவடிக்கைகளும் காசுக்காகத்தானே தவிர வேறு எதற்க்காகவும் இல்லை என்பது உண்மை. இந்த சூழ்நிலைப்பாட்டில் இவர்கள் மூலம் மக்கள் அனைவருக்கும் நல்லது நடக்கும் என்பது பகல்கனவு மட்டுமே நிஜமாகும். இவர்களில் உன்மையிலேயே நல்ல நோக்கங்கள் இருப்பின் தாமதிக்காமல் ‘‘தனி ஒரு விதி செய்வோம்’’. வழிகாட்டுதல் கோட்டுப்பாட்டு நெறிமுறைகளை உடனடியாக நிறைவேற்ற முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அடித்தட்டு சாமான்யமக்களின் கனவு மெய்யாகும்.

## நாடு சந்தித்து கொண்டிருக்கும் தலையாய பிரச்சினைகள் கீழ்வருமாறு:

1. ஊழலை ஒழிப்பது

2. பற்றாக்குறையை சரிசெய்வது

3. பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பது

4. வேலைவாய்ப்பின்மையை சீர்செய்து அபரிதமான வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பது.

5. தனிமனித முன்னேற்ற மேம்பாட்டை உறுதி செய்வது.

6. உலக அரங்கில் நாட்டை முன்னிலைப்படுத்துவது.

மேற்கண்ட இந்த தலையாய பிரச்சினைகள் பொதுமக்களின் வாழ்வாதாரங்களோடு ஒன்றிணைக்கப்பட்டது. சரிசெய்யப்படாவிட்டால் எந்த அரசும் சுமூகமாக நீடித்து நிலைக்க முடியாது. தனித்து சுயமாக நிலைத்து இருக்கவேண்டுமானால் "தனியொரு விதி செய்வோம்" வழிகாட்டுதல் கோட்பாட்டு நிலைப்பாட்டை கையிலெடுத்து உடனடியாக முழுவதும் ஆய்வு செய்து சாத்தியபடுத்தலுக்கு வேண்டிய அடிப்படை கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொண்டுவந்தால், அவர்களுக்கு மட்டுமே நிலையான வெற்றி நிச்சயம் என்பதை உறுதியாக கூற முடியும்.

## தேசிய கட்டமைப்பு திட்டங்கள்:

## நடைமுறை செயல்திட்ட மேலாண்மை:

1. தேசிய உணவுகள் வேளாண் பொருட்கள் – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

2. தேசிய ஆடைகள் பருத்திப்பட்டு நூல் – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

3. தேசிய குடியிருப்புக்கள் / இருப்பிடம் கட்டிடங்கள் கட்டுமான – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

4. தேசிய மருந்து பொருட்கள் – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

5. தேசிய கல்வி ஆராய்ச்சிகள் / விளையாட்டு மேம்பாட்டு – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

6. தேசிய மாசுக்கட்டுப்பாடு – பொது சுகாதார உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு மேம்பாட்டு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

7. தேசிய வாழ்வாதார பொருட்கள் – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

8. தேசிய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் அறியும் தொடர்பு – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

9. தேசிய மின்சக்தி / மின்னணு சக்தி – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

10. தேசிய ஊட்டச்சத்து – உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

11. தேசிய காலாவதி பொருட்கள் திரும்பப் பெறுதல் – கொள்முதல் – அழிப்பு – சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

12. தேசிய வரிகள் சீரமைப்பு அறிவிப்பு செயலாக்கம் சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

13. தேசிய குடிநீர் உற்பத்தி கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

14. தேசிய கழிவுநீர் வெளியேற்றல் கொள்முதல் – மறுசுழற்சி – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

15. தேசிய ஏற்றுமதி பொருட்கள் உற்பத்தி – கொள்முதல் – ஏற்றுமதி – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

16. தேசிய கடல்நீர் சுத்திகரிப்பு – மறுசுழற்சி – உயிரிநீர் உற்பத்தி – கொள்முதல் – விநியோகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

17. தேசிய பல்பொருட்கள் அங்காடிகள் – நிறுவுதல் – வணிகம் – பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

18. தேசிய வாடகை, குத்தகை, வட்டி, பங்களிப்பு ஆதாய கொள்முதல் ஒழுங்குமுறை சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

19. தேசிய பாதுகாப்பு, பேரிடர், மீட்பு, தடுப்பு – நிறுவுதல் – மேம்படுத்துதல் – பராமரித்தல் சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

20. தேசிய சட்டம் ஒழுங்கு பராமரிப்பு குற்றச்செயல் தடுப்பு ஒழுங்குமுறை நிறுவுதல் பராமரித்தல் சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

21. தேசிய பசுமை குடில் சூரிய ஒளி மின் உற்பத்தி கொள்முதல் விநியோகம் பராமரிப்பு சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை ஆணையம்.

# தனி ஒரு விதி செய்வோம்
## ஏன் இந்த வழிகாட்டுதல்?
## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை:

### சிறப்பு பார்வை:

அறிவுசார் மக்களே நாட்டில் வாழும் சுயசார்பு மக்கள் அனைவரையும் ஒரு உன்னதமான கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டியது மிகவும் அவசியமான காலத்தின் கட்டாயமான ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்வாகும்.

நாடு சுதந்திரம் கண்டு இன்றுவரை அடையாளம் காணப்படாமல் தன்னிச்சையாக வாழ்ந்து வரும் அடித்தட்டு பாமர மக்களை ஒரு ஒழுக்க நெறிக்குள் கொண்டு வந்துவிட்டால் சாதிப்பின் பிரம்மாண்டத்திற்குள் நாம் எப்போதோ கால் பதித்து நம் சுயத்தை வெற்றிகரமாக உலகுக்கு தெரியப்படுத்தி இருப்போம். பொதுமக்களும் செய்வதறியாது இனம் காணப்படாமல் நிர்கதியாக கைவிடப்பட்டுவிட்டனர். அரசின் அறிவுசார் நிர்வாகங்களும் இந்த சமூக முன்னேற்ற நெறிமுறைகளை இனப்படுத்தி காட்டாமல் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டனர்.

இதன் விளைவுகளின் வெளிப்பாடுகள்தான் சுயநலம், சமூகசீர்கேடு பரவல், பேராசை, மாயைக்குள் சிக்கிவிடுதல், மூளைச்சலவைக்குள் சிக்குதல், தனிமனித துதிபாடும் வழிபாடுதல், இயலாமை, பதற்றம், கவலை, வன்கொடுமை, தன்னிலை இழப்பு, பொருள் இழப்பு, பூ உலக இழப்பு போன்ற சமூக சீர்கேடுகளுக்குள் சிக்கிக் கொண்டு மக்கள் செய்வதறியாது பல இன்னல்களுக்கு நிர்பந்திக்கப்பட்டும் கொடுமைகளுக்கும் ஆளாகி வாழ்ந்து வருகின்றனர்.

ஏன் இந்த நிர்கதியில் சிக்கி வாழும் மக்களை நெறிப்படுத்துவதற்கு முன் வரக் கூடாது? ஏன் இந்த பாமர மக்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள அருகதையற்றவர்களா? அவர்களும் இந்த உலகத்தின் மக்களே ஆவார்கள். உலக நாடுகளில் எல்லாம் ஏதேதோ பல அற்புதங்களை தங்கள் மக்களுக்கு நிகழ்த்தி காட்டி வருகின்றனர். நாம் ஏன் இதை செய்யக்கூடாதா? நாம்தான் மக்கள். மக்கள்தான் நாம். நன்றி மறவோம். அடித்தட்டு பாமர மக்களை மேம்படுத்தி முன் நிறுத்துவோம்.

நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களில் பெரும்பான்மை நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் இன்னும் தங்களின் விடியலை நோக்கி காலம்கழித்து வாழ்ந்து கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு ஒரு விடியல் கிடைத்துவிட்டால் அதுவே நம் நாட்டிற்கு கிடைத்துவிட்ட ஒரு மாபெரும் புரட்சிகரமான மேன்மையாக அமைந்துவிடும்.

**தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் மக்களை கீழ்க்காணும் இனத்தில் அடையாளம் காணப்பட வேண்டும்.**

1. விளைபொருட்கள் உற்பத்தி வகை உடல் உழைப்பு ஆண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

2. விளைபொருட்கள் உற்பத்தி வகை உடல் உழைப்பு பெண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

3. மதிப்புக்கூட்டு உற்பத்தி வகை சார்ந்த உடல் உழைப்பு ஆண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

4. மதிப்புக்கூட்டு உற்பத்தி வகை சார்ந்த உடல் உழைப்பு பெண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

5. விளைபொருட்கள் வணிக சேவை வகை உடல் உழைப்பு ஆண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

6. விளைபொருட்கள் வணிக சேவை வகை உடல் உழைப்பு பெண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

7. மதிப்புக்கூட்டிய பொருட்கள் வணிக சேவை வகை உடல் உழைப்பு ஆண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

8. மதிப்புக்கூட்டிய பொருட்கள் வணிக சேவை வகை உடல் உழைப்பு பெண்கள் (இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை)

# தனி ஒரு விதி செய்வோம்

# ஏன் இந்த வழிகாட்டுதல்?

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை

## சிறப்பு பார்வை:

## மின்னணு ஆளுமை, மின்னணு பரிவர்த்தன அட்டை:

அறிவுசார் இந்திய மக்களே நமக்கு கிடைத்த சுதந்திரம் வெறும் உணர்வுபூர்வமான ஒன்றாகும். உலக அரங்கில் சுதந்திரம் அடைந்த பல நாடுகள் நம்மை விட பல மடங்கு வாழ்வாதாரத்திலும் அடிப்படை வாழும் வழிமுறைகளிலும் பல முன்னேற்றங்களை அறிவுபூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் சிந்தித்து சாதனை செய்து காலத்தை சிறிது சிறிதாக வென்று கொண்டு இருக்கின்றனர். ஆனால் நாமாகிய இந்திய மக்கள் நம் சொந்த மண்ணில் இன்னும் திக்கு தெரியாத காட்டில் வாழ்வதைப் போன்று கண்கள் இருந்தும் குருட்டு உலகில் வாழ்வதைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஏன் நமக்கு நல்ல விடிவுகாலம் எதுவும் வராதா, கிடைக்காதா? வரும் வருவதற்காக காத்திருக்கின்றது. யார் முன் மொழிவது? எப்போதும் ஒரு தனி மனித துதிப்பாடியே பழக்கப்பட்ட நம் மக்களுக்கு சுய தொலைநோக்கு சிந்தனைகள் எதுவும் இல்லை. அறிவுசார் செய்திகளைக் கூறுவதை விட செயலில் நடத்திக் காட்ட வேண்டும். தனி மனிதனால் முடியாது. கை கோர்த்தால்தான் முடியும். ஒரே இரவில் சாதிக்க வேண்டிய செய்திகள் அல்ல. முதலில் வரவேற்று பழக்கப்படுத்திக் கொள்வோம். சாதாரண பாமர மக்களின் கைகளில் இன்று கைப்பேசி எந்த அளவிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பது புள்ளியல் தகவல்படி நாடறிந்த செய்தியாக இருக்கிறது.

இன்னும் சிறிது முன்னேறி மின்னணு ஆளுமை மற்றும் மின்னணு பரிவர்த்தனை அட்டைகள் பயன்பாட்டினை பழக்கப்படுத்தி கொண்டு வந்துவிட்டால் நாம் நினைத்ததை எல்லாம் விரல் நுனியில் உலகை வலம் வந்து சாதித்து காட்ட முடியும், காணவும் முடியும்.

## அனைத்து மக்களுக்குமான புரிந்துணர்வு

நாம் அனைவரும் ஒருங்கிணைந்து முதலில் ‘‘தனி ஒரு விதி செய்வோம்’’ என்ற கோட்பாட்டு வழிகாட்டுதல் இயக்கத்தில் சங்கமம் ஆவோம். இதில் எல்லோரும் சம நோக்கத்தில் இருப்பவர்களே ஆவார்கள். எவரும் எவருக்கும் தலைமை இல்லை. உண்மை, நம்பிக்கை மட்டுமே தலைமை ஆகும். நம்புங்கள் உண்மையாய் வெல்வோம்.

இன்று நாடு இருக்கும் சூழ்நிலையில் தற்போது ஆளும் அதிகாரத்தில் உள்ளவர்கள் எத்தனையோ நிகழ்வுகளை நடத்திக் காட்ட முடியும். ஆனால் செய்வதற்கு மனமில்லை. காரணம் பாமர மக்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள அனுமதிக்க கூடாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர். ஏனெனில், நீங்கள் உயர்ந்துவிட்டால் அவர்களை மதிக்கப் போவதில்லை என்ற இனம் புரியாத ‘‘மாயை’’ என்ற பயம் சூழ்ந்து கவ்விக் கொண்டு உங்கள் நல் வாழ்வை பற்றி சிறிது கூட சிந்தனை செய்யாமல் உங்களின் பொன்னான காலத்தை வீணாக காலம் கடத்தி வருகின்றனர்.

நாட்டில் நடக்கும் அத்தனை தீய சீர்க்கேட்டு நிகழ்வுகளுக்கு முற்றிலும் நம் அடிப்படை அரசியல் அமைப்பின் சாராம்சமே காரணம். இதன் விளைவாக எதிலும் வெளிப்படைத் தன்மை மறுக்கப்பட்டு ஊழல் மலிந்து சமூக சீர்கேடுகள் மட்டுமே எஞ் சியுள்ளது. ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வாழ்வாதார உரிமைகள் அனைத்தும் இன்று வரை முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டு அந்தக் கொள்கையின் செயல்பாட்டில் நிறைவு கண்டிருக்கிறார்களா? என்றால் இல்லை, இல்லைதான் ஒரே பதிலாக இருக்கிறது. செய்ய முடியும் ஆனால் செய்ய மாட்டார்கள். பல்வேறு சமூக விரோத செயல்களை மக்களின் மூளைகளைச் சலவை செய்து, அனைவருக்கும் வீண் சிரமத்தை ஏற்படுத்தி வெறும் சப்பைக்கட்டு சமாதானத்தை சொல்லிக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கின்றனர்.

நாம் சவால் விடுவோம். எந்த தகவலாவது இதுவரை முழுமையாக நம்பும் படி துல்லியமாக இன்று வரை பொது மக்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறதா? இல்லை. உதாரணமாக நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகை எத்தனை? என்பதை இன்று வரை வெளிப்படையாக புள்ளி விவரமாக தெரியப்படுத்த முடியாத ஒரு கையாளாகாத செயலையே இதற்கு உதாரணமாக கூற முடியும்.

## “தனி ஒரு விதி செய்வோம்” – ஏன் இந்த வழிகாட்டுதல்?
## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை – சிறப்பு பார்வை:

### வாழ்வாதார பொருட்கள் உற்பத்தி பங்களிப்பு மேலாண்மை:

மக்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்கான உணவுப் பொருட்களை அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பாதுகாப்பற்ற தரமற்ற விளை பொருட்கள் மற்றும் மதிப்பிக்கூட்டிய பொருட்களை வேறு வழியின்றி வாங்கி வந்து சமைத்தும், அப்படியேவும் சாப்பிடவும் செய்கின்றனர். இதன் விளைவாக மக்களுக்கு குறிப்பாக இந்திய மக்களுக்கு பெருமளவில் ஜீரண மண்டலம் பாதிக்கப்பட்டு சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய், ஆஸ்துமா, அலர்ஜி போன்ற கொடுமையான உடல் உபாதைகள் ஏற்பட்டு பெருகி இறுதியில் கேன்சர், கிட்னி பாதிப்பு, இருதய நோய் என்று முடிவில் பெரும் பொருட்செலவில் மருத்துவ சேவை செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு செய்வதறியாது வாழ்ந்து தன்னை இம்சைக்கு ஆட்படுத்தி தன்னை நம்பி வந்தவர்களையும் இம்சைக்கு உட்படுத்தி வாழ வழியில்லாமல் மடிந்தும் போகின்றனர்.

இந்த சீர்கேடான சூழ்நிலைப்பாட்டை மாற்றியமைக்கப்பட வேண்டிய சீரமைப்புக்குள் கீழ் வரும் பகுதியில் அறிந்து கொள்வோம்.

அதாவது, மக்கள் வாழும் பகுதிகளில் ஒரு மாபெரும் உடனடி (ரெடிமேடு) தேசிய பல்பொருட்கள் பேரங்காடிகள் நிறுவப்பட்டு அதில் மக்களின் அன்றாட வாழ்வாதார தேவைகளுக்கான அனைத்து விதப் பொருட்களும் கிடைக்கச் செய்ய வேண்டும். நம் சொந்த மக்களைக் கொண்ட இதுபோன்ற சிறப்பு வாய்ந்த பேரங்காடிகளை நிறுவி செயல்பட முடியும். இதன் மூலம் ஏராளமான நம் இளைய தலைமுறை மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அபரிதமாக உருவாக்கப்பட்டு நம்பக தன்மையாக அளிக்க முடியும். பல ஆயிரம் கோடி பெருமானம் உள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு தரம் மேம்படுத்தப்பட்டு முத்திரை சான்றிதழுடன் பொதுமக்கள் நுகர்வுக்கு வேண்டி பேரங்காடிகளுக்கு ஒழுங்கு முறை ஆணையம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு கொண்டு இருக்க முடியும்.

இதுபோன்ற அங்காடிகள் மக்கள் வாழும் பகுதிகளில் சுமார் 1500 முதல் 2000 மக்கள் வரை வாழும் பகுதிகளுக்கு ஒன்றாக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நிறுவப்பட்டு செயல்படுத்த முடியும். இதற்காக நாம் வீண் சிரமப்பட்டு அந்நிய முதலீடுகள் எதையும் கையேந்தி நிற்க வேண்டிய அவசியமில்லை. தேவையுமில்லை.

மக்கள் வீண் சிரமத்திற்கு உள்ளாக மாட்டார்கள். வீண் அலைச்சல் இருக்காது. எந்தவித பயமுமின்றி மிக அருகாமையில் இருந்து வாங்கி செல்ல முடியும். மக்கள் அவர்களிடம் உள்ள இந்திய பொது செலவின வரி வசூல் அட்டையை கொண்டு வந்து செய்யும் செலவினங்களுக்கான பொருட்களை நம்பகத்தன்மையுடன் வாங்கி செல்ல முடியும். வீண் சில்லரை தட்டுப்பாடுகள் போன்ற சர்ச்சைகளுக்கு எதுவும் இருக்க வாய்ப்பில்லை.

கைப்பை தவறிவிட்டது, பணம் திருடுப் போய்விட்டது, கவனக்குறைவாக வந்துவிட்டது, பற்றாக்குறை, கைமாற்று போன்ற மனஉளைச்சல்கள் எதுவும் இருக்காது. பொருட்களை பார்த்தோமா, வாங்கிச் சென்றோமோ என்று அன்றாட வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டு ஒரு மேம்பட்ட சூழ்நிலைக்கு சென்று விடுவது கண்கூடாகத் தெரிய வரும். மக்கள் இதுநாள் வரை நினைத்துக்கூட பார்த்திராத, சினிமாவில் மட்டுமே பார்த்து வந்த காட்சிகளைப் போன்ற மேம்பட்ட வாழ்க்கை முறைக்கு சிறிது சிறிதாக பழக்கப்பட்டு வந்துவிடுவார்கள்.

மேலும் நம் வருங்கால சந்ததியினர்கள் மிகவும் மேம்படுத்தப்பட்ட மேலாண்மைக்கு சென்று உலக அரங்கோடு போட்டி போடும் நிலைமைக்கு சர்வ சாதாரணமாக வந்து விடுவார்கள். ஆக நமக்கு இந்த சூழ்நிலையில் எதற்கு அந்நிய முதலீடுகள் தேவை? தேவையேயில்லை. எல்லாம் இங்கேயே இருக்கிறது. இங்கு இருப்பதைக்கொண்டு ஒழுங்கு படுத்தினாலே போதும். தேவைக்கு அதிகமாகவே கிடைத்திடும். நிச்சயம் சாதிப்போம். உறுதியாக வெல்வோம். நாம் அனைத்து பொருட்களையும் நம் நாட்டின் பெருமைப்பட முத்திரை சான்றளித்து ஏற்றுமதி செய்யும் காலம் மிக தொலைவில் இல்லை.

“தனி ஒரு விதி செய்வோம்” வழிகாட்டுதல் கட்டமைப்பு கோட்பாட்டு எல்லைக்குள் வந்துவிட்டால் அனைத்தும் கைக்கு அருகிலேயே கிடைத்துவிடும் என்பது எவராலும் மறுக்க முடியாது. தடுக்கவும் முடியாது என்பது வரலாறு காணப்போகும் ஒரு நிஜமான உண்மையாகும். கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு ஏன் அலைய வேண்டும்?

## "தனி ஒரு விதி செய்வோம்" – ஏன் இந்த வழிகாட்டுதல்?

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை – சிறப்பு பார்வை:

## போக்குவரத்து மேலாண்மை சீரமைப்பு:

நாட்டில் வாழ்கின்ற உயிர்வாழ் அனைத்து ஜீவன்களுக்கும் வாழ்வாதார தேவைகளுக்காக போக்குவரத்து அன்றாடம் இடம் விட்டு இடம் பெயரும் சூழ்நிலை ஒரு அத்தியாவசியமான மக்கள் சேவையாக வாழ்க்கையோடு ஒன்றி போய்விட்டது. அன்று கால்நடைப் பயணத்தில் ஆரம்பித்த நம் சமூக முதியோர்கள் காலம் மாற மாற கால சுழற்சிக்கேற்ப பல்வேறு வகைகளில் போக்குவரத்து சாதனைகளை படைத்து பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தி வந்தனர்.

இன்று நடைப்பயணம் என்பது மிகவும் அரிதான ஒன்றாகிவிட்டது. காலத்திற்கேற்ற மாற்றம் தேவைதான். ஆனால் இதன் விளைவு மக்களுக்கும் மற்றும் உள்ள உயிர்வாழ் ஜீவன்களுக்கும் முரண்பட்டதாக அமைந்துவிடக்கூடாது. ஆனால் எதிர்பார்த்தபடியே மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகமாகி கொண்டே செல்கிறது. இதன் விளைவு போக்குவரத்து நெரிசல், பழுதடைந்து கொண்டே இருக்கும் சாலைகள், விபத்துக்கள், உயிரிழப்புக்கள் என்று பட்டியல் நீண்டு வந்துவிட்டன. இந்த சூழ்நிலைக்கேட்டை சீரமைப்பு செய்தால்தானே நம் வருங்கால மக்கள் இன்னும் மேம்பட்டதொரு சூழ்நிலைப்பாட்டிற்கு எடுத்து செல்ல முடியும். சிக்கலான இக்கட்டில் இருக்கும் சாலைப் போக்குவரத்தை சீரமைக்க வேண்டி கொண்டு வரப்பட வேண்டிய சீரமைப்பை இனி வரும் பகுதிகளில் காண்போம். நாட்டில் தற்போது இயக்கப்படும் நகர்ப்புற பேருந்துகளில் மக்களை அடைத்து வைத்துக் கொண்டு வருவாய் நிர்பந்தம் காரணமாக வேறு வழியின்றி இயக்கிக் கொண்டு இருக்கின்றனர்.

இதன் விளைவு வாகனத்தின் செயல்திறன் குறைவு, நடத்துனர், நிர்வாகத்திறன், செலுத்த இயலாமை, ஓட்டுநர் பணிச்சுமை, நிர்வாகங்களில் வருவாய் குறைவு போன்ற பல்வேறு காரணிகளால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகுவது அன்றாடம் நடக்கும் நிகழ்வாக உள்ளது. ஆகையால் இதை சீர்செய்யும் பொருட்டு நகரப் பேருந்துகள்

புறப்படும் நிலையத்தில் இருந்து பயணிகளை முதல் 5 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள இடங்களுக்கு செல்பவர்களை மட்டும் ஏற்றி இறக்கிச் செல்ல அறிவுறுத்தப்பட்டு இயக்கப்பட வேண்டும்.

இப்படி செய்வதன் மூலம் நகர்ப்புற பேருந்துகளில் மக்கள் அடைத்துக் கொண்டு செல்வது தவிர்க்கப்படும். வாகனத்தின் செயல்திறன் கட்டுக்குள் இருக்கும் நடத்துனர் தன் பணியை சிறப்பாக நிர்வாகம் செய்ய முடியும். ஓட்டுநரின் பணிச்சுமை வெகுவாக குறையும். எரிபொருள் வீண்விரயம் குறைந்து கொண்டே வரும். நிர்வாகங்களுக்கு கூடுதல் இழப்புகள் குறைந்து கொண்டே வரும்.

நகர்ப்புற பேருந்துகள் ஏற்றிக் கொள்ள அனுமதிக்கப்படாத முதல் 5 கி.மீ எல்லைக்குள் செல்ல பயணிக்க வேண்டிய மக்களின் பயன்பாட்டிற்காக சிறு மற்றும் மிதரக வாகனங்களை சுமார் 20 முதல் 30க்குள் இருக்கைகள் (பள்ளிக்குழந்தைகள் செல்லும் வாகனம் போல்) இருக்கும்படியான வாகனங்கள் (சிட்டி கேப், பிக் அப் டாக்ஸி என்ற பெயரில்) அதிகளவில் இயக்கப்பட வேண்டும். இதன் மூலம் முதல் 5 கி.மீ எல்லைக்குள் செல்லும் மக்கள் வீண் சிரமமின்றி அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே சென்று இறங்கிக் கொள்ள முடியும்.

இதுபோன்று இயக்கப்படும் வாகனங்களில் ஓட்டுநர் இருக்கைக்கு பக்கவாட்டில் ஒரு மின்னணு கருவியை வைத்து அதில் பயணிகள் செல்லும் பயணக் கட்டண அனுமதியாக ஏரி இறங்கிச் செல்ல ஒரே சீரான கட்டணமாக பதிவேற்றம் செய்யப்பட்டு பயணிகளுக்கு ஏறும்போதே அவர்களின் இந்தியர் பொது செலவின வரிவசூல் அட்டையயை ஓட்டுநரிடம் கொடுத்து வாகனத்தில் வைக்கப்பட்டிருக்கும் மின்னணு கருவியில் அனுமதித்து பயண தூரத்திற்கு உண்டான கட்டணத்தை கழிவு செய்து அதற்கு உண்டான ரசீதை பெற்றுக் கொண்டு வாகனத்திற்கு உள்ளே செல்ல வேண்டும்.

இந்த வாகனத்தில் பயணிகள் அனைவருக்கும் இருக்கைகள், உறுதி செய்யப்பட்டிருக்கும் எவரும் நின்றுக் கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்படாது. இதன் மூலம் பயணிகளுக்கு நிம்மதியான வசதியான வாகனப்பயணம் கிடைக்கப் பெறும் என்பது உறுதி ஆகும்.

## இந்திய போக்குவரத்து சீரழிவு தடுப்பு – மாசு உற்பத்தி கட்டுப்பாடு சீரமைப்பு நிர்வாக மேலாண்மை:

நாட்டில் வாழ்கின்ற உயிர்வாழ் ஜீவன்களின் அத்தியாவசிய வாழ்வாதார தேவைகளை ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்ல, எடுத்து செல்வது நீண்ட நெடுங்காலமாகவே மக்கள் வாழ்வோடு பிரிக்க முடியாதபடி ஒன்றிப்போன செய்தியாகிவிட்டது.

நம் முன்னோர்கள் காலத்தில் கால்நடை பயணத்தில் ஆரம்பித்து பின்னர் கால்நடை பிராணிகளான குதிரை, மாடு போன்ற விலங்கினங்களைக் கொண்டு வண்டிகள் பூட்டி பயணம் செய்து வந்தனர். பின்னர் காலம் மாற மாற எரிபொருள் மூலம் விரைவாக பயணம் செய்யும் வாகனங்களை கண்டுபிடித்து உதாரணமாக பேருந்து, சிற்றுந்து, மகிழ்வுந்து, தொடர்வண்டி, கப்பல், ஆகாய விமானம் என்று ஒவ்வொரு கட்டமாக முன்னேறி ராக்கெட் என்ற அதிவேக சாதனத்தையும் கண்டுபிடித்து பெரும் சாதனைகளை படைத்தபடி இன்னும் மேம்பட்ட நிலைமைக்கு செல்ல தீவிர ஆய்வில் உள்ளனர்.

இன்று நடைபயணம், கால்நடை வாகனம் என்பது மிகவும் அரிதான ஒன்றாகிவிட்டது. காலத்திற்கேற்ற மாற்றத்தை வரவேற்று ஏற்றுக்கொள்ள பழகிவிட்ட நம் மக்களுக்கும் மற்றும் உள்ள உயிர்வாழ் ஜீவன்களுக்கும் இந்த வாகனப்பெருக்கம் மற்றும் இயக்கம் மிகுந்த முரண்பட்ட மாசு என்ற நச்சுக்குள் வாழும் சூழ்நிலையை உருவாக்கி கொடுத்துவிட்டது. மக்கள் தொகை பெருக்கம் ஒரு பக்கம், வாகனப்பெருக்கம் ஒரு பக்கம் இரண்டும் சேர்ந்து மக்கள் வாழும் சூழ்நிலையை மிகுந்த அடர்த்தியான நெருக்கடிக்குள் வாழும்படி நேர்ந்துவிட்டது.

இதன் விளைவுகள் மக்கள் தொகை பெருக்கம், வாழும் சூழ்நிலை அதிக நெருக்கம், போக்குவரத்து நெரிசல், பழுதடைந்து வரும் சாலைகள், சாலை விபத்துக்கள், உயிரிழப்புக்கள் மேலும் பல்வேறு நோய் நொடிகள் என்று பட்டியல் நீண்டு வந்து கொண்டே உள்ளது.

இப்பொழுது நகர்புறத்தில் சாலைகளை ஆக்கிரமித்து இயங்கிக் கொண்டிருப்பது ஷேர் ஆட்டோ என்று சொல்லப்படும் மூன்று சக்கர வாகனமும், இரு சக்கர வாகனங்கள்

மட்டுமே. இந்தப் பிரிவிற்குள் வரும் வாகனங்கள் உடனடியாக வாகனங்கள் சாலைக்கு வந்த தேதியில் இருந்து 10 வருடம் முடியும் தேதி என்றைக்கு எட்டப்படுகின்றதோ அன்றைக்கே அத்தனை வாகனங்களையும் அந்தந்த உற்பத்தி நிறுவனங்களே முன்நின்று திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படி பெற்றுக்கொள்ளப்படும் அனைத்து வாகனங்களும் உலோக மறு சுழற்சிக்காக ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட வேண்டும்.

இயக்கத்தில் இருந்து திரும்ப பெறப்படும் ஷேர் ஆட்டோக்களின் ஓட்டுநர்களுக்கு மாற்று பணி ஏற்பாடாக தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் வழிகாட்டுதல்படி மாற்று பணி ஏற்பாடு செய்து கொடுத்துவிட வேண்டும். மேலும் திரும்ப பெறப்படும் இரு சக்கர வாகனங்கள் உரிமையாளருக்கு இலவச போக்குவரத்து பயோமெட்ரிக் மின்னணு, பரிவர்த்தனை அட்டை வழங்கப்பட்டுவிட வேண்டும்.

இந்த வழிகாட்டுதலின் தொடர்ச்சியாக நகர்ப்புறத்தில் இயக்கத்தில் இருக்கும் நகரப் பேருந்துகளுக்கு பதிலாக, ஷேர் ஆட்டோ போன்ற 3 சக்கர வாகனங்களுக்கு பதிலாக, சுமார் 20 நபர்களுக்கு மேல் தாராளமாக அமர்ந்து செல்லும்படியான சிறு வாகனங்கள் (சிட்டி கேப், பிக் அப் டாக்ஸி என்ற பெயரில்) மற்றும் மிதரக வாகனங்கள் பயணிகள் போக்குவரத்திற்காக 5 கி.மீ சுற்று வட்ட ஒருங்கிணைப்பு வழிதடத்திற்கு இயக்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும், அல்லது கொண்டு வரப்பட வேண்டும். ஆக முதல் 5 கி.மீ எல்லைக்குள் எந்த பயணியும் நகர்ப்புற பேருந்தில் அடைத்துக் கொண்டு போக்குவரத்து பயணத்தை மேற்கொள்ள தேவையே இருக்காது. இதன் மூலம் சாலைகள் பழுதடைவது குறைந்து வரும், விபத்துக்கள் தவிர்க்கப்படும். கண்காணிப்பு மிகவும் துல்லியமாக்கப்பட்டு, தரமான, பாதுகாப்பான, போக்குவரத்து நிலைநிறுத்தப்படும். மாசு பெருமளவில் கட்டுப்படுத்தப்படும். வருவாய் கூடுதலாக கிடைப்பது உறுதி செய்யப்படும்.

ஏற்கனவே இயக்கத்தில் இருக்கும் நகர பேருந்துகளில் முதல் 5 கி.மீ எல்லைக்குள் செல்ல இருக்கும் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய அவசியம் இனிமேல் இருக்காது. இந்த பேருந்துகளை முதல் 5 கி.மீ எல்லைக்கு அப்பால் உள்ள ஊர்களுக்கு செல்லும் பயணிகளை மட்டும் ஏற்றிச்சென்று குறிப்பிட்ட நிறுத்தத்தில் நின்று செல்லும்படியாக (L.S.S) என்ற விரைவுப் போக்குவரத்து பயணத்தை உறுதி செய்யலாம். இதன் மூலம் பேருந்துகளுக்கு ஏற்படும் எரிபொருள், வீண்விரயம் தவிர்க்கப்படும். மேலும்

பணியாளர்களின் பணிச்சுமையும் ஓரளவுக்கு குறையும். வருவாய் கூடி வருவதும் உறுதி செய்யப்படும்.

மேலும் ஏற்கனவே இயக்கத்தில் இருக்கும் புறநகர் பேருந்துகளை அனைத்து நிறுத்தத்திலும் நில்லாமல் செல்லும் இயக்கமாக மாற்றி புறநகர் வட்டாரப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட நிறுத்தத்தில் மட்டும் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்லும் பேருந்து இயக்கமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் பேருந்துகளின் தேய்மான காலம் கூடிக் கொண்டே போகும். எரிபொருள், வீண்விரயம் தவிர்க்கப்படும். வருவாய் கூடுதலாக கிடைப்பது உறுதியாகும்.

இனி அடுத்த கட்டமாக புறநகர் பேருந்து புறப்படும் இடத்திலிருந்து அடுத்த மாவட்ட தலைநகர் பேருந்து நிறுத்தத்திற்கு மட்டும் செல்லும் பயணிகளை ஏற்றி இறக்கி செல்லும் பேருந்து இயக்கமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு காலநேரம் வீண்விரயமாவது தவிர்க்கப்படும். பேருந்துகளுக்கு எரிபொருள் வீண்விரயம் தவிர்க்கப்படும். போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படும். வருவாய் கூடுதலாக கிடைப்பது உறுதியாகும்.

இனி இதற்கு அடுத்த கட்டமாக ஒரு மேம்பட்ட இயக்கமாக தற்போது இயக்கப்பட்டு வரும் விரைவுப் போக்குவரத்தை அனைத்து மாவட்ட தலைநகர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து இடையில் எங்கும் தேவையில்லாமல் நிறுத்தாமல் மாநில தலைநகர் பேருந்து நிறுத்தத்திற்கு மட்டும் செல்லும் பயணிகளை ஏற்றி இறக்கி செல்லும் சொகுசு பேருந்து இயக்கமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதுபோன்ற இயக்கமானது தொடர் வண்டி இயக்கத்திற்கு சமமாக இருக்கும். ஆக இதுபோன்ற பேருந்துகளில் பயணிக்கும் மக்கள் அவர்கள் கொடுக்கும் கட்டணத்திற்கு ஒரு நிம்மதியான பயணம் மேற்கொண்டதாக அமையும், போக்குவரத்து நிறுவனத்திற்கும் கூடுதல் வருவாய் கிடைப்பது உறுதியாகும். அனைத்து பேருந்துகளிலும் பயணச்சீட்டு மற்றும் கணக்கீடுகள் போன்ற எழுத்து வேலை இனி வரும் காலங்களில் நடத்துனர்களுக்கு இருக்காது. ஆகையால் நடத்துனர் வேலை அவசியமற்றதாகிவிடுகிறது. நடத்துனருக்கு பதிலாக கூடுதலாக 2–வது ஓட்டுநர் மற்றும் ஒரு நானாவித பணி உதவியாளரை பணியில் அமர்த்தி இயக்கப்பட வேண்டும்.

## “தனி ஒரு விதி செய்வோம்” – ஏன் இந்த வழிகாட்டுதல்?

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை – சிறப்பு பார்வை:

## வசிக்க குடியிருப்பு மேலாண்மை சீரமைப்பு:

தற்போது நாட்டில் வாழுகின்ற மக்களில் பலர் அவரவர் வசதிக்கேற்ப பல்வேறு வழி வகைகளில் குடியிருப்புகளை கட்டுமானம் செய்து வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். கிராமப்புறங்களில் பொதுமக்கள் அவர்களின் வீடுகளில் முறையாக அடிப்படை வசதியான கழிவறை மற்றும் குளியலறை எதுவும் இருக்க வாய்ப்பில்லாமல் வெளிப்புறத்திலேயே அனைத்து பணிகளையும் செய்து கொள்கின்றனர். இது ஒரு சுற்றுப்புற சுகாதார கேடு என்பதை நினைத்துக்கூட பார்ப்பதில்லை.

ஒரு அரசாங்கம் அதன் மக்களுக்கு இதுபோன்ற அடிப்படை வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தர முன் வர வேண்டும். நாட்டில் வாழும் அனைத்து மக்களையும் ஒரு குடும்பத்திற்கு ஆறு நபர்கள் வீதம் கணக்கிட்டால் மொத்த மக்கள் தொகைக்கு சுமார் 20 லட்சம் குடும்பங்களாக பிரிந்து வரும் ஒரு குடும்பத்திற்கு சராசரியாக 900 ச.அடி வீதம் கணக்கிட்டு 20 லட்சம் வீடுகள் என்ற லட்சியப் பயணம் ஆரம்பித்து நடத்தப்பட வேண்டும். இதுபோன்று கட்டுமானம் செய்யப்படும் வீடுகளுக்கு மேலேயே சூரிய ஒளி மின் உற்பத்தி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பசுமை குடியிருப்புகள் என்ற கட்டமைப்பில் கட்டுமானம் செய்யப்பட வேண்டும்.

மேலும் குடிநீர் வசதி, நிலத்தடி நீர் வசதி, சமையல் எரிவாயு வசதி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்து வீடுகளுக்கும் கிடைக்குமாறு ஒரு சிறப்பான கட்டுமானம் செய்யப்பட வேண்டும். மேலும் கழிவுநீர்க்கென்று ஒரு சிறப்பான கவனம் செலுத்தி தனியாக ஒரு கழிவு நீர்பாதை கட்டுமானம் செய்து குடியிருப்புக்கு அப்பால் கொண்டு சென்று மறு சுழற்சி செய்யப்பட்டு விவசாயத்திற்கு பயன்படும்படி திருப்பி விடப்பட வேண்டும். இப்படி செய்வதால் மழை பெய்வது குறைந்து போனாலும் விவசாயம் செய்வது பாதிக்கப்படாமல் இருக்கும். கழிவு நீரை மொத்தம் 3 முறை மறுசுழற்சி செய்து பயன்படுத்த முடியும் என்பது கூடுதலான தகவலாகும்.

## தனி ஒரு விதி செய்வோம் – ஏன் இந்த வழிகாட்டுதல்?

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை தீர்வு

## காணப்படும் தீர்வுகள்:

1. நேரடி பணப்பரிவர்த்தனைகள் நிறுத்தப்படும்.

2. பண பரிவர்த்தனைகளில் நிலவும் சில்லரை பிரச்சனைகள், வீண் வாக்குவாதம் போன்ற சர்ச்சைகளுக்கு இடம் இருக்காது.

3. பண பரிவர்த்தனைகளில் நிலவி வரும் அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் கொடுப்பதை கோரவே முடியாது.

4. மறைமுகமாக நடந்து வந்த நேரடி பண பரிவர்த்தனைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டு வெளிப்படையான பரிவர்த்தனைகள் மின்னணு ஆளுமை மூலம் நடைபெறும்.

5. வீண் பேரங்கள் நடைமுறைகளுக்கு முகாந்திரமே இருக்காது.

6. நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் வெளிப்படையாக தெரிய வரும்.

7. வீண் கால தாமதங்கள் இருக்காது.

8. துல்லியம் கடைப்பிடிக்கப்படும்.

9. நம்பகத்தன்மை நிலைநிறுத்தப்படும்.

10. நம்பிக்கை மோசடி செயலுக்கு முகாந்திரமே இருக்காது.

11. வரிகள் சீரமைக்கப்பட்டு வரிகள் செலுத்துவது மின்னணு ஆளுமை மூலம் உறுதி செய்யப்படும்.

12. நாட்டின் நிதிநிலைமை உயர்ந்து வருவது வெளிப்படையாகத் தெரியவரும்.

13. அனைவருக்கும் அவர்களின் அடிப்படை வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்படாமல் நிறைவேற்றும்படி நிர்வாகங்கள் சீரமைக்கப்படும்.

14. வருவாய் உயர்வு, வாழ்வாதார உயர்வு என்பதே ‘‘தனி ஒரு விதி செய்வோம்’’ என்பதின் தனிச்சிறப்பு வாய்ந்த தரம் உயர்ந்த நிலைப்பாடாகும்.

15. அரசியல் அல்லக்கைகள் குண்டர்கள் மறைந்து விடுவார்கள்.

16. அனைத்து சில்லரை வணிகங்களை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வர முடியும்.

17. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் அங்கம் வகிக்கும் உடல் உழைப்பு பாமர மக்களுக்கு உண்மையான அன்றாட வாழ்வாதார ஊதியம் வழங்கப்படுவது உண்மையாகத் தெரிய வரும்.

# தனி ஒரு விதி செய்வோம்

## மறு சீரமைப்பு பொருளாதார மேம்பாட்டு இந்தியா:

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஒரே இடத்தில் குவிந்துள்ள அதிகாரம் மற்றும் பணிச்சுமைகளை சிறிது இலகுவாக்கும் நோக்கத்தின் முதற்கட்டமாக நிதி அமைச்சக பணிகளை இரண்டு முற்போக்கு சிந்தனைக்குட்பட்ட பொறுப்புக்களாக பிரித்தாளப்பட வேண்டும்.

1. நிதி அமைச்சகம் வரவு (மத்திய ரிசர்வ் வங்கி)

2. நிதி அமைச்சகம் செலவு (அனைத்து மத்திய வங்கிகள்)

தற்போது நிதி அமைச்சக பொறுப்பில் உள்ளவர்களின் கீழ் அனைத்து செலவினங்களையும் கவனிக்கும் இலக்காகவாக இருக்க வேண்டும்.

புதிதாக ஏற்படுத்தப்படும் நிதி அமைச்சகம் வரவு அனைத்து வித வரவினங்களையும் கவனிக்கும் இலக்காகவாக இருக்க வேண்டும்.

முன் வாருங்கள். கலந்துரையாடல் செய்து ஒரு சரித்திர சிறப்பு வாய்ந்த புதியதோர் சிந்தனையை உருவாக்கும். சங்கமம் ஆக கைகோர்ப்போம்.

நாம் உறுதியாக சாதிப்போம். வெல்வோம். மனதில் உறுதி வேண்டும். முடியும் நம்மால் முடியும். லாப நோக்க ஆதாயமற்ற ஒரு "புதிய இந்திய களத்தினை" படைத்திடுவோம்.

சரியான சிந்தனைகள் – அமைக்கப்படும் அடித்தளங்கள்

தகர்த்திடும் மாயை முகத்திரைகள்

வென்றிடும் உண்மை மனங்கள்

களம் காணும் வெற்றி முகங்கள்

பணம் பத்தையும் செய்யும். கைக்குள் அடங்காத கத்தை பணத்தை அட்டைக்குள் அடக்கி புதிய சகாப்தம் செய்வோம். பணம் நம்மை ஆளக்கூடாது. நாம்தான் பணத்தை ஆள வேண்டும்.

அடக்குவோம்! அடக்கும்வோம்! பணத்தை அடக்கும்வோம்! மின்னணு பரிவர்த்தன அட்டையில் அடக்குவோம்!

ஆளுவோம்! ஆளுவோம்! மின்னணு பரிவர்த்தனை நிர்வாகத்தை ஆளுவோம்!

கூறுவோம்! கூறுவோம்! வெளிப்படையாய் கூறுவோம்!

பொய்யில்லை மாய மந்திரமில்லை அத்தனையும் நிஜம். காணப்போவதும் நிஜம் அதுதான் தனி ஒரு விதி செய்வோமின் முகம். நிகழப்போகும் அதிசயம்.

## தனி ஒரு விதி செய்வோம்

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் மேலாண்மை

### சிறப்பு பார்வை:

நாட்டில் 6 லட்சத்து 41 ஆயிரம் கிராமங்கள் உள்ளதாக தகவல் உள்ளது. நம் கணக்கிற்காக 7 லட்சம் கிராமங்கள் என்று கணக்கிற்காக எடுத்துக் கொள்வோம். இந்த 7 லட்சம் கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு ஒரு கோடி ரூபாய் முதலீடு என்ற கணக்கில் ஒரு தேசிய பல்பொருட்கள் அங்காடி நிறுவப்பட்டால் அரசுக்கு 7 லட்சம் கோடிகள் தேவைப்படுகிறது. இதற்கு தேவையான நிதிகளை நம் ''தனி ஒரு விதி செய்வோம்'' வழிகாட்டுதல் கணக்கீட்டின்படி இறுதியாக கணக்கிட்டுரை பகுதியில் கூறப்பட்டுள்ளது ''இந்தியர் பொது செலவின வரிவசூல்'' மூலம் கிடைக்கப்பெற்ற அபரிதமான வரிவசூல் தொகைகளை வைத்து எளிமையாக கையாள முடியும்.

இதன் மூலம் ஆங்காங்கே கிராமப்புறங்களில் வாழும் மக்களைக் கொண்டே விலைப்பொருட்களை விளைவித்து மதிப்புக்கூட்டியும் செய்யப்பட்டு பேரங்காடிகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த ஒழுங்குமுறை ஆணையம் மூலம் வழங்கப்பட்டு வரமுடியும். இதன் மூலம் பொருட்கள் விலை விற்பது முறைப்படுத்தப்படும். மதிப்புக் கூட்டுவது முறைப்படுத்தப்படும். வணிகப்படுத்துதலும் முறைப்படுத்தப்படும். வரிவசூலும் முறைப்படுத்தப்படும். பொருளாதாரமும் முறைப்படுத்தப்பட்டு அபரிதமாக பெருகி வருவது கண்கூடாக காணப்படுவதாகும்.

இதைத்தவிர இட ஒதுக்கீடு மற்றும் இலவசங்கள் போன்ற சமூக அவலங்களுக்கு தூண்டப்பட்டு தன்னிலையை இழக்கச் செய்யும் அதிகார ஆளும் வர்க்கம் மற்றும் வசதி பலம் கொண்ட வர்க்கமும் சேர்ந்து இணைந்து அடித்தட்டு பாமர மக்களை மூளைச்சலவை செய்து உற்பத்தி இழப்பு, வருவாய் இழப்பு, வாழ்வாதார இழப்பு, அடிப்படை உரிமை இழப்பு, சமூக இழப்பு போன்ற அனைத்து இழப்புகளையும் தங்கள் நாவண்மையால் தேடித் தந்து கொண்டிருக்கின்றனர்.

# தனி ஒரு விதி செய்வோம்

அடுத்த வருடம் இந்தியாவில் பொது தேர்தல் வர இருக்கின்ற காரணத்தினால் மத்தியில் ஆளுமையில் உள்ள பிராதன தேசிய கட்சி தன் சுயத்தை பெருமளவு இழந்து தவிக்கும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் சமுதாய மாற்றங்களை செய்ய துணிச்சலுடன் முன் வரவேண்டும். முன் வராவிட்டால் மக்கள் மாற்றி விடுவார்கள் அவர்களை. இதுநாள் வரை ஏமாந்த கதை போதும் என்று கூட்டணி அமைப்பது ஒரு வியூகம் என்றால் மக்கள் கூட்டணி என்பது ஒரு புது வியூகம்.

மக்களை எவர் வெல்கிறாரோ அவரே முன் நிறுத்தப்படுவர். மக்களை வெல்வதற்கு மக்களுக்கு முன் முற்போக்கு திட்டங்கள் அறிவிப்புகள், அதற்குண்டான செயல்திட்டங்கள், மட்டுமே முன் நிறுத்த முடியும். இதை எவர் நம்பும்படி முன் நிறுத்த வருகிறார்களோ அவர்களே நாளைய உலகை வெல்ல முடியும். மக்களை மறந்துவிட்டால் மக்களும் இவர்களை மறந்து விடுவார்கள். வேண்டாமே இந்த தொடர்கதை. முன்நிறுத்துங்கள் மக்கள் முற்போக்கு செய்திகளை அது கொண்டு வரும் மாபெரும் வெற்றி வாய்ப்புகள் உங்களை நாடியபடி.

மக்களை சந்திக்கும் தகுதியும், தைரியமும் இப்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு எவருக்குமே இல்லாமல் இருப்பது ஒரு பெருத்த தலைக்குனிவாகும். நாட்டில் அதிகம் வாழும் பாமர மக்களின் அன்றாட வாழ்வாதார பிரச்சனைகளை முன் வைத்து பிரச்சாரத்தை மேற்கொண்டால் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள். நாடு முன் எப்போதும் சந்தித்திராத பெரும் இக்கட்டான சிக்கலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. கௌரவம் பார்க்காமல் சாதாரண பாமர மக்களின் முற்போக்கு சிந்தனைகளின் ஆலோசனைகளை முன் வந்து ஏற்றுக் கொண்டு அதை பரிசீலித்து நடைமுறைப்படுத்தும் சாத்தியத்தை உடனே ஆய்வு செய்து உடனடியாக களம் கண்டால் வெற்றி என்பது கைக்கு எட்டும் சூழ்நிலைக்கு வந்துவிடும்.

உண்மையே வெல்லும். நம்பிக்கையே முன் நிறுத்தும். வெல்வோம். சாதிப்போம். வாழ்க பாரதம்! வெல்க பாரத மக்கள்!

## தேசிய கட்டமைப்புக்கள் – உள்நாட்டு சேவைகள் மேலாண்மை தேசிய ஒருமைப்பாடுகள் – கட்டுமானம்:

1. குடியிருப்பு பகுதிகள் – தெருக்கள் கட்டுமான நிர்வாகம்
2. சீரான மின் விநியோகம் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
3. சீரான குடிநீர் விநியோகம் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
4. சீரான கழிவுநீர் வெளியேற்றம் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
5. சீரான சமையல் எரிவாயு விநியோகம் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
6. சீரான வாழ்வாதார பொருட்கள் விநியோகம் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
7. சீரான போக்குவரத்து சாலைகள், வாகனங்கள் மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்.
8. சீரான மருத்துவம் மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
9. சீரான கல்வி மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
10. சீரான தகவல் தொலைத்தொடர்பு மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்.
11. சீரான தகவல் அறியும் உரிமை மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
12. சீரான மனிதவள மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
13. சீரான வாழ்வாதார தொழில்கள் மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
14. சீரான விளைப்பொருட்கள் உற்பத்தி மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
15. சீரான மதிப்பு கூட்டுப் பொருட்கள் உற்பத்தி மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
16. சீரான ஜவுளி பொருட்கள் உற்பத்தி மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
17. சீரான பாதுகாப்பு மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்
18. சீரான தீத்தடுப்பு பேரிடர் மேம்பாட்டு சேவைகள் – பராமரிப்பு கட்டுமான நிர்வாகம்

மேலும் கூடுதலாக சேவைகள் கண்டறியப்பட்டால் அதையும் இதில் இணைத்துக் கொள்ளலாம். 4–4–2013 அன்று இந்திய தொழிற் சம்மேளன கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய மதிப்புக்குரிய திரு. ராகுல் காந்தி அவர்கள் சிறப்பு வாய்ந்த கருத்தான “100 கோடி மக்களுக்கும் அதிகாரம் தர வேண்டும்” என்ற பரபரப்பான பேச்சுக்கு வலு சேர்க்கப்படவேண்டும் என்றால் **“தனியொரு விதி செய்வோம்”** என்ற கோட்பாட்டு வழிகாட்டுதல் நெறிமுறைகளை விரைவாக அமுல்படுத்தினால் ஒரு வருடத்திலேயே வெற்றி காண முடியும்.

## இந்தியா – தன்னிறைவு பயணம் – பொருளாதார சீரமைப்பு – செயல்வடிவு திட்ட கட்டமைப்புக்கள்– தேசிய கட்டமைப்பு திட்டங்கள்: உள்நாட்டு நீர் ஆதார சுற்று வட்ட ஒருங்கிணைப்பு மேலாண்மை – ஆணையம். கட்டுமானம்:

| | | |
|---|---|---|
| 1. கடல் நீர் ஆதாரம் | : | கழிவுகள் தடுப்பு நிர்வாகம் |
| | | நீர் உறிஞ்சுதல் நிர்வாகம் |
| | | நீர் ஏற்றுதல் நிர்வாகம் |
| | | நீர் வழித்தட நிர்வாகம் |
| | | நீர் கொள்முதல் நிர்வாகம் (ஏரிகள்) |
| 2. உப்பு நீர் சுத்திகரிப்பு ஆதாரம் | : | கழிவுகள் தடுப்பு நிர்வாகம் |
| | | நீர் உறிஞ்சுதல் நிர்வாகம் |
| | | நீர் ஏற்றுதல் நிர்வாகம் |
| | | நீர் வழித்தட நிர்வாகம் |
| | | நீர் கொள்முதல் நிர்வாகம் |
| 3. நீர் மறுசுழற்சி ஆதாரம் | : | கழிவுகள் தடுப்பு நிர்வாகம் |
| | | நீர் உறிஞ்சுதல் நிர்வாகம் |
| | | நீர் ஏற்றுதல் நிர்வாகம் |
| | | நீர் வழித்தட நிர்வாகம் |
| | | நீர் கொள்முதல் நிர்வாகம் (ஆறுகள்) |
| 4. உயிரி நீர் உற்பத்தி ஆதாரம் | : | கழிவுகள் தடுப்பு நிர்வாகம் |
| | | நீர் உறிஞ்சுதல் நிர்வாகம் |
| | | நீர் ஏற்றுதல் நிர்வாகம் |
| | | நீர் வழித்தட நிர்வாகம் |
| | | நீர் கொள்முதல் நிர்வாகம் (மேல்நிலை – – நீர்த்தொட்டிகள்) |

ஒவ்வொரு வருடமும், நாட்டில் பெய்து வரும் மழையால் கிடைக்கப் பெறும் மழைநீரை முறையாக தேக்கி வைக்கப்படாமல் இருப்பதால், மழைநீர் பெருமளவு கடலில் சென்று கலந்து விடுவதால் நீண்ட நெடுகாலமாகவே புலம்பல்கள் இருந்து கொண்டே இருக்கிறது. இந்த சூழ்நிலையை மாற்றி நிர்வகிக்கும் பொருட்டு நாம் கடலில் இருந்து நீரை உள்வாங்கி உப்பை நீக்கி மறுசுழற்சி செய்து அந்த நீரை மக்கள் பயன்பாட்டிற்காக ஒருபுறம் குடிநீராகவும் மறுபுறம் விவசாயத்திற்கும் கொண்டு செல்ல முடியும். கூடுதல் செய்தியாக உலகின் வெப்பமயம் காரணமாக பனிப்பாறை உருகி கடல்நீர் மட்டம் உயர்ந்து வருவதாக ஒரு நம்பகமான தகவல் உள்ளது. சிதறிக் கிடக்கின்ற அனைத்து தேசிய திட்டங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் மட்டுமே தேசிய ஒருமைப்பாட்டை கொண்டு வர முடியும்.

## அகவுரை:

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். நம் யாருக்காவது அகம் சுத்தமாக இருக்கின்றதா? என்ற கேள்வி எழுப்பினால் பதில் தெரியாது என்பதுதான் வரும். அகத்தை எப்படி பார்க்க முடியும்? முடியாது. ஆனால் வேறு ஒரு வழி இருக்கின்றது. அதாவது பை நிறைய பணக்கற்றை திணித்துவிட்டால் அகம் உடனே முகமலர்ந்து பிரகாசமாகிவிடும். ஆக பணம் தான் அகத்தின் அழகை தீர்மானிக்கின்றது. குணமல்ல. நம் முன்னோர்கள் காலத்தில் எப்படி இருந்தனர்? அப்போதெல்லாம் பணம் என்ற மாயன் கிடையாது. வெறும் பண்டமாற்று மட்டுமே நடந்து கொண்டிருந்தது.

அப்போது அதை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு செய்து வந்தனர். எவருக்கு எந்த பண்டம் தேவைப்பட்டதோ அந்த பண்டத்தைப் பெற தன்னிடம் உள்ள பண்டத்தை கொடுத்து பரிமாறி வாழ்ந்து வந்தனர். அப்போது பண்டத்தின் தேவைக்கேற்ப பரிவர்த்தனைகள் நடந்து வந்தன.

காலம் மாற மாற ‘‘பணம் என்ற மாயன்’’ உள் நுழைந்து உழைப்பை எடை போட வைத்து முகமலர்ச்சியை கொன்றுவிட்டான். இந்தக் கொடுமைகளை பொறுக்க மாட்டாது, அப்போதே நம் முன்னோர்கள்:

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே
இதை பார்த்து அறிந்து நடந்திடாதவன் மனிதனில்லை
எப்போதும் மனிதனில்லை...

பணம் என்னடா பணம் பணம்
குணம் தானடா நிரந்தரம்...

பணம் கையில் இருந்தால் உன்னை உனக்கு தெரியாது
பணம் இல்லை என்றால் உன்னை யாருக்கும் தெரியாது...

பணம் பணம்... மானிடப்பிறவி எவ்வளவு கேவலமானது
பணம் என்ற நாணயம் தயாரிக்கப்பட்ட போதே
மனித நாணயம் தவறிப்போய்விட்டது
இறைவன் தன்னுடைய லீலைகளுக்குப்
பயன்படுத்தும் முதல் ஆயுதம் பணமே...

பணம் இருந்தால் போதுமடா சாமி...

பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும்...

அன்றே நம் முன்னோர்கள் பணத்தை பற்றி எவ்வளவு இழிவாக பேசிவிட்டு சென்றுள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பது போய்...

ஆவதும் பணத்தாலே, அழிவதும் பணத்தாலே என்பதாகிவிட்டது.

இனிமேலும் இந்தப் பணம் என்ற மாயப்பேய் பிடித்து நம்மை ஆட்டிக் கொண்டிருக்க வேண்டுமா? நாம் அனைவரும் 6 அறிவு படைத்த மனித இனம் நம்மில் இருந்து கொண்டுதான் இறைவன் ஆக்கும் பணி, காக்கும் பணி, அழிக்கும் பணி போன்ற புனிதமான சேவைகளை செய்து கொண்டு இருக்கிறான். நாம் இதையெல்லாம் உணர்ந்து சிறப்பாக செய்து கொடுக்க முன் வருவோமே.

நாம் வாழ்வது புண்ணிய ஆத்மாக்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாகும். நம் முன்னோர்களாகிய புண்ணிய ஆத்மாக்களின் ஆசிர்வாதத்துடன் நாம் மீண்டு வருவோம். பணம் என்ற மாயனை வேரோடு ஒழித்துக் கட்டுவோம். அகத்தை தூய்மைப்படுத்திக் கொள்வோம். மாற்று வழிமுறைகளை ஆராய்ந்து முன் மொழிந்து ஏற்றுக் கொண்டு சாதனை படைத்துக் காட்டுவோம்.

இந்தியாவின் அகம் என்று எதைக் குறிப்பிடலாம்? முன்னோர்கள் காலத்தில் இந்தியா பெருமைமிகு விவசாயம் சார்ந்த பூமியாக இருந்தது. பசுமை நிறைந்த பூமியாக இருந்தது. ஆனால் இப்போது பசுமை நிறைந்துள்ளதா? என்றால் இல்லை. பசுமைகள் எல்லாம் எங்கே போயிற்று? 50 களம், 60 களம் விளைந்த பூமியில் இன்று முதல் தளம், 2வது தளம் என்று பணமாக கைமாறி கைமாறி மாசுக்களின் அடைக்கல பூமியாக மாறிவந்துவிட்டது. யார் காரணம்? பணத்தாசை பிடித்த மனிதர்கள் மட்டுமே காரணம்.

உலகத்துக்கே உணவளிக்க கூடிய ஓர் உன்னதமான தகுதி படைத்திருந்த நாம் அந்த தகுதியை எப்போதோ இழந்து, இப்போது உலக நாடுகளிடம் இருந்து உணவுப்பொருட்களை விலை கொடுத்து வாங்கி ஆக வேண்டும் என்ற சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பது மிகுந்த வேதனைக்குரிய விஷயமாகும்.

முதலில் பணத்தை ஒழித்து மாற்று வழிகளை காண்போம். பிறகு எல்லாம்

தானாக தன் வழிக்கு திரும்பிவிடும். தற்போது எங்கே பார்த்தாலும் பற்றாக்குறை பற்றாக்குறை என்பதே நிலைப்பாடாக உள்ளது. போதாக்குறைக்கு தற்போது மத்திய அரசின் கடன் உயர்ந்து ரூ.40.83 லட்சம் கோடியாக உருவாகியுள்ளது. இதில் உள்நாட்டின் கடன் பங்கு மட்டும் 91.1% சதவீதமாக உள்ளது. இந்த செய்தியானது நமக்கு பெருத்த தலைக்குனிவான செய்தியாகும்.

உள்நாட்டு கடன் பங்கு மட்டும் 90% சதவீதத்திற்கு மேல் உள்ளது. இன்னும் சிறிது காலத்திற்கு பிறகு இதுவே 100% சதவீதத்தை எட்டிவிடும். அப்படி என்றால் அரசு இயந்திரம் இயங்குகிறதா? அல்லது உறங்கிக் கொண்டிருக்கிறதா? என்று மக்களுக்கு சந்தேகம் எழுந்துவிடும் இதிலிருந்து என்ன பாடம் படிக்க வேண்டியுள்ளதால்? மக்கள் தாங்கள் பெரும் ஆதாயங்களின் மீது அரசுக்கு செலுத்த வேண்டிய வரிவகை பங்கினை மறைத்து வருகின்றனர் என்று பாடம் படிக்க வேண்டியுள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நிர்வாக சீர்கேடுகள் மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற ரூபாய் நாணயங்கள் பரிவர்த்தனை புழக்கத்தில் இருக்கும் வரை நம் நாட்டை எவராலும் உயர்வுக்கு கொண்டு வரவே முடியாது என்று என்னால் உறுதியாக கூற முடியும். இதுதான் உண்மையும் கூட.

இதற்கெல்லாம் ஒரே தீர்வான வழி, தற்போது புழக்கத்தில் உள்ள ரூபாய் நாணயங்களை பண்டமாற்று பரிவர்த்தனை (கொடுக்கல்/வாங்கல்) புழக்கத்தில் இருந்து முற்றிலும் நீக்கிவிட்டு உடனடியாக மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாகத்தின் கீழ் மின்னணு பரிவர்த்தனை அட்டைகள் கொண்டு வந்தால் மட்டுமே உடனடியாக அனைத்து நிர்வாக சீர்கேடுகளும் சீரடைந்து பொருளாதார மேன்மை அபரிதமாக எட்டப்படும் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும் என்பதைக் கண்கூடாகக் காண முடியும். நம்மை விட அதிகப் பெரும்பான்மை மக்கள்தொகை கொண்ட சீனர்கள் நம்மை விட பலமடங்கு பொருளாதாரத்தில் முன்னேறி உள்ளனர். ஆனால் நம்மால் இன்னும் பற்றாக்குறை பொருளாதாரத்தில் இருந்து மீண்டு வர முடியவில்லை. காரணம் நம்மிடம் ''பணப்பற்று'' என்ற சுயநலப்போக்கு மிக அபரிதமாக உள்ளது.

## அணிந்துரை

மக்கள் நலம் பேணும் ஒரு மகத்தான அரசின் தலையாய கடமைகளில் மிகவும் முதன்மையானதாக கருதப்படுவது அதன் குடிமக்களுக்கு அனைத்து வாழ்வாதார அடிப்படை உரிமைகளையும் சீராக வழங்கி வருவதாகவும், மேலும் தொடர் கண்காணிப்பிற்குள் அனைத்து பணிகளும் முறையாக நடக்கின்றதா? என்றும் சிறப்பாக நிர்வாகம் செய்து குடிமக்களின் ஏகோபித்த நல் ஆசிகளுடன் ஆட்சி அதிகாரங்களை திறம்பட நடத்தி செல்ல வேண்டும் என்பதாகும்.

மனித இனம் இயல்பாகவே "போட்டி, பொறாமை, பாராட்டு" போன்ற மாய வலைக்குள் சிக்கி மூளைச்சலவை செய்யப்பட்டு கண்மூடித்தனமாக வாழும் வாழ்வாதாரப் பேராட்டத்திற்குள் சிக்கி விடுபடமுடியாமல் நிற்கதியாய் வாழும் சுழலுக்கு தள்ளப்படுகின்றனர். மக்களை இந்த "மாயை" என்ற வலைக்குள் இருந்து மீட்டெடுக்க வேண்டி அனைவருக்கும் சமமான வாழும் உரிமைகளை கொடுத்து கௌரவித்து வாழ வைக்க வேண்டும் என்பது அரசின் தலையாய கடமையாகும்.

பிறக்கும்போதே ஒரு மனிதன் ஏழ்மையிலும், ஒரு மனிதன் வறுமையிலும், ஒரு மனிதன் வசதியிலும் பிறப்பது அவரவர் செய்த கரும வினைகளின்படி தீர்மானிக்கப்பட்டு பரிணாம சுழற்சியில் நடக்கின்ற ஒரு தீர்வின் அடிப்படையான செயலாகும். மாறி வரும் சூழ்நிலைகளுக்கேற்ப இறைவன் கொடுத்த அறிவைக் கொண்டு மிகச்சிறந்த, பாதுகாப்பான, தரமான வாழ்க்கையை, வாழும் வழிமுறைகளை கண்டுபிடித்து மனிதன் நோய் நொடியின்றி 120 வருடங்கள் வரை வாழ முடியும் என்பதை நாமாகிய இந்தியர்கள்தான் உலகிற்கு நம் முன்னோர்கள் மூலம் உணர்த்தி வாழ்ந்து வந்துள்ளோம்.

நம்மிடம் இருந்து கற்றுச் சென்ற அறிவைக் கொண்டு உலகநாடுகள் மாபெரும் முன்னேற்றப் பாதையில் அபரிதமான பலத்துடன் முன்னேறிக் கொண்டு இருக்கின்றனர். நாம் எப்போது நம்மை மீண்டும் உணர்ந்து திரும்புவது? "மாயை" என்ற மூளைச்சலவை வலைக்குள் இருந்து விடுபடுங்கள். முதலில் அரசுக்கு அதன் வெற்றிப்பாதையில் தடங்களின்றி பயணம் செய்ய, ஊர்க்கூடி தேர் இழுப்பதுபோல் ஒன்று கூடி அரசு என்ற தேரை முன் இழுத்து செல்ல ஒத்துழைப்பு கொடுக்க முன் வாருங்கள்.

அரசுதான் மக்கள், மக்கள்தான் அரசு. அரசு மக்களின் சொத்து, மக்கள் அரசின் சொத்து. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது ''குடியரசு'' என்கிற ஒரு அற்புதமான சிறப்பு வாய்ந்த கட்டமைப்பாகும். நாமே பல்வேறு காரணங்களுக்காக புரிந்துணர்வு இல்லாமல் ஒற்றுமையில் வேற்றுமையில் பாராட்டி மேலும் சேதாரப்படுத்தி வருகிறோம். நாம் 6 அறிவு படைக்கப்பட்ட ஒரு அற்புதமான பிறவியாகும். இதிலிருந்து முன்னோக்கி மேம்பட்ட அறிவு நிலைக்கு செல்ல வேண்டுமே தவிர பின்னோக்கி ஐந்தறிவு படைத்த மிருக அறிவு இனத்திற்கு செல்லக்கூடாது.

நம்மிடம் உள்ள ஆறாவது அறிவைக் கொண்டு ஏழாம் அறிவான மின்னணு கணினிவியல் அறிவை மேம்படுத்தி ஆக்கப்பூர்வ சிந்தனைகள் மூலம் ஒரு மாபெரும் அற்புதத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டும். அடுத்த நூற்றாண்டு என்பது கணினி நூற்றாண்டாகவே இருக்கும். உட்கார்ந்த இடத்தில் இருந்தே உலகின் மறு கோடியில் என்னவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை காண வேண்டும். இதுதான் அடுத்த நூற்றாண்டில் நாம் கால்பதித்து செய்யப்போகும் ஒரு மாபெரும் புரட்சியாக இருக்கும். இங்கிருந்து கொண்டே அங்குள்ள சூழ்நிலைகளை கட்டுப்படுத்துவதாகும்.

சினிமாவில் பார்த்திருப்போமே ''விட்டலாச்சார்யா''வின் மாயஜாலக் காட்சிகளைப் போன்ற நிகழ்வுகளை நிஜமாகவே நடத்திக் காட்ட முடியும். முடியாதது என்று எதுவும் இல்லை. நாம் இன்னும் முழு மனதுடன் முயற்சிகள் எதையும் துவக்கவில்லை. காரணம் நம்மிடம் அபரிதமாக நிதியாதாரம் போதிய அளவிற்கு இல்லை என்பதுதான் இப்போதைக்கு தாரக மந்திரமாக உள்ளது. இவற்றையெல்லாம் சரி செய்ய முடியும். சரியான பாதைக்குண்டான கட்டமைப்புகளை உருவாக்கிவிட்டால் நம் முன்னேற்றத்தை எவராலும் தடுத்தி நிறுத்திவிட முடியாது.

நாட்டில் வாழுகின்ற அனைத்து உயிர்வாழ் ஜீவன்களுக்கும் தலையாய முதல் தேவை உண்ண உணவு, அடுத்ததாக மனித ஜீவன்களுக்கு மானம் காக்க உடுக்க உடை, வாழ்வதற்கு ஒரு வசிப்பிடம்/இருப்பிடம். இந்த மூன்று தேவைக்களுக்குமே நம் முன்னோர்கள் காலத்தில் இருந்தே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

உணவுப்பொருள்களை அப்படியே கொடுத்தாலும் உண்டுவிடும் குணமுடையவை ஐந்தறிவு ஜீவன்களாகும். இதிலிருந்து மாறுபட்டு மனித இனம் சமைத்த உணவுப்பண்டங்களை சாப்பிட்டுப் பழக்கப்பட்டு வந்துவிட்டனர் தவறில்லை. உடைகளிலும் பருத்தி முதல் பட்டு வரை விதவிதமாக உற்பத்தி செய்து விருப்பப்படி உடுத்தி மகிழ்கின்றனர். இருக்க இருப்பிடமும் ஓரளவிற்கு குடிசை முதல் மாளிகை வரை குடியிருப்புகள் வரை கட்டுமானம் செய்து வாழ்ந்து வருகின்றனர். இவை அனைத்துமே கற்கால மனிதன் முதல் தற்கால மனிதன் வரை விருப்பம் போல் வாழ வழிவகை செய்து கொண்டனர் என்பதின் அடையாளமே.

நாகரீகம் அறியப்பட அறியப்பட மனிதன் இன்னும் மேம்பட்டதொரு சூழ்நிலைப்பாட்டிற்கு செல்ல ஆசைப்பட்டு பல்வேறு வழிவகைகளில் முயற்சி செய்து தீர்வு காண முனைப்புடன் செயல்பட்டு முயன்று கொண்டே இருக்கின்றான். மனித முயற்சிகள் வீண் போகாமல் இன்று முன்னேற்ற உச்சியை நோக்கி செல்லும் பயணத்தில் தன் முனைப்பை அதிகம் ஈடுபடுத்தி மேம்பட்டதொரு நிலைப்பாட்டை அடைய தீவிரமாக தன் முனைப்பில் இருக்கின்றான். இந்த முற்போக்கு முன்னேற்ற சிறப்பான மாபெரும் நவீன உலக அரங்கிற்குள் நுழைய பொருளாதார தடை ஒரு தவிர்க்க முடியாத இடையூறாக இருந்து வருகின்றது என்ற ஒரு தற்செயலான "மாயை"யை என்பது நம்முடைய மக்களாகிய அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் உருவாக்கிவிட்டனர்.

பொருளாதாரத்தில் தன்னிறைவை அடைந்துவிட்டால் உலக அரங்கில் வென்று விடலாம். முடியும் இது நம்மால் முடியும் நாம் பல்வேறு வேறுபாடுகளுடன் வாழ்ந்து வந்தாலும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற உணர்வோடு வாழ்ந்து வருவது அதிக கூடுதல் பலமாகும் என்பது தனிச்சிறப்பாகும். நாம் சாதிக்க வேண்டியது இன்னும் எத்தனையோ சாதனை நிகழ்வுகள் உள்ளது. இவைகளுக்கெல்லாம் அடிப்படையான பொருளாதாரம் என்ற தன்னிறைவு பலம் வேண்டும். இந்தப் பொருளாதார தன்னிறைவு பலம் அடைய சிறப்பு வாய்ந்த நம்பகத்தன்மையான வழிகாட்டுதல் கோட்பாட்டு நெறிமுறைகளை பின்வரும் பகுதிகளில் காண்போம்.

## ஆய்வுரை

## இந்திய பொருளாதார மேம்பாட்டு மறுசீரமைப்புக் கட்டமைப்புகள்:

### தேசிய வரிக்கட்டமைப்புகள்:

| | | |
|---|---|---|
| 1. வருமான வரி | – | INCOME TAX |
| 2. விற்பனை வரி | – | SALES TAX |
| 3. கலால் வரி | – | EXCISE TAX |
| 4. மதிப்புக்கூட்டு வரி | – | VALUE ADDED TAX |
| 5. மறைமுக வரி | – | INDIRECT TAX |
| 6. நேரடி வரி | – | DIRECT TAX |

மேற்கண்ட வரி கட்டமைப்புக்களை நிறுவி பொருந்திவரும் இடத்தில் அனுமதிக்கப்பட்டு வரிவசூல் நிதி ஆதாரங்களை சட்ட விதிகளுக்குட்பட்டு பிடித்தம் செய்ய வேண்டி அமைக்கப்பட்ட ஒரு அமைப்புதான் மத்திய அரசின் வரிவசூல் நிதி ஆதார நிர்வாக மையமாகும்.

இதில் தலையாய வரிவசூல் இனமாக அறியப்படுவது வருமான வரி மற்றும் விற்பனை வரி, மதிப்புக்கூட்டு வரி போன்றவைகள் மட்டுமே. நாம் முதலில் வருமான வரி போன்ற கட்டமைப்புக்களை பற்றி ஆய்வு செய்வோம். ஏன்? எதற்காக? இந்த வருமானவரி கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்று ஆய்வு செய்வோம்.

பொதுமக்கள் தங்கள் வாழ்வாதார தேவைகளை நிறைவு செய்ய வேண்டி பொருளாதாயம் ஈட்டும் கட்டாயத்திற்கு ஆளாகி ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைக்கும் வழிவகை தேடி அலைந்து திரிந்து முடிவில் ஏதாவது ஒரு தொழிலில் தங்களை இணைத்து கொள்கின்றனர். விளைப்பொருட்கள் உற்பத்தியிலிருந்து மக்களுக்கு எடுத்து சென்று

வணிகம் செய்யும் வரைக்குமான அனைத்து தொழில்களிலும் தங்களை இணைத்து அடையாளப்படுத்தி கொள்கின்றனர். இதில் ஏதும் தவறில்லை.

உடல் உழைப்பு செய்து பிழைக்கும் சாதாரண பாமர மக்கள் என்ன சம்பாதித்து விடப்போகிறார்கள்? அந்த வருமானத்தின் மீது எதற்காக வரிவசூல்? என்ற கட்டமைப்பு தேவைப்பட்டது கடுமையாக உழைக்கின்றனர். அதைக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் உழைப்பின்மீது திணிக்கப்படும் வருமான வரி என்பது உழைப்பின் மதிப்பை சுரண்டுவதற்கு சமமான செயலாகும். என்னுடைய தனிப்பட்ட கருத்தாக கூற விரும்புவது வருமான வரி என்ற ஒரு வரி கட்டமைப்பே தேவையற்றது என்று கூற முடியும். கடந்த 60 ஆண்டு காலமாக வருமானவரி கட்டமைப்பின் நிர்வாகத்தின் மூலம் என்ன சாதித்து வீட்டீர்கள்? இன்னும் பற்றாக்குறைதான் நிலைப்பாடாக உள்ளது. அப்படியானால் அரசு இயந்திரத்தை இயக்குவதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை செய்து கொடுப்பதற்கும் தேவையான நிதி ஆதாரம் அரசிற்கு எங்கிருந்து கிடைக்க வரும்? என்ற கேள்வி எழுகிறது.

இதோ அதற்கான ஒரு வரி கட்டமைப்பு ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே “விற்பனை வரி” என்ற கட்டமைப்பாகும். விற்பனை வரி என்ற கட்டமைப்பிற்குள் அடங்கும் பொருள்களின் விலைப்பட்டியலை நிர்ணயிப்பது முழுக்க முழுக்க உற்பத்தியாளர்கள் என்று சொல்லப்படுகின்ற முதலாளிகள், தொழிலதிபர்கள் ஆகியோர்களே. இது முழுக்க முழுக்க தகுதியற்ற ஓர் கட்டமைப்பாகும். விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலைப்பட்டியலே நிர்ணயிப்பது முழுக்க முழுக்க அரசின் முழு அதிகாரத்திற்குட்பட்ட செயலாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் விலைவாசி கட்டுக்குள் வைத்து பொதுமக்களுக்கு நன்மை செய்து கொண்டு இருக்க முடியும்.

இந்த ‘‘விற்பனை வரி’’ என்ற கட்டமைப்பிற்குள் ஏற்படும் சிக்கலால் பொதுமக்கள் மீது ஏற்படும் வீண் நிதிச்சுமைகளை கட்டுப்படுத்தி விலைவாசியை கட்டுக்குள் வைத்திருப்பது அரசின் முக்கியமான கடமையாகும். வணிகப் பொதுமக்கள் தங்களின் வணிகத்தின் மூலம் செய்த வணிகத்தின் சரியான ஆதாரத்தகவலை அரசுக்கு கொடுக்காமல் மறுக்கப்படுவதை உணர்ந்த அரசு, நாட்டில் வணிகப்படுத்தப்படும் அனைத்து பொருட்களின் மீதும் ஒரு குறிப்பிட்ட அளவுகோலை நிர்ணயித்து அதை விற்பனை வரி என்ற கட்டமைப்பாக ஏற்படுத்தி ஒரு குறிப்பிட்ட இலக்கு மட்டும் நிர்ணயித்து வருவாய் செய்து வந்தனர்.

நாட்டில் வாழும் பல கோடிக்கணக்கான உயிர்வாழ் இனங்களுக்கு தேவைப்படும் வாழ்வாதாரப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வணிகத்தில் அன்றாடம் பல லட்சம் கோடிகள் மதிப்பீட்டிற்கு பண சுழற்சிகள் கட்டணமாக பரிவர்த்தனைகள் நடந்தேறிய வண்ணம் உள்ளது. இதில் உள்நாட்டு வணிகம் மற்றும் கூடுதலாக வெளிநாட்டு வணிகம் போன்றவை நடந்து கொண்டிருக்கின்றன. பொருட்கள் உற்பத்தி மற்றும் வணிக சேவைகளில் ஈடுபட்டுள்ள பலகோடி வணிக மக்கள் தங்கள் உழைப்பு மற்றும் வணிக சேவை மூலம் அடையும் ஆதாயத்தின் முறையான, உண்மையான கணக்கீடுகள் மற்றும் வரி ஆதாரங்களை மறைத்து மறுத்து வருவதால் அரசிற்கு பல லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டு வருவதை உணர்வதில்லை. இதன் விளைவாக அரசு இயந்திரத்தை இயக்குவதில் வீண் சிரமம் ஏற்பட்டு பல்வேறு சமூக அவலத்திற்கு ஆட்படுவது அடித்தளமாக அமைந்துவிடுகிறது என்பதை வணிகப் பெருமக்கள் உணர

## பரிந்துரை

## இந்தியர் பொது செலவின வரிவசூல்

## INDIAN COMMON EXPENDITURE TAX RECEIPT

அறிவுஜீவி இந்திய குடிமக்களே, வல்லுநர்களே, அனைத்து துறை நிபுணர்களே, நாடு சுதந்திரம் அடைந்து குடியரசு நிறுவப்பட்டு 60 ஆண்டுகளைக் கடந்து இன்னும் நிதி பற்றாக்குறை, இதைத் தொடர்ந்து வாழ்வாதாரத் தேவையான குடிநீர் பற்றாக்குறை, மின்சார பற்றாக்குறை போன்ற பல்வேறு பற்றாக்குறைகளை பட்டியலிட்டுக் கொண்டே நாம் பெருமைப்பட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

இந்தப் பற்றாக்குறைகளுக்கெல்லாம் மூலக்காரணங்கள் என்ன? ஏன்? என்று அரசுக்கும் அதன் வல்லுநர்களுக்கும், நிபுணர்களுக்கும் தெரியவில்லை! என்பது அண்டத்தின் அளவை விட ஏற்படும் பெரும் கேள்வியாக உள்ளது. வெளிப்படையான ஒரே பதில் நிதிப் பற்றாக்குறை மட்டுமே. நம்முடைய நிதி ஆதாரங்கள் அனைத்தும் எங்கே செல்கிறது? யாருக்காவது வெளிப்படையாக தெரியுமா? தெரியாது என்பது மட்டுமே பதிலாக உள்ளது. இதைக் கண்டுபிடிக்கத்தான் ஒரு தண்டச்செலவு விசாரணைக்குழு என்ற நிலையில் அவ்வப்போது நிறுவப்பட்டு அரசுக்கு கோடிக்கணக்கில் பொருள் விரயத்தையும், கால விரயத்தையும் செய்த வண்ணம் உள்ளனர். இது இப்போது தற்கால வழக்கமான நிகழ்வாகிவிட்டது. எதற்கெடுத்தாலும் விசாரணைக்குழு வீண் காலம் விரயம், பொருள் விரயம் பொது மக்களின் கோடிக்கணக்கான வரிவசூல் ஆதாரங்கள் விரயம் என்ற பெயரில் வீணடிக்கப்படுகின்றன என்பதை தவிர வேறு எதுவும் சுட்டிக்காட்டுவதற்கில்லை.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது கணினிவியல் காலம் என்று சொல்லப்பட்டு வருகின்றது. கணினியை கையாள்வதில் நாம் தான் உலகளவில் முன்னிலையில் இருப்பதாக பெருமைப்படக் கூறும் நம்மவர்கள், நம்மிடம் இந்த தொழில் நுட்பத்தை அனைத்துக் கட்டமைப்புகளிலும் ஏன் கொண்டு வரத் தயங்குகின்றனர்? என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

நம் நாட்டில் பல்வேறு வரிவசூல் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தும் நாட்டின் நிதிநிலைமை இன்று வரை ரூ.5 லட்சத்து 7 ஆயிரம் கோடி பற்றாக்குறையாக இருக்கிறது என்பது உண்மை நிலையாகும். இப்படி பற்றாக்குறை நிதிநிலைமை ஏற்படுவதற்கு காரணமாக இருந்த அரசுப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோர்களின் திறமைகளை எப்படி ஏற்றுக் கொள்வது? இவர்களுக்கு எதற்கு ஊதியமும் சலுகையும் கொடுக்கப்பட வேண்டும்? கணிசமான ஊதியத்தையும், சலுகையையும் பெற்றுக் கொண்டு, மறுபக்கம் கையேந்தி கையூட்டு போன்ற சமூக கேவலமான ஊதியத்தையும் சம்பாதித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இதற்கெல்லாம் மூலக் காரணம் ரொக்கப்பணமான அச்சடித்த காகித ரூபாய் மற்றும் நாணயங்களே ஆகும்.

இந்த ரொக்கப்பணமான ரூபாய் நாணயங்களை முற்றிலும் புழக்கத்திலிருந்து நீக்கிவிட்டால் திருடர்கள் தானாகவே திருந்திவிடுவார்கள். திருட்டு கையூட்டு போன்ற சமூக கேவலமான ஊதியம் சம்பாதிக்க வழிவகை இல்லாமல் போய்விடும்.

இவர்களுக்கு நிதி ஆதாரத்தை மேம்படுத்த தெரியவில்லையா? இல்லை தெரிந்தும் வெளிப்படுத்த தயங்குகிறார்களா? உண்மையான காரணம் என்ன? நாட்டுமக்கள் நலிந்து கொண்டே கொடுமைகளை சகித்துக் கொண்டு வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்களா?

கொடுமையிலும் கொடுமை சகித்துக் கொள்ள முடியாத கொடுமை. யாரும் ஏமாற வேண்டாம், ஏமாற்றவும் வேண்டாம். அவரவர் பணிகளை சரியாக செய்தாலே போதும். இந்திய தேசியம் அதன் கட்டமைப்புகளில் மாபெரும் உயர்வை சந்தித்துவிடும். நாம் உண்மையாக ஒரு மாபெரும் உயர்வை சந்தித்து சாதனைகள் படைக்க உண்மையான பாதையை எது என்பதை முதலில் உணர வேண்டும். அதற்கேற்ற ஒரே ஒரு உயர்வான வழிவகை கட்டமைப்புதான் “இந்தியர் பொது செலவின வரிவசூல்”, மின்னணு ஆளுமை, மின்னணு பரிவர்த்தனை தளமாகும்.

இந்திய அரசின் வரிவசூல் கட்டமைப்புகள் அனைத்தையும் நீக்கிவிட்டு

ஒரே ஒரு வரிவசூல் கட்டமைப்பு நுழைவாக அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் அளிப்பின் ஆதாயங்களின் மீது மட்டும் வரிவசூல் செய்து கொள்வது. இதற்கு பெயர்தான் இந்தியர் பொது செலவின வரிவசூல் என்பதாகும். இந்த வரிவசூல் கட்டமைப்பை மின்னணு கண்காணிப்பு ஆளுமை நிர்வாகத்தின் கீழ் மின்னணு பரிவர்த்தனை அட்டைகள் (ஸ்மார்ட் கார்டு) மூலம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின் வரையறைக்குள் வருகின்ற உடல் உழைப்பு பாமர மக்களையும் சேர்த்து மற்ற அனைத்து பொதுமக்கள் அன்றாடம் வாங்கும் வாழ்வாதாரப் பொருட்கள் ஆதாயத்தின் மீது மட்டுமே இந்த "இந்தியர் பொது செலவின வரிவசூல்" குறைந்த மதிப்பாக, ஒரே சீராக 10 சதவீதம் என்ற நிலைப்பாட்டில் வசூலித்துக் கொள்ள அனுமதிப்பது. இதில் எந்த குழப்பத்திற்கும் இடமில்லாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதேபோல் அனைத்து சேவை அளிப்பவர்களுக்கும் அவர்கள் அடையும் ஆதாயத்தின் மீதும் வரிவசூல் செய்து கொள்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். ஆக வரிவசூல் அனைத்து மக்களிடமும் வசூலாவது உறுதி செய்யப்படுகின்றது. இன்றைய நாள் வரை மறுக்கப்பட்டு வந்த அத்தனை வணிக கணக்கீடுகள் யாவும் இனிவரும் காலங்களில் மறைப்பதற்கு என்று எதுவும் இல்லாமல் அத்தனையும் வெளிப்படையாக தெரிய வரும். மேலும் அரசுக்கு சேர வேண்டிய தொகையும் எந்தவித தடங்கலும் இன்றி உடனுக்குடன் உண்மையாக கிடைத்துக் கொண்டே இருக்கும். இந்த புதிய வரிவசூல் கட்டமைப்பு நம்பகத்தன்மையுடன் உள்ளதா? என்பதை பின்வரும் கணக்கீடுகளில் புரிந்து கொள்ளலாம். தனி ஒரு விதி செய்வோம் அமுலுக்கு வந்த ஒரு வருடம் கழித்து, தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் உள்ள மக்களுக்கு வாழ்வாதார வரிவகை மட்டுமே வசூலிக்கப்படும்படி கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும்.

# பணிந்துரை

## தனி ஒரு விதி செய்வோம்

அறிவுஜீவிகளான இந்திய குடிமக்களே நாடு 1947–ம் ஆண்டு ஓர் நன்னாளில் நள்ளிரவில் சுதந்திரம் கிடைக்கப்பெற்று இன்று வரை நாட்டின் குடிமக்களுக்கு விடிந்தும் விடியாமல், ஒரு சம வாய்ப்பு முழு பொருளாதார சுதந்திரம் கிடைக்கப்பெறாமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி சுதந்திர நாட்டின் அடிமைகளைப் போல் வாழ்ந்து வருவது இயல்பான நிகழ்வாகி விட்டது. இது தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிட்டது. ஏனெனில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றது.

திறமையற்றவர்கள் ஆட்சி அதிகார அமர்வில் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மற்றும் உள்ள அனைத்து பாமர, நடுத்தர மக்களுக்கு அனைத்தும் எட்டக் கனியாகவே உள்ளது.

குடிமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து வாழ்வாதார அடிப்படை உரிமைகள் வெறும் ஏட்டுச்சுரக்காய் போல் அன்றாடம் காகித அறிவிப்பாகவே உள்ளது போல் இருப்பதாக உணர்வது மக்களுக்கு அன்றாட வாழ்க்கை முறையாகிவிட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு குடியரசு அமைக்க வேண்டிய பல அறிஞர் பெருமக்களைக் கொண்டு பல்வேறு சட்டதிட்ட விதிமுறைகள் ஏற்றப்பட்டு நடைமுறை நிகழ்வில் உள்ளது. ஆனாலும் கூட 60 ஆண்டுகளைக் கடந்தவிட்டபோதும் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் இன்றளவும் கேள்விக் குறியாகவே பதில் காணப்படாமல் உள்ளது. இந்த நாட்டில் பிறந்து விட்டோம் என்ற நிலைப்பாட்டிற்காக அடிப்படை உரிமைகளை இழந்து வெறும் வாக்கு வங்கிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எந்தப்பக்கம் திரும்பினாலும் பற்றாக்குறை மட்டுமே உண்மையாக உள்ளது. ஆனால் விலைவாசிகள் மட்டும் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து கொண்டே இருக்கிறது. இந்தியா ஒரு மாபெரும் “ஜனநாயக” நாடு என்று அழைப்பதை விட “மாபெரும் பற்றாக்குறை நாடு” என்று அழைக்கப்படுவது சரியான பொருத்தமாக இருக்கும்.

குடிமக்களாகிய நமக்கு எந்த கடமைகளும் இல்லையா? இருக்கின்றது ஆனால் சிந்திப்பதற்கும் செய்வதற்கும் நேரமில்லாமலும், மனமில்லாமலும் நீர்க்குமிழி போல் தோன்றி மறைந்து விடுகிறோம். எனக்குள் இருக்கும் இயல்பான இடைவிடாத தேடலில் என் சிந்தனைக்குள் கிடைக்கப்பெற்ற கருத்துருவே "**தனி ஒரு விதி செய்வோம்**" என்ற தனித்துவ தத்துவ கோட்பாட்டு வழிகாட்டுதல் நெறிமுறைகளாகும்.

ஏற்கனவே நாட்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு இயக்கத்தில் இருக்கும் "விற்பனை வரி" என்ற கட்டமைப்பைத்தான் சற்று உயர்வான வேறு மேம்பட்ட கோணத்தில் சிந்தித்து உருவாக்கிய கட்டமைப்பே "இந்தியர் பொது செலவின வரிவசூல்" என்ற கட்டமைப்பு ஆகும். ஏற்கனவேதான் இருக்கிறது நீங்கள் என்ன பெரிதாக சொல்லப் போகிறீர்கள்? என்ற கேள்வி மட்டும் உடனே வந்துவிடும். ஆனால், அறிவுஜீவிகளே ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகளில் உள்ள மாபெரும் ஓட்டைகளின் மூலம்தான் இத்தனை காலமாகவும் இன்றுவரையும் திருட்டு, பதுக்கல் என்ற ஊழல் நடந்த வண்ணம் உள்ளது. அரசால் ஏன் தடுக்க முடியவில்லை?

ஏராளமான அறிவுஜீவி வல்லுநர்கள் படைசூழ உள்ள இந்த அரசு திறமையாக நிர்வாகம் செய்ய வேண்டியதுதானே? எப்படி வந்தது இந்த ரூ.5 லட்சம் கோடிகளுக்கு மேல் வரும் நிதி பற்றாக்குறை? யார் திருடினார்கள்? யார் பதுக்கினார்கள்? எதாவது உண்மையை கண்டுபிடிக்கும் அளவிற்கு நம்பகத்தன்மையான கட்டமைப்புகள் எதுவும் நம் அரசிடம் உள்ளதா? எதுவும் இல்லை என்பது மட்டுமே பதிலாக உள்ளது. அவரவர் தம் பங்கிற்கு செய்யும் திருட்டு, கையூட்டு, பதுக்குதல் போன்ற தூய சமூகப் பணிகளை செய்த வண்ணம் உள்ளனர்களே. குடிமக்களே இவர்கள் அனைவரும் கூட்டாக சேர்ந்து திருடும், பதுக்கும் சொத்துக்களின் மதிப்புக்கள் எவ்வளவு இருக்கும்?! என்பது இறுதியாக பின்வரும் கணக்கீடுகள் மூலம் தெரியவரும்.

தனி ஒரு விதி செய்வோம் சொல்லுவதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. அழுத்தமும் இருப்பதுபோல் உணரப்படுகின்றது. செயல் வடிவத்திற்கு வந்தால் இந்திய தேசத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை அடிப்படையில் இருந்தே உணர்ந்து கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு இந்திய தேசத்தை அடுத்த நூற்றாண்டுக்கான தலைமை பொறுப்பிற்கு தகுதியடைய செய்யும் கட்டமைப்புகளின் விதிமுறைகளை கொண்டததுதான் தனிச்சிறப்பு வாய்ந்த "**தனி ஒரு விதி செய்வோம்**" என்ற கோட்பாட்டு வழிகாட்டுதலாகும்.

## தெளிவுரை

## மின்னணு கண்காணிப்பு ஆளுமை – மின்னணு பரிவர்த்தனை

இந்திய தேசிய அறிவுஜீவி பொதுமக்களே நீங்கள் அனைவரும் பணம் என்ற ‘‘மாயை’’ வலைக்குள் சிக்கி ‘‘மூளைச்சலவை’’ செய்யப்பட்டு வெறும் வாக்கு வங்கிகளாக மாற்றப்பட்டு உங்கள் பொன் போன்ற வாழ்வாதாரங்களை, உரிமைகளை நம்மவர்களான ஊழல் பேர்வழி அரசியல்வாதிகளிடம் இழந்து மீள முடியாதபடி, அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெற்றதையும் நிஜமாகவே அனுபவிக்க முடியாமல் 6 அறிவு இருந்தும் ஐந்தறிவு ஜீவன்களைப்போல் வாழ்ந்து வருகின்றீர்கள். இதற்கெல்லாம் மூலக் காரணம் தன்னை ஆண்டு வரும் வெளிப்படையற்ற அரசியல் அமைப்பும், ஆட்சி முறைகளும்தான். ஆகையால் முதலில் நீங்கள் தெளிவு பெறுங்கள். எது வெளிப்படைத்தன்மை வாய்ந்தது? எது வெளிப்படைத்தன்மை அற்றது?

நம்மிடம் தற்போது புழக்கத்தில் இருக்கும் ‘‘காகித ரூபாய் நாணயங்கள்’’ முழுக்க முழுக்க வெளிப்படைத்தன்மையற்றவை ஆகும். பாக்கெட்டில் வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்வதும் உண்டு, கொடுத்துவிட்டு புலம்புவதும் உண்டு. இதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். இருப்பதை மறைப்பது தன் சுயநலத்திற்காக மென்மேலும் சேர்ப்பது போன்ற சமூக நீதிகள் யாவும் ஒரு மனிதகுல அவலமான நிலைப்பாடாகும். ‘‘பகிர்ந்து உண்ணால் பசி ஆறும்’’ என்று நம் முன்னோர்கள் சொல்லிவிட்டு சென்றுள்ளார்கள். இதன் உண்மையான விளக்கம் என்ன? ஒரு குடும்பத்தில் உள்ள பலர், அனைவரும் பகிர்ந்து உண்ணும் செயலுக்கு அல்ல இந்த பொருள். தங்களிடம் இருப்பதை இல்லாதவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணும் செயலுக்குதான் அந்தப்பொருள்.

நம்மில் யாராவது இந்த செயலை நிஜமாகவே செய்கிறோமா? இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும். தனிமனிதால் எவ்வளவு காலம் செய்ய முடியும். அவனிடம் உள்ளது வரை செய்ய முடியும். அதற்கு பிறகு? மவுனம் தான் பதில். ஒரு மக்கள் நலம் பேணும் அரசு மட்டுமே காலத்திற்கும் இந்த அற்புதமான நல்ல நிகழ்வை செய்து கொண்டு இருக்க முடியும். ஆகையால் அரசிற்கு அதன் நிதி ஆதாரங்களை வலுப்படுத்திக் கொண்டால்தான் மேற்சொன்ன நிகழ்வு தடையில்லாமல் வழங்க முடியும்.

அரசு அதன் நிதி ஆதாரத்தை வலுவடையச் செய்வதற்கு நிர்வாகப் பணிகளை முற்றிலும் வெளிப்படைத் தன்மைக்கு மாற்றியாக வேண்டும். இதற்காக வேண்டி வெளிப்படைத்தன்மை அற்ற காகித, உலோக ரூபாய் நாணயங்களை முற்றிலும் புழக்கத்திலிருந்து முழுமையக நீக்கிவிட வேண்டும். இந்த காகித, உலோக ரூபாய் நாணயங்கள் இடத்தை நிரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரே மாற்று தீர்வான வழிமுறைதான் மின்னணு பரிவர்த்தனை அட்டைகளை மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாகத்தின் கீழ் புழக்கத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய தீர்வாகும்.

மின்னணு கண்காணிப்பு ஆளுமை மற்றும் மின்னணு பரிவர்த்தனை என்பது அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் நம்பகத்தன்மையுடன் வெளிப்படையாக தரக்கூடிய ஒரே மேம்பட்ட நிகழ்வின் அற்புதமான தளமாகும். பொது மக்கள் அனைவரும் இந்த மேம்பட்ட நிகழ்விற்கு மாறி வர வேண்டும். உங்களிடம் எந்த பயமும் இருக்க வேண்டிய அவசியமில்லை. எவரும் உங்களை ஏமாற்றிவிட முடியாது. உங்களுக்கு உதவ உங்கள் மக்களே அருகில் இருப்பார்கள் என்பது கூடுதல் பலமாகும். பின் பயம் என்பது தேவையற்றது ஆகிவிடுகிறது.

## ஏற்புரை

## மின்னணு கண்காணிப்பு ஆளுமை – மின்னணு பரிவர்த்தனை

1. நாட்டில் தற்போது வழங்கப்படும் சேவைக் கூலிகளுக்கும், வணிகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் இடையில் புழக்கத்தில் நிகழும் பண்டமாற்று பரிவர்த்தனைகளில் கைமாறும் கட்டணமான பணத்திற்கு பதில் மின்னணு பரிவர்த்தனை அட்டைகளை கொண்டு வருவது, கட்டணப்பணத்தை புழக்கத்தில் இருந்து திரும்ப பெற்றுக் கொள்வது.

2. திரும்பப் பெறப்படும் ஒட்டுமொத்த அனைத்து காகித, உலோக ரூபாய் நாணயங்களுக்கு மாற்றாக தற்போது புழக்கத்தில் இருக்கும் ''ஏ.டி.எம்.ஸ்மார்ட்கார்டு'' அட்டை வடிவில் பயோ மெட்ரிக் அடிப்படையிலான மின்னணு பரிவர்த்தனை அட்டை மூலம் அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பங்களிப்பு ஆதாயத்தின் மீது 10 சதம் ''இந்தியர் பொது செலவின வரிவசூல்'' கழிவு போக பெற்றுக் கொள்வது.

3. அரசுக்கு இன்று வரை மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வந்து கொண்டிருந்த அனைத்து வணிக ஆதாய தகவல்களும் வெளிப்படையாக அறியப்பட்டு, அனைத்து ஆதாய அளிப்பின் மீது மட்டும் அரசுக்கான வரிவசூல் இனமான ''இந்தியர் பொது செலவின வரிவசூல்'' என்ற முழுவதும் நம்பகத்தன்மை வாய்ந்த வரிவசூல் கட்டமைப்புகளுடன் உடனுக்குடன் சென்று சேர்ந்துவிடுவது உறுதி செய்துவிடுவது.

4. தற்போது நிகழ்வில் இருக்கும் காகித ரூபாய் நோட்டுக்களை போலவே மின்னணு கண்காணிப்பின் கீழ் பயோமெட்ரிக் ரூபாய் மின்னணு பரிவர்த்தனை அட்டைகளை அறிமுகப்படுத்தி (உதாரணம் ரூ.50/– முதல் ரூ.50,000/– வரை) உபயோகத்திற்கு கொண்டு வருவது இந்த அட்டையை எவரும் தவறாக பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காகவே பயோமெட்ரிக் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது.

உங்களுக்கு மாறுபட்ட, மேம்பட்ட ஒரு உயர்வான சூழ்நிலை வேண்டுமானால் நீங்கள் அனைவரும் வரப்போகும் ஒரு சிறப்பு வாய்ந்த மாபெரும் மாற்றத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். சுகாதாரமான, பாதுகாப்பான, தரமான, நம்பகமான, வாழ்வாதாரப் பொருட்களை "தேசிய பல்பொருள் அங்காடிகள்" என்ற பெயரில் உங்கள் பகுதிகளிலேயே நிறுவப்பட்டு சிறப்பாக மக்களுக்கு சேவை செய்ய திட்டமிட்டு துவக்கப்படும் என்பது ஒரு மகிழ்ச்சியான கூடுதல் செய்தியாகும்.

வெகு விரைவான கால கட்டத்திற்குள் இந்திய தேசியம் அதன் வருவாயில் மாபெரும் ஏற்றத்தை அடைந்து பொது மக்களாகிய உங்களுக்கு முற்றிலும் வரியற்ற நாடாக கொடுக்கப்படும் என்பது மக்கள் நலம் பேணும் ஒரு மாபெரும் அரசின் திறமையாகும். இது நிஜமாகவே முடியும். சரியாக திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டால் இது ஒரு சாத்தியமாகக் கூடிய நிகழ்வேயாகும்.

## தேசிய சேமிப்பு மற்றும் வாழும் கால வாழ்வாதார ஊதியம் வழங்கும் திட்டம்:

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் இணைந்துள்ள பல கோடி மக்கள் அனைவருக்கும் அன்றாடம் வழங்கப்பட்டு வரும் வாழ்வாதார ஊதியம் ரூ.200/–ல் இருந்து ரூ.100/–யை தேசிய சேமிப்பு திட்டத்திற்கு பங்களித்து விட்டு மீதம் உள்ள ரூ.100/–யை அவர்களின் அன்றாட வாழ்வாதார செலவினங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டு திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்த வேண்டும்.

## மதிப்புரை:

மக்களுக்கு உண்மையாகவே நல்லது செய்ய வேண்டும் என சிந்திப்பதில் மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. ராகுல்காந்தி அவர்கள் சற்று வித்தியாசமான பார்வையில் மேன்மையாக காணப்பட்டு கவனிக்கப்படுகின்றார். முன்பு இதே கண்ணோட்ட சிறப்பு வாய்ந்த குணாதிசயத்தில் இருந்தவர்தான் இவரது தந்தையான மதிப்பிற்குரிய மாண்புமிகு, முன்னாள் பாரதப்பிரதமர் மறைந்த திரு. ராஜீவ்காந்தி அவர்கள் ஆவார். அவருடைய உடல் மண்ணில் மறைந்தாலும் அவருடைய ஆன்மா அவருடைய மகன் உருவத்தில் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஆகையால் திரு. ராகுல்காந்தி கரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று என்னுடைய ஆழ் மனதின் உந்தமுத்தம் விரும்புகின்றது. இவரால் மட்டுமே இந்திய துணைக் கண்டத்திற்கும் பொது மக்களுக்கும் அடுத்த நூற்றாண்டு வரை நன்மைகள் செய்து கொண்டே செல்ல முடியும்.

சாதி, சமய இன வெறிக்கு இடம் கொடுக்காது தனித்துவமாகத் திகழ்கின்றார். அனைத்து வேறுபாடுகளையும் கலைந்துவிட்டு வாருங்கள். இந்தியாவை வாழும் பொற்காலமாக மாற்றிக் காட்டுவோம். முடியும் நம்மால் முடியும். ஒரு பாதுகாப்பான சொர்க்க பூமியாக மாற்றிக் காட்ட முடியும். உலக அரங்கில் தலைநிமிர்ந்து வெற்றிநடை போட்டுக் காட்டுவோம். இன்று நம்மை உதாசீனப்படுத்தி மிரட்டிக் கொண்டு இருப்பவர்கள் நம்மை நாடி வந்து மண்டியிட வைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது நம் புதிய அத்தியாயத்தின் மூலம் நிரூபித்துக் காட்டுவோம்.

## ஒப்பிட்டு உரை:

| தற்போதைய நிலவரம் | சாதகம் | பாதகம் | சர்ச்சைகள் | விளைவுகள் |
|---|---|---|---|---|
| அச்சடித்த காகித ரூபாய் உலோகத்தால் ஆன நாணயம் | உடனுக்குடன் | அதிக காலம் தாங்காது<br><br>தயாரிப்பதில் அரசுக்கு வீண் நிதிச்சுமை ஏற்படும். | கைமாறும் – கைமாற்றும் நபர்கள் தெரியாது. வெளிப்படையற்றது. சில்லரை தட்டுப்பாடு ஏற்படும் சில்லரை தருவதில் வாக்குவாதம் ஏற்படும். | மறைமுக பேரங்கள், கொடுக்கல், வாங்கல், கறுப்புபணம் உருவாகுதல், அரசுக்கு நிதி பற்றாக்குறை ஏற்படுத்துதல், வேலை வாய்ப்பின்மை, பொருளாதார தேக்கம் உருவாகும். மறைமுகமாக தீவிரவாதம் அதிகரித்தல் போன்ற சமூக அவலமான சீர்கேடுகளுக்கு அடித்தளம் அமைக்கப்படும். |

## மாற்று வழி:

| புதிய சிந்தனை | சாதகம் | பாதகம் | மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை | |
|---|---|---|---|---|
| | | | சாதகம் | பாதகம் |
| மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை. | வெளிப்படைத் தன்மை வாய்ந்தது. | ஏதும் இல்லை. தொடர் கண்காணிப்பு இருக்க வேண்டும். | தயாரிப்பு செலவு குறைவு பராமரிப்பு செலவு குறைவு, வெளிப்படைத்தன்மை வாய்ந்தவை, நம்பகத்தன்மை அதிகம், போலிதயாரிப்புகள் இருக்க முடியாது. கறுப்புபணம் உருவாகி சமூக சீர்கேடுகள் ஏற்படுவது தடுத்து நிறுத்தப்படும். பொருளாதாரம் உயர்ந்து வரும். | உடனுக்குடன் கொடுக்கல், வாங்கல் பரிவர்த்தனை செய்ய முடியாது, பயிற்சி தேவைப்படும். பயம் தேவையற்றது. |
| பிளாஸ்டிக், பாலிமர் கரன்சி | தெரியாது. | தெரியாது. | | |

## தீவிரவாத தடுப்புரை:

தீவிரவாதம் என்பது வெளிநாடுகளில் இருந்துதான் இங்குவந்து செயல்பட வேண்டும் என்று எந்த விதிமுறையும் இல்லை. எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எந்த சூழ்நிலையிலும் பரவிவிடும் ஒரு நச்சுக்காற்றாகும்.

முதலில் தீவிரவாத செயலுக்கு அடிப்படை ஆதாரம் என்ன? மூளைச்சலவை. இந்த மூளைச்சலவை செய்வதற்கு என்ன அடிப்படை ஆதாரம்? நிதி ஆதாரத்தேவை மட்டுமே. மேலும் பதவிசுகம், ஆசை இந்த இரண்டு அடிப்படை ஆதாரங்களை வைத்துதான் மூளைச்சலவை செய்யப்பட்டு எந்த ஒரு தனிநபரும் செயல்பட முடியும். பதவிசுகம் என்பது தன் முனைப்பு, நிதி என்பது தனக்கும் தன்னை சார்ந்தவருக்கும் எப்போதும் தேவைப்படும் வாழ்வாதாரம் ஆகும்.

ஆக ஒரு கொள்கையற்ற தனி மனிதனுக்கு இந்த இரண்டு ஆதாரங்களையும் கொடுத்து அனுப்பி விட்டால் அந்த தனி மனிதன் தன் உயிரைப்பற்றி சிறிதும் துச்சப்படாமல் தன் முனைப்பு பணியில் இறங்கிவிடுவான். மேற்சொன்ன இரண்டு ஆதாரங்களும் ஒரு வாழ்வாதார பாதுகாப்பை தீர்மானிக்கின்ற பொருளாகும். இந்த இரண்டு ஆதாரங்களும் கிடைக்கப்பெற்ற சாமானிய மக்களுக்கு கொடுக்கப்படும் மூளைச்சலவை என்பது சாதி, சமயம், மொழி, இனம், இலவசம், இடஒதுக்கீடு மேலும் அல்லக்கை பதவிசுகம் போன்ற மூளைச்சலவைகள் இந்த பகுதிக்குள் வரும் மூளைச்சலவை ஆதாரங்கள் ஆகும்.

அடிப்படை வாழ்வாதார தொழில் பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு அற்றவர்கள் இந்த பட்டியலகளுக்குள் வருகின்ற மக்களாவார்கள். ஒரு தனி மனிதனுக்கு வாழ்வாதார பாதுகாப்பு தொழில் கிடைத்துவிட்டால் அவன் எளிதில் நிம்மதி அடைந்துவிடுவான். மற்ற மூளைச்சலவைகளுக்கு பின் செல்ல விரும்பமாட்டான். அவரவர் வழியை பார்த்துக் கொண்டு சென்றுவிடுவார்கள். மாற்று சிந்தனைக்கு வழி இருக்காது. தான் உண்டு, தன் வேலை உண்டு, தன் குடும்பம் உண்டு என்று நிம்மதியான வாழ்வியல் சிந்தனைக்குள் சென்று விடுவான்.

ஒரு தனி மனிதனுக்கு கிடைக்கப்பட வேண்டிய அனைத்து அடிப்படை வாழ்வாதார உரிமைகளும் மறுக்கப்படாமல் கிடைத்துவிட்டால் அந்த தனிமனிதனால் இந்தநாடு வெகு விரைவில் அதன் வளர்ச்சிப்பாதையில் செல்ல ஆரம்பித்து விடும்.

நல்ல மனிதர்களின் சிந்தனைகளுக்கு உயிர் ஊட்டுங்கள். செயல்படுத்தினால் உயர்வு பெற்றுவிடும். காகித அளவில் இருப்பதை நடைமுறை அளவில் கொண்டுவந்து செயல்படுத்திட வேண்டும். நம் கையே நமக்குதவி. அனைவரின் கைகளே இந்த நாட்டுக்கு உதவி. தனி மனித முன்னேற்றம், வீட்டு முன்னேற்றம், தெரு முன்னேற்றம், ஊர் முன்னேற்றம், நாடு முன்னேற்றம் என்று படிப்படியாக முன்னேற்றங்களைக் காண முடியும். இதுவே ‘‘தனி ஒரு விதி செய்வோம்’’ என்பதின் தனிச் சிறப்பு வாய்ந்த தாரக மந்திரம் ஆகும்.

## கள்ளப்பணம் – கறுப்புப்பணம் தடுப்புரை:

நாட்டில் புழக்கத்தில் இருக்கும் அனைத்து ரூபாய் நாணயங்களையும் புழக்கத்திலிருந்து நீக்கியபிறகு எவரிடத்திலும் மேற்கொண்டு இருக்க வாய்ப்பில்லை. அப்படி காண நேர்ந்துவிட்டால் அவரிடம் இருப்பது கள்ளத்தனமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த கறுப்புப்பணமாகத்தான் இருக்க முடியும். அப்படி காணப்பட்ட அந்த தொகையை அப்படியே கையகப்படுத்தப்பட்டு அந்த தொகைக்கு உண்டான 10 சதவீத இந்தியர் பொது செலவின வரிவசூல் அரசுக்கு சேர வேண்டிய வரிவருவாய் தொகையை பிடித்தம் செய்துவிட்டு மீதித் தொகையை அப்படியே மின்னணு பரிவர்த்தனை பயோமெட்ரிக் ரொக்கப்பண அட்டையாக சம்மந்தப்பட்ட தனி நபரின் வங்கிக் கணக்கீட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாற்றிக் கொடுத்துவிட வேண்டும்.

தனி ஒரு விதி செய்வோம் கோட்பாட்டு வழிகாட்டுதல் அமுல்படுத்தப்பட்ட ஒரு வருட காலத்திற்குள் வெளிவரும் ரொக்கத்தொகைகளுக்கு மட்டும் மேற்கண்ட வழிகாட்டுதல் பின்பற்றப்பட வேண்டும். அதற்கு பிறகு வரும் ரொக்கப்பணத் தொகைகள் எதுவும் சலுகை வரம்பிற்குள் கொண்டு வரப்படமாட்டாது என்பதை மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

ஒரு உதாரணமாக வெளிநாட்டில் இருந்து நம் நாட்டிற்குள் வரும் பயணிகள் கொண்டுவரும் ரொக்கப்பணத்திற்கு அவர்கள் கொண்டு வரும் அந்நிய நாட்டு பணத்தின் மதிப்பிற்கேற்ப நம் நாட்டு நாணயமாக மாற்றி 10 சதவீதம் இந்தியர் பொது செலவின வரிவசூல் தொகையை கழிவு செய்து மீதிவரும் தொகைக்கு மின்னணு பரிவர்த்தனை பயோமெட்ரிக் ரொக்கப் பண அட்டையாக கொடுத்துவிட வேண்டும். இந்த அட்டைக்கு பெயரே ‘‘வரியற்ற ரொக்கப் பண அட்டையாகும்’’. இந்த அட்டை வைத்திருப்பவர்கள் நாட்டின் எந்த மூலைக்கும் சென்று வரியற்ற முறையில் அனைத்து செலவினங்களையும் செய்து கொள்ள முடியும். இந்த கட்டமைப்பு நம் சொந்த நாட்டை சேர்ந்தவர்களும், நம் நாட்டிற்குள் வந்து செல்லும்போது பொருந்தும். ஆக எந்த சுற்றுலாப் பயணிகளையும் பிச்சைக்காரர்கள் வடிவத்தில் இனிவரும் காலத்தில் எவரும் எந்த தொந்தரவும் கொடுக்க முடியாது. மேலும் அந்நிய நாட்டு பணங்களை திருட்டுத்தனமாக எவரும் பணசுழற்சி பரிவர்த்தனை செய்ய முடியாது.

## முடிவுரை:

நம் வருங்கால மக்கள் மற்றும் உயிர்வாழ் இனங்கள் அனைத்திற்கும் ஒரு மாபெரும் நல்ல நிகழ்வுகள் நடக்க வேண்டும் எனில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மக்களும் ஒரு சரித்திர சிறப்பு வாய்ந்த தியாகத்தை செய்து கொள்ள முன்வர வேண்டும். பொதுமக்களாகிய (அரசியல்வாதிகள், அரசியல் கட்சிக்காரர்கள், கலைத்துறையைச் சார்ந்தவர்கள், தொழில் துறையைச் சார்ந்தவர்கள், வணிகத்துறையைச் சார்ந்தவர்கள்) மற்றும் உள்ள அனைத்து துறையைச் சார்ந்தவர்கள் வைத்துள்ள ரொக்க ரூபாய் நாணயங்களே அரசிடம் அப்படியே ஒப்படைத்துவிட்டு அதற்கு மாற்றாக மின்னணு பரிவர்த்தனை பயோமெட்ரிக் ரொக்கப் பணப்பரிவர்த்தனை அட்டைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். பயம் வேண்டாம். எந்தக் கேள்வியும் இருக்காது. வெறும் 10 சதவீதம் வரிவசூல் மட்டுமே இருக்கும். நீங்கள் ஒப்படைக்கும் அனைத்து பணங்களுக்கும் பாதுகாப்பான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு அதில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். ஆகையால் எந்தப் பயமும் வேண்டாம். எந்த வருமான வரி துறையினரும் உங்களை கேள்வி கேட்க மாட்டார்கள். தொகை உங்களுடையது. செலவினங்கள் உங்களுடையது. இதற்கு உண்டான வரிவசூல் அரசுக்கு சொந்தமானது.

ஆக இனிவரும் காலங்களில் அரசுக்கு முழுமையாகவும், வெளிப்படையாகவும் உங்கள் செலவினங்கள் மீது இருந்து மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாக மேலாண்மையின் கீழ் அனைத்து பரிவர்த்தனைகளும் நடைபெற்று வரிவசூல் உடனுக்குடன் அரசின் பாதுகாப்புக்கு சென்று சேர்ந்துவிடும். ஆகையால் இனிவரும் காலங்களில் எவருக்கும் எந்தவித வீண் சிரமங்களும் இருக்காது. எந்தவித மன உளைச்சலும் இருக்காது. பொதுமக்களாகிய நீங்கள் இந்த நடைமுறைக்கு ஒத்துழைப்பை கொடுத்து நாட்டையும் நாட்டின் செல்வங்களையும் காப்பாற்றி வருங்கால வம்ச வழியினர்களையும் காப்பாற்றி உலக அரங்கில் முன்னிலை வகிக்க களம் அமைத்திட ஒத்துழைப்பை தாருங்கள்.

கீதா உபதேசத்தை எடுத்துக் கொள்வோம். இனி நடக்கப்போவதெல்லாம் நன்றாகவே நடக்கும். கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் வாழும் மக்கள் பிழைப்பாதாரத் தொழிலில் ஈடுபட்டு ஈட்டி வந்த பொருளாதாயத்தின் மீது கிடைக்கப்பெற்ற உண்மையான ஆதாயத்தின் அளவுகளை அரசுக்கு தெளிவுபடுத்தாமல் மறுக்கப்பட்டதின் விளைவாக நாட்டிற்கு பல லட்சம் கோடிகள் வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருவதை உணர வேண்டும்.

நாட்டு நிர்வாகப்பணியில் உள்ளவர்களும், அரசுப்பணியில் உள்ளவர்களும் மிகவும் உண்மையாகவும், நேர்மையாகவும் பணி செய்து வந்தால் அரசுக்கு மேற்சொன்ன வருவாய் இழப்பீடுகள் எதுவும் நேர்ந்திருக்காது. இவர்களுக்கு நன்றாகவே தெரியும் ஊழல் எப்படி நன்றாக நடந்து கொண்டிருக்கிறது? என்று, இதை மேல்மட்டத்தில் இருப்பவர்களுக்கு சொல்லுவதற்கு ஏன் தயங்குகிறார்கள்? என்பது புரியவில்லை. இதன் விளைவை இவர்களையும் சேர்த்து மற்ற மக்களும் அனுபவிக்கவேண்டியது உள்ளது என்பதை இவர்கள் புரிந்து செயல்படவேண்டும். என்னுடைய எழுத்து கோப்புக்கள் எல்லாம் ஏதோ ஒரு கற்பனை உலகத்திற்கு அழைத்து செல்வதுபோன்ற பிரம்மையை ஏற்படுத்தி இருக்கும். ஆனால் இதுதான் உண்மை. இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிவிட்டால் பின்னர் எவரும் நிறுத்திவிட முடியாது. திட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கும். ஏனெனில் ஊழல் திருட்டு இருக்காது. மக்களின் உண்மையான ஆதரவு அபரிதமாக இருக்கும். ஆகையால் பின்வரும் காலங்கட்டங்களில் நாம் மேற்கண்ட சாதனைகளை நம் மக்களைக் கொண்டே ஒரே குடையின் கீழ் செய்து முடிப்போம் என்பது உறுதி.

முதலில் மக்களுக்கு புரியும்படி அனைத்து கட்டமைப்புகளையும் எளிதில் சென்று சேர்க்க வேண்டும். நம்பிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். நம்பிக்கை அதிகரிக்க, அதிகரிக்க மக்களின் ஆதரவும் அதிகரிக்கும். இந்த செயல் வடிவங்களை பொறுப்பானவர்கள் மூலம் முதலில் ஆரம்பித்து மக்களுக்கு எளிதில் புரியவைக்க


வேண்டும். நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். ஏட்டளவு மற்றும் வாயளவில் இருப்பதை தவிர்த்து உண்மையாகவே செயல் வடிவுக்கு கொண்டுவர முன் வர வேண்டும். செயல் வடிவில் செய்து காட்டப்பட்டுவிட்டால் நடக்க இருக்கும் அபரிதமான அற்புதங்களை அனுபவிக்க நம்முடன் சேர்ந்து நம் வருங்கால சந்ததியினர்களும் அனுபவிப்பார்கள் என்பது உறுதி. நாளைய உலகமே அவர்கள்தான் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.


நாம் நம் அரசு இயந்திரத்தை இயக்கவேண்டி அனைத்து பொருளாதாயத்தின் மீதும் வருமான வரி என்ற கட்டமைப்பை ஏற்படுத்தி கடந்த 60 ஆண்டு காலத்திற்கும் மேலாக பல்வேறு தோல்வி முகங்களை கண்டுவந்து இன்றைக்கு வெளிப்படையாக நாம் ஒரு ‘‘பற்றாக்குறை பொருளாதார நாடு’’ என்று உலகுக்கு அறிவித்துள்ளோம். நம்நாடு ஒரு பொருளாதார பற்றாக்குறை நாடு என்பதே ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு கருத்தாகும். உண்மையை நேசிப்பவர்களுக்கு மிக நன்றாக தெரியும். நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று? ஒரு தனிமனிதனால் என்ன செய்ய முடியும். எதுவும் செய்ய முடியாது.

நாட்டில் 127 கோடிகளுக்கு மேல் மக்கள் தொகை இருந்தும் என்ன பயன்? உண்மையை நிலைநிறுத்த முடியவில்லையே. சுயஅறிவுள்ள அனைத்து மக்களும் எவ்வித வேறுபாடுகளுமின்றி அரசுக்கு சேர வேண்டிய நிதி ஆதாரங்களை கொள்ளையடித்து பிழைத்து கொண்டிருக்கின்றனர். இந்த அவலத்தை முடக்க வேண்டும் என்றால் ‘‘பணம்’’ என்ற ‘‘மாயனை’’ முடக்க வேண்டும். அனைத்து கொடுக்கல், வாங்கல் நடைமுறை பழக்க, வழக்கங்களில் கட்டண ரொக்கப் பணத்திற்கு மாற்றாக மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாக மேலாண்மையின் கீழ் மின்னணு பரிவர்த்தனை அட்டைகளை கொண்டு வந்து அனைத்து கொடுக்கல், வாங்கல் நடைமுறை பழக்க வழக்கங்களை செய்வோம். இதன் மூலம் நிகழப்போகும் அதிசயங்களை இறுதியாக பின்வரும் பகுதிகளில் கணக்கீடுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

<u>அறிமுகம்:</u>

## இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பயோமெட்ரிக் பரிவர்த்தனை அட்டை தகவல் பதிவு:




1) உரிமையாளர் பெயர் :

2) ஆண் / பெண் :

3) வயது :

4) கல்வித்தகுதி :

5) உரிமையாளரின் தேசிய மின்னணு பயோமெட்ரிக் அடையாள அட்டை எண் :

6) உரிமையாளரின் குடும்பத்தகவல் : அம்மா/ஆம் /இல்லை/தேசிய அடையாள எண்:
அப்பா
மகன்
மகள்
விதவை சகோதரி

7) உரிமையாளரின் தேசிய ஊரக வேலை உறுதி திட்டவகை எண் :

8) உரிமையாளரின் அன்றாட வாழ்வூதியம் :

9) உரிமையாளரின் அன்றாட செலவின வரம்பு :

10) உரிமையாளரின் அன்றாட தேசிய சேமிப்பு :


11) உரிமையாளரின் அன்றாட பொது செலவின வரிவசூல் பங்களிப்பு : 10 சதவீதம்

# <u>இந்தியர் பொது செலவின மின்னணு பயோமெட்ரிக் ரொக்க பரிவர்த்தனை அட்டை தகவல் பதிவு:</u>

1. உரிமையாளர் பெயர் :

2. ஆண் / பெண் :


முன் பக்கம்




3. உரிமையாளர் தொழில் நிறுவனத்தின்
   பெயர் / தேசிய அடையாள எண் :

4. தேசிய முதலீட்டு ஒழுங்கு முறை
   ஆணைய ஒருங்கிணைப்பு சிறப்பு எண் :

பின் பக்கம்




5. உரிமையாளர் அன்றாட பரிவர்த்தனை
   சிறப்புத்தகுதி கட்டண மதிப்பு : ரூ.50/– முதல் ரூ.50,000/– வரை

(கூடுதலாகவும் கட்டண அட்டை வழங்கப்படும்)

6. தேசிய வரிவசூல் பங்களிப்பு : 10 சதவீதம்

7. உரிமையாளரின் இந்தியர் பொது
   செலவின வரிவசூல் பயோமெட்ரிக்
   அட்டை எண்:

8. உரிமையாளரின் தொழில் நிறுவனத்தின்
   சேவை பங்களிப்பு விவரம் : உற்பத்தி – வணிகம்

## கணக்கிட்டு உரை

2012–2013 ஆம் நிதி ஆண்டில் இந்திய அரசுக்கு ஏற்படுத்தப்பட்ட வரி வருவாய் இழப்புக்கள் – நம்பகத்தகுந்த வழிகாட்டுதல் – கட்டமைப்புகளுடன் நிரூபித்தல்.

நிரூபிக்கப்படும் கட்டமைப்பு: இந்தியர் பொது செலவின வரிவசூல் மின்னணு பரிவர்த்தனை அட்டைகள்.

நாட்டில் பதிவு பெற்று அறியப்பட்டுள்ள மொத்த குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 88 லட்சமாக உள்ளது. மேலும் பதிவு பெறாத, அறியப்படாத பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை வகைகளையும் கூடுதலாக சேர்த்து கணக்கிட்டால் தோராயமாக மொத்தம் 6 கோடி வரை பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை நுகர்வு நிகழ்வுகள் அன்றாடம் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையாகும்.

இந்த 6 கோடி பல்தொழில் வருவாய் ஈட்டு வகைகளில் சுமார் 15% ஏற்றுமதி செய்யும் தொழில் நிறுவனங்களாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அதாவது சுமார் 90 லட்சம் ஏற்றுமதி தொழில் வருவாய் ஈட்டு வகைகள் உள்ளதாக எடுத்துக் கொள்வோம். இந்த தொழில் நிறுவனங்களில் சுமார் 15 கோடி மக்கள் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருவதாக எடுத்துக் கொள்வோம். சுமார் 90 லட்சம் ஏற்றுமதி தொழில் நிறுவனங்களின் வருவாய் ஈட்டு வகைகளில் ஒரு தனியாரின் அன்றாடம் நடைபெறும் தொழில் முதலீட்டு செலவின பணப்பரிவர்த்தனை சுழற்சியாக சுமார் ரூ.10 ஆயிரம் வரை செலவிடப்பட்டு வரலாம் என்று கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்வோம்.

ஆக 90 லட்சம் சிறு, குறு ஏற்றுமதி நிறுவனங்கள் x ரூ.10 ஆயிரம் அன்றாட பணசுழற்சி = ரூ.90,000,000,000/– (ரூ.ஒன்பதாயிரம் கோடிகள்).

இதுவே ஒரு வருடத்திற்கு ஆகும் பணசுழற்சி = ரூ.9 ஆயிரம் கோடிகள் x 365 நாட்கள் = ரூ.32,850,000,000,000/– (ரூ.முப்பத்தி இரண்டு லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம் கோடிகள்). இந்த தொகைக்கு 10% இந்தியர் பொது செலவின வரிவசூல் செய்யப்பட்டிருந்தால் அரசுக்கு நம்பகமாக = ரூ.3 லட்சத்து 28 ஆயிரம் கோடி வரை கிடைத்திருக்கும்.

## கணக்கிட்டு உரை

## இந்திய அரசின் பொருளாதார மேம்பாட்டு உடனடி தீர்வுக் காண நம்பகத்தகுந்த வழிகாட்டுதல் கட்டமைப்புக்களுடன் நிரூபிக்கப்படும் கணக்கீடுகள்

இனி மொத்தம் உள்ள 6 கோடி பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை வகைகளில் 90 லட்சம் ஏற்றுமதி நிறுவனங்கள் போக மீதியுள்ள 5 கோடியே 10 லட்சம் வருவாய் ஈட்டு சேவை வகைகளின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்புகளை கீழ்வரும் பகுதிகளில் கணக்கிட்டுப் பார்ப்போம்.

மொத்தம் உள்ள நிறுவனங்கள் 6,00,00,000 கோடி

மொத்த ஏற்றுமதி நிறுவனங்கள் 90,000,000 லட்சம்

மீதி உள்ள நிறுவனங்கள் = 51,000,000 (5 கோடியே 10 லட்சம்)

நாட்டில் மீதியுள்ள 5 கோடியே 10 லட்சம் பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை வகைளில் பெரும்பான்மையான சிறு மற்றும் குடிசைத் தொழில்களாக, தன்னிச்சை சுயமாகவும் செயல்பட்டு வருவாய் ஈட்டி வரும் வாய்ப்பு உள்ளது. இவர்கள் எந்தவித பதிவோ அல்லது முறையான கணக்கீடுகள் எதுவும் பராமரிப்போ செய்யாமல் பணசுழற்சி செய்து வருவாய் ஆதாயம் ஈட்டி வருபவர்கள் ஆவார்கள்.

இவர்களின் அன்றாட பணசுழற்சி தோராயமாக = ரூ.3000/– வரை இருக்கும்.

ஆக 5 கோடியே 10 லட்சம் தொழில்கள் மூலம் நடைபெற்று வரும் பணசுழற்சியை கணக்கிடுவோம்.

பல்தொழில் வருவாய் ஈட்டு அன்றாட பணசுழற்சி = ரூ.3000 x 5 கோடியே 10 லட்சம் வருவாய் ஈட்டு சேவைகள் = ரூ.153,000,000,000/– (ரூ.பதினைந்தாயிரத்து முண்ணூறு கோடிகள்). இதுவே ஒரு வருடத்திற்கு = ரூ.153,000,000,000 x 365 நாட்கள் = ரூ.55,845,000,000,000/– (ரூ.ஐம்பத்தைந்து லட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐநூறு கோடி). இந்த தொகைக்கு 10% இந்தியர் பொது செலவின வரிவசூல் செய்யப்பட்டிருந்தால் அரசுக்கு நம்பகத்தன்மையாக = ரூ.5,84,50,00,000,000/– (ரூ.ஐந்து லட்சத்து எண்பத்து நான்கு ஆயிரத்து ஐம்பது கோடி) வரை கிடைத்திருக்கும். இந்த பிரிவிற்குள் சுமார் 12 கோடி மக்கள் வரை வருவாய் ஈட்டு நுகர்வில் இருப்பார்கள்.

இதுவரை 6 கோடி பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை வகைகளின் மூலம் ஈடுபட்டுள்ள சுமார் 27 கோடி மக்களின் வருவாய் ஈட்டு மூலம் அரசுக்கு வர வேண்டிய வரிவருவாய் ஆதாயங்களை கணக்கிட்டுப் பார்த்துவிட்டோம். இனி எஞ்சியுள்ள 100 கோடி சாதாரண மக்களின் அன்றாட சராசரி பணசுழற்சி மூலம் அரசுக்கு ஏற்பட்டு வரும் வரிவருவாய் இழப்பீடுகளை கணக்கிட்டுப் பார்ப்போம்.

மேற்சொன்ன 100 கோடி சாதாரண பாமர மக்கள் தங்கள் அன்றாட வாழ்வாதார செலவினங்களுக்காக சராசரியாக ரூ.600/– வரை இன்றைய விலைவாசியின் அடிப்படையில் செலவிட்டு வருவதாக ஏற்கனவே நிரூபித்துவிட்டோம். (உதாரணமாக இன்றைய கட்டுமானப் பிரிவில் பணி செய்யும் ஒரு கொத்தனார் என்று சொல்லப்படுகின்ற மேஸ்திரியின் அன்றாட ஊதியமே இதற்கு சான்றாகும், சமீபத்திய பத்திரிக்கை செய்திப்படி இன்றைய விலைவாசி சுமார் 200–ல் இருந்து 300% உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது).

ஆக 100 கோடி மக்கள் x ரூ.600/– அன்றாடம் வாங்கும் திறன்.

ஆக மொத்தம் = ரூ.600,000,000,000/– (ரூ.அறுபதாயிரம் கோடிகள் வரை சராசரி அன்றாடம் வாங்கும் திறனாக உள்ளது). இதுவே ஒரு வருடத்திற்கு கணக்கிட்டால் = ரூ.600,000,000,000 x 365 நாட்கள் = ரூ.21,900,000,000,000/– (ரூ.இருபத்தொரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் கோடிகள்). இந்த தொகைக்கு 10% இந்தியர் பொது செலவின வரிவசூல் செய்யப்பட்டிருந்தால் அரசுக்கு நம்பகமாக = ரூ.2,19,000/– கோடிகள் வரை கிடைக்கும் முகாந்திரம் உள்ளது தெரிய வருகிறது.

இனி இந்திய அரசுக்கு 2012–2013 ஆம் நிதியாண்டில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வரிவருவாய் இழப்பீடுகளை கணக்கிட்டுப் பார்ப்போம்.

1) 90 லட்சம் பல்தொழில் (ஏற்றுமதி நிறுவனங்கள்) வருவாய் ஈட்டு சேவை வகைகள் மூலம் ஏற்பட்ட வரி வருவாய் இழப்பு = ரூ.3,28,000/– லட்சம் கோடி

2) 5 கோடியே 10 லட்சம் பல்தொழில் வருவாய் ஈட்டு சேவை வகைகள் மூலம் ஏற்பட்ட வரி வருவாய் இழப்பு = ரூ.5,58,000/– கோடி

3) 100 கோடி பாமர மக்களின் அன்றாட பணசுழற்சி மூலம் ஏற்பட்ட வரி வருவாய் இழப்பு = ரூ.2,19,000/– கோடி

மொத்தம் = ரூ.11,05,000/– கோடி

இந்த ரூ.பதினொரு லட்சத்து ஐந்தாயிரம் கோடியை அடிப்படை மூலதனமாக வைத்து தேசிய பல்பொருட்கள் அங்காடிகளை நிறுவுதல், முதல் வருட தொடக்கத்தில் இருந்து செயல்பட முடியும். முதல் வருட முதலீட்டு இலக்கு 2 லட்சம் அங்காடிகள், 2 லட்சம் கோடிகள் ஆகின்றது.

## கணக்கிட்டு உரை

### இந்திய அரசு – பொருளாதார வல்லமை பெறுதல் – தேவைப்படும் நிதி ஆதாரம் – மாதிரி கணக்கீடுகள் ஒரு பார்வை.

இந்த 150 கோடி ஜீவன்களின் அன்றாட உணவுத் தேவைகளை வாங்குவதற்கு முதல் வேளை உணவை வாங்கத் தேவைப்படும் பொருளாதார செலவின சக்தி = சராசரி ரூபாய்.60/– எனக் கொள்வோம்.

150கோடி x 60 ரூபாய் = ரூ.9,000 கோடி

இரண்டாம் வேளை உணவுத் தேவைக்காக வேண்டிய பொருளாதாரம் = ரூ.90/– எனக் கொள்வோம்.

150 கோடி x 90 ரூபாய் = ரூ.13,500 கோடி

மூன்றாம் வேளை உணவுத் தேவைக்காக வேண்டிய பொருளாதார செலவின சக்தி ரூ.70/– எனக் கொள்வோம்.

150 கோடி x ரூ.70 = ரூ.10,500 கோடி

இந்தியாவில் உள்ள சுமார் 150 கோடி ஜீவன்களின் ஓர் நாளைய உணவுத் தேவைக்காக செலவிடப்படும் வாங்கும் சக்தி தோராயமாக மொத்தத் தொகை ரூ.10,500 கோடி

| | |
|---|---|
| 2013ம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் தோராயமானமொத்த மக்கள் தொகை | 122 கோடி |
| இதர உயிர்வாழ் ஜீவன்கள் | 28 கோடி |
| **மொத்தம்** | **150 கோடி** |

| | |
|---|---|
| முதல் வேளை வாங்கும் சக்தி | 9,000 கோடி |
| 2ம் வேளை உணவு வாங்கும் சக்தி | 13,500 கோடி |
| 3ம் வேளை உணவு வாங்கும் சக்தி | 10,500 கோடி |
| **ஆக மொத்தம் 1 நாள் வாங்கும் சக்தி** | **33,000 கோடி** |

ஆக இந்தியாவின் 150 கோடி ஜீவன்களின் ஓர் நாளின் 3 வேளைக்கான உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய செலவாகும் வாங்கும் செலாவின சக்தியானது தோராயமாக ரூ.33000 கோடிகளாகிறது.

இதன் மூலம் தெரியவருவது என்னவென்றால் ஒவ்வோர் நாளும் உணவுத் தேவைக்காக ரூ.33000 கோடிகளுக்கு மேல் பரிவர்த்தனைகள் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்ததொகை மீது அன்றாடம் 10 சதவிகித பொது செலவின வரி வசூல் செய்திருந்தால் அரசுக்கு அன்றாடம் கிடைத்திருக்கும் வரிவசூல் வருவாய் ரூ.3300 கோடி உடனுக்குடன் தினசரி கிடைத்திருக்கும்.

1நாள் 10சதவிகித பொது செலவின வரி வசூல் = ரூ.3300 கோடி

1வருடத்திய 10சதவிகித பொது செலவின வரி வசூல் = ரூ.3300 x 365

= ரூ.1204500 கோடி

மக்களின் அடிப்படை உரிமைகளின் தலையாய தேவையான உணவுத் தேவைகளை வாங்குவதன் மூலம் மட்டுமே அரசுக்கு மிகப்பெரிய வருவாய் முகாந்திரம் உள்ளது தெளிவாகிறது.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் அடுத்து வருவது உடைகள்.

122 கோடி மக்களில் முதலில் மூத்த குடிமக்களின் உடைத் தேவைகளை கணக்கிடுவோம்.

மூத்தகுடி ஆண்மக்களின் 1நபர் தேவைக்கான வாங்கும் சக்தி சுமார் ரூ.100 எனக் கொள்வோம்.

சுமார் 22 கோடி ஆண் மூத்த குடிமக்களின் தேவைப்படும் வாங்கும் சக்தி சுமார் 22 கோடி x 100 = ரூ.2200 கோடி

மூத்த குடிமக்களில் 1 பெண்ணின் ஆடைத் தேவைக்கான வாங்கும் சக்தி தோராயமாக 1 நபர்க்கு = ரூ.350 எனக் கொள்வோம்.

| | |
|---|---|
| 22 கோடி ஆண் மூத்த குடிமக்களின் உடைத் தேவைக்கான வாங்கும் பொருளாதார சக்தி | ரூ.2,200 கோடி |
| சுமார் 10கோடி பெண் மூத்த குடிமக்களின் ஆடைகள் வாங்கும் பொருளாதார சக்தி சுமார் | ரூ.10 கோடி X ரூ.350 கோடி = ரூ.3500 கோடி |
| 10 கோடி மூத்த பெண்குடிமக்களின் உடைகள் வாங்கும் பொருளாதார சக்தி சுமார் | ரூ.3,500 கோடி |
| **ஆக மொத்தமுள்ள 32 கோடி மூத்த குடிமக்களின் உடைத்தேவைகளை வாங்கத் தேவைப்படும் மொத்த பொருளாதார சக்தி** | **ரூ.3,500 கோடி** |
| சுமார் 10 கோடி மத்திம வயது ஆண் எனக் கொண்டு உடைகள் வாங்கும் பொருளாதார சக்தி சுமார் ஒரு நபருக்கு ரூ.800 எனக் கொள்வோம் | |
| 10 கோடி ஆண்கள் X 800 ரூபாய் | ரூ.8000 கோடி |
| சுமார் 8கோடி மத்திம வயது பெண் எனக் கொண்டு உடைகள் வாங்கும் பொருளாதார சக்தி சுமார் ஒரு நபருக்க்கு ரூ.1200 எனக் கொள்வோம் | |
| 8 கோடி பெண்கள் X 1200 ரூபாய் | ரூ.9600 கோடி |
| **ஆக 18 கோடி மத்திம வயது மக்களின் உடைத் தேவைகளை பூர்த்தி செய்யத் தேவைப்படும் வாங்கும் சக்தி** | **8000 + 9600 = ரூ.17600 கோடி** |

இந்திய மக்கள் தொகை கணக்கீட்டில் இளையத் தலைமுறைகளில் எண்ணிக்கை சுமார் 50 கோடி பேர் எனக் கொள்வோம்.

| | |
|---|---|
| ஆண்களின் உடைத்தேவைக்கு சுமார் | ரூ.1,200 தேவை |
| பெண்களின் உடைத்தேவைக்கு சுமார் | ரூ.1,500 தேவை |
| ஆக மொத்தம் | ரூ.2,700 தேவை |

இதில் சராசரியாக ஓர் இளையதலைமுறை குடிமக்களுக்கு உடை வாங்கத் தேவைப்படும் பொருளாதார சக்தியாக சுமார் ரூ.1,400/– எனக் கொள்வோம்.

ஓர் இளைய தலைமுறையின் உடைத் தேவைக்கான வாங்கும் பொருளாதார சக்தி ரூ.1,400 X 50 கோடி இளைய தலைமுறை மக்கள் ரூ.7,000/– கோடி தேவைப்படுகிறது.

இறுதியாக மீதமுள்ள (சிறார்கள், மழலைகளின்) சிறுவர் சிறுமிகளின் உடைத் தேவைக்கான நபர்களின் எண்ணிக்கை சுமார் 22 கோடிகளாகக் கணக்கிடுவோம்.

சராசரியாக 1 நபருக்கு சுமார் ரூ.1000/– எனக் கொள்வோம் எனில் 22 கோடி சிறார்களின் உடைகள் வாங்கும் பொருளாதாரத் தேவைகள் ரூ.1000 X 22 கோடி = ரூ.22,000/– கோடி தேவை.

122 கோடி மக்களின் உடைத் தேவைக்கான வாங்கத் தேவைப்படும் பொருளாதார சக்தியின் ஒட்டு மொத்த தோராயமானதோர் கணக்கீடு.

| | |
|---|---|
| 32கோடி மூத்த குடி மக்களுக்கு தேவையான வாங்கும் சக்தி | ரூ. 5,700 கோடி |
| 18கோடி மத்திம வயதினரின் வாங்கும் சக்தி | ரூ. 17,600 கோடி |
| 50கோடி இளைய தலைமுறையினரின் வாங்கும் சக்தி | ரூ. 7,000 கோடி |
| 22கோடி சிறுவர் சிறுமியர்கான வாங்கும் சக்தி | ரூ. 22,000 கோடி |
| மொத்த வாங்கும் சக்தி | ரூ. 52,300 கோடி |

மீண்டும் சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்ட உடைத் தேவைகளை வாங்கத் தேவைப்பட்ட வாங்கும் சக்தியாக கூடுதலாக மேற்கொண்டு ரூ.2,700/– கோடியையும் சேர்த்து கணக்கிட்டால் மொத்தமாக வருவது ரூ.55,000/– கோடி எனக் கொள்வோம். இனி மூன்றாவது வாழ்வாதார அடிப்படைத் தேவையான வசிக்க வாழ்விடம் அடையும் வாங்கும் சக்தியைக் கணக்கிடுவோம். நாட்டில் வாழும் ஒட்டுமொத்த 122 கோடி மக்களை குடும்ப வரையறைக்குள் கொண்டு வருதல் வேண்டி, ஓர் குடும்பம் என்பது சராசரியாக ஆறு நபர்கள் எனக் கணக்கிட்டால் சுமார் 20 லட்சம் வீடுகள் தேவைப்படுகிறது. மேற்கொண்டு 28 கோடி இதர உயிர்வாழ் ஜீவன்களுக்கு உறைவிடத் தேவைக்காக கூடுதலாக மேலும் 1லட்சம் வீடுகள் தேவை எனக் கொள்வோம்.

ஆக நம் நாட்டின் வாழ்விடத் தேவை மொத்தம் 21 லட்சம் வீடுகள் ஆகும். ஓர் வீட்டிற்கு சராசரியாக சுமார் 900 சஅடி என்ற அளவுகோல் பொதுப்படையாய் கொள்வோம். ஆக 21லட்சம் வீடுகளுக்கு தேவைப்படும் அளவு 1890000000/– (189 கோடி) சதுரடி அடிகளாகும்.

இந்திய துணை கண்டத்தின் பரப்பளவு தேவையான அளவிற்கும் அதிகமாகவே உள்ளது. தெற்கு வடக்காக 3214 கி.மீ, கிழக்கு மேற்காக2993 கி.மீ.

இனி 21 லட்சம் வீடுகள் தேவையானதில் ஓர் வீட்டின், இன்றைய விலைவாசிகளின் அடிப்படையில், நிர்மாண செலவுகள் கணக்கிடும் போது,தனியொரு வீட்டிற்கு ஏற்படும் நிர்மானச் செலவைவிட ஒட்டு மொத்த கட்டுமான செலவுகள் கனிசமாக குறையும். ஓர் வீட்டின் தனிநபர் கட்டுமான நிர்மாணச் செலவுகள் சராசரியாக ரூ.5,40,000/–

இதுவே ஒட்டுமொத்த கட்டுமான நிர்மாணச் செலவுகள் கணக்கிட்டால் சராசரியாக ஒரு வீட்டிற்கு ஆகும் செலவு ரூ.3,60,000/– எனும் மதிப்பீட்டிற்குள் வரலாம்.

ஒட்டுமொத்த 21 லட்சம் X 3,60,000 = 75,60,000 கோடி, சமீபத்திய பத்திரிக்கை தகவல்படி சீனாவில் 90% மக்கள் நகர்புறத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தகவல் வந்து உள்ளது, ஆனால் நாம் இன்னும் அந்த நிலையை சிந்தித்துக்கூட பார்க்கவில்லை.

இனி அடுத்ததாக கல்வி உரிமைக்கான விலைவாசிப் பட்டியலை வாங்கும் சக்தியை கணக்கிடுவோம். தற்போது நாட்டில் பல்வேறு கல்வி பயிற்சியில் 60 கோடி இளைய தலைமுறையினர் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு 1 ஆண்டுக்கு கல்விக் கட்டணமாக தோராயமாக சுமார் ரூ.60,000 வரை பெறப்படுகிறது. ஆக 60 இலட்சம் இளைய தலைமுறையினருக்கான கல்வியை வாங்கும் சக்திக்கு ஒரு ஆண்டுக்கு சுமார் ரூ.60ஆயிரம் X 60 லட்சம் மக்கள் = 36 ஆயிரம் கோடி. இக் கணக்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கூடுதலாக 4 ஆயிரம் கோடி சேர்த்துக் கணக்கிட்டு தோராயமாக சுமார் ரூ.40 ஆயிரம் கோடி எனக் கணக்கிடுவோம்.

இனிஅடுத்ததாக மருத்துவ சேவை நாட்டில் உள்ள சுமார் 150 கோடி ஜீவன்களுக்கு ஒரு ஜீவனுக்கு 1 மாதத்திற்கு சராசரியாக சுமார் ரூ.100 எனக் கணக்கிடுவோம். ஆக 150 கோடி ஜீவன்களின் மருத்துவத்திற்கு 1 மாதத்திற்குண்டான சராசரி தேவை ரூ.15 ஆயிரம் கோடி, ஒரு வருடத்திற்கு சராசரி ரூ.15 ஆயிரம் கோடி X 12 மாதங்கள் = 60 ஆயிரம் கோடி (தேசிய ஆய்வு அறிக்கையில் சராசரியாக ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் தேவைப்படுவதாக தகவல் உள்ளது. இது தவிர நாட்டின் போக்குவரத்து மேலும் பொழுது போக்கு ஆகிய இரு துறைகள் சார்ந்த வாங்கும் சக்தியும் மேற்கூறிய கணக்கீட்டின்படியே தோராயமாக அமைவதால்.

**கணக்கீடு:**

1. உணவுத் தேவை ஒட்டு
மொத்த வாங்கும் சக்தி ரூ.12045000 கோடி
2. உடைத் தேவை ஒட்டு
மொத்த வாங்கும் சக்தி ரூ. 55000 கோடி
3. உறைவிடத் தேவை கட்டுமானம்
ஒட்டு மொத்த வாங்கும் சக்தி ரூ.7560000 கோடி
4. கல்வித் தேவை ஒட்டு
மொத்த வாங்கும் சக்தி ரூ. 40000 கோடி
5. மருத்துவத் தேவை ஒட்டு
மொத்த வாங்கும் சக்தி ரூ. 60000 கோடி
6. போக்குவரத்து தேவை ஒட்டு
மொத்த வாங்கும் சக்தி ரூ. 60000 கோடி
7. பொழுது போக்குத் தேவை
ஒட்டுமொத்த செலவின வாங்கும்
சக்தி ரூ. 60000 கோடி

**மொத்தம் ரூ.19820000 கோடி**

ரூபாய் நூற்று தொன்னூற்று எட்டு லட்சத்து இருபதாயிரம் கோடி வரை ஆகின்றது. 19820000 ஆனால் நாம் இன்னும் ஐந்து லட்சத்து எழுபதாயிரம் கோடிக்கு மேல் வரி வசூல் இலக்கை முடக்கிவிடாமல், எட்டக் கூட முடியாமல், கருப்பு பணம் உருவாகுவதற்கு அனைத்துவிதங்களிலும் வழிவிட்டுவிட்டோம்.

இந்த வெட்கக் கேடான தலைகுனிவான அவல நிலை மாற வேண்டுமெனில் **தனியொரு விதி செய்வோம்** எனும் உயரியக் கோட்பாட்டினை, ஏற்று செயல்படுத்தினால் மட்டுமே முடியும்.

## நம் நாடு தன் நிறைவை நோக்கிச் செல்வதற்கான முயற்சிக்குத் தேவைப்படும் நிதி ஆதாரம் ஓர் கண்ணோட்டம்:

| | |
|---|---|
| ஒட்டு மொத்த உணவுத் தேவைக்கு | ரூ.1204500 லட்சம் கோடி |
| ஒட்டுமொத்த உடைத்தேவைக்கு | ரூ. 55000 கோடி |
| ஒட்டுமொத்த வசிப்பிட தேவைக்கு | ரூ.7560000 லட்சம் கோடி |
| ஒட்டுமொத்த மருத்துவ தேவைக்கு | ரூ. 60000 கோடி |
| ஒட்டுமொத்த கல்வித் தேவைக்கு | ரூ. 40000 கோடி |
| ஒட்டுமொத்த போக்குவரத்து தேவைக்கு | ரூ. 60000 கோடி |
| ஒட்டுமொத்த பொழுதுபோக்கு தேவைக்கு | ரூ. 60000 கோடி |
| **ஆக மொத்த தேவை** | **ரூ.19820000 லட்சம் கோடி** |

ஆகவே என்று ஏறத்தாழ ரூ.சுமார் ரூ.300 லட்சம் கோடி வரி வருவாய் வசூலாகவும், மற்றும் இதர வருவாய் வாயிலாகவும் ஈட்டுகிறோமோ? அப்போதுதான் நாம் நமது நாட்டை வல்லரசு நாடு எனும் தகுதியை அடையச் செய்ய முடியும். வெறும் கனவுகள் காண்பது மட்டுமே நிஜமாகாது, ஆக்கபூர்வமான சிந்தனைகள் மற்றும் அதற்கேற்ற செயல்பாடுகளும் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். முழுவதும் நம் சொந்த நாட்டின் மக்களைக் கொண்டே தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட பங்கு அளிப்பின் மூலமாக மட்டுமே மேற்கண்ட தொகையை நாம் வருவாயாக அடைந்துவிட முடியும். அதற்குண்டான கட்டமைப்புகளை பின்வரும் பகுதியில் காண்போம்.

### முகவரியற்ற சேவை – வணிக முகாந்திரங்கள்:

1. சாலையோர நடைபாதை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
2. தலைச்சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
3. மிதிவண்டி சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
4. தள்ளுவண்டி சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
5. இழுவை வண்டி சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
6. கைப்பை சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
7. தானியங்கி வண்டி சுமை வணிக வருவாய் ஈட்டு நுகர்வோர்
8. பல்தொழில் சேவை சுய வருவாய் ஈட்டு நுகர்வோர்

மேலும் இன்னும் பல்வேறு துறைகளில் பொருளாதாயம் தேடும் அனைத்து மக்களுக்கும் ஓர் சமூகப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். சுமார் பலகோடி பொதுமக்கள் இந்த சூழ்நிலைக்குள் சிக்குண்டு வாழ்வாதார கேள்விக் குறியிலேயே வாழ்வை கழிக்கின்றனர். இந்தக் கோட்பாடுகளை ஆக்கப்பூர்வமாக நடைமுறைப்படுத்தி செயல்பட்டால் நம்பகத் தன்மையாகக் கிடைக்கப் பெறும் பலன்கள்.

## கணக்கிட்டு உரை:

## நாட்டின் நிதி ஆதாரம் மேம்படுத்துதல் – நம்பகத்தகுந்த வழிகாட்டுதல் கட்டமைப்புகள் – கணக்கீடுகள் மூலம் நிரூபித்தல்

நாட்டில் உள்ள மொத்த கிராமங்கள் = 6 லட்சத்து 41 ஆயிரம் வரை உள்ளதாக தகவல் உள்ளது. நாம் கணக்கீட்டிற்காக 7 லட்சம் கிராமங்கள் உள்ளதாக எடுத்து கொள்வோம்.

ஒரு கிராமத்திற்கு ஒரு பல்பொருட்கள் தேசிய அங்காடி வீதம் 7 லட்சம் கிராமங்களுக்கு 7 லட்சம் தேசிய அங்காடிகள் நிறுவப்பட வேண்டும். இது 5 வருடத்திற்குள் செய்ய வேண்டிய இலக்காகும். ஆக முதல் வருடத்திற்கு மட்டும் 2 லட்சம் தேசிய அங்காடிகள் நிறுவுதல் என்று இலக்கு எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டும். இந்த கண்ணோட்டத்தில் வரும் கணக்கீடுகளைக் காண்போம்.

முதல் வருட இலக்கு = 2 லட்சம் தேசிய அங்காடிகள்.

ஒரு தேசிய அங்காடிகள் மூலம் பயனடையும் பயனாளிகள் ஏறத்தாழ = 1800 மக்கள் வரை, இந்த 1800 மக்களில் ஒரு தனி நபரின் அன்றாட செலவின வரம்பு = ரூ.100/– வரை ஆகும். மொத்தம் = 1800 மக்கள் x ரூ.100 அன்றாட செலவினம் = ரூ.1,80,000/– வரை செலவிடப்படுகிறது. இனி ஒரு வருடத்திற்குள் சராசரியாக நடைபெறும் ஒட்டு மொத்த செலவினங்கள் = ரூ.1,80,000/– x 365 நாட்கள் = ரூ.65,700,000/– (ரூ.அறுநூற்று ஐம்பத்து ஏழு லட்சம் கோடிகள்). இந்த தொகைக்கு 10% இந்தியர் பொது செலவின வரிவசூல் செய்யப்படும்போது அப்போதைக்கு அப்போதே அரசுக்கு ஒரு வருடத்திற்குள் நம்பகமாக கிடைத்து விடும் வரிவசூல் தொகை = ரூ.65,70,000/– கோடிகள் வரை கிடைத்து வருகிறது. ஒரு தேசிய அங்காடியின் மூலம் மட்டுமே அரசுக்கு இவ்வளவு பெரிய வரி வருவாய் கிடைக்க நம்பகமான முகாந்திரம் இருக்கும்போது, முதல் வருட இலக்கான 2 லட்சம் தேசிய அங்காடிகள் மூலம் இன்னும் எவ்வளவு பெரிய அளவில் அரசுக்கு வரிவருவாய் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

2 லட்சம் தேசிய அங்காடிகள் x ரூ.65,70,000/– = ரூ.131,400,000,000,000/–

(ரூ. நூற்று முப்பத்து ஒரு லட்சத்து நாற்பதாயிரம் கோடி)

ஏற்கனவே அறியப்பட்டுள்ள, 127 கோடி மக்களின் செலவினத்தின் மூலம் செய்யப்பட்ட வரி ஏய்ப்பு இதன் விளைவாக அரசுக்கு ஏற்பட்ட வரி வருவாய் இழப்பு

= ரூ.11,050,000,000,000/– லட்சம் கோடி

இந்த தொகையை மூலதனமாக வைத்து
முதல் வருட இலக்காக நிறுவப்பட வேண்டிய
2 லட்சம் தேசிய அங்காடிகளுக்கு தேவைப்பட்ட

| | |
|---|---|
| முதலீடு | = ரூ.2,000,000,000,000/– லட்சம் கோடி |
| மீதி கையிருப்பு | = ரூ.9,050,000,000,000/– லட்சம் கோடி |
| முதல் வருட முடிவிற்குள் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வரி வருவாய் ஆதாயம் | = ரூ.131,400,000,000,000/– லட்சம் கோடி |
| ஆக மொத்த கையிருப்பு | = ரூ.140,450,000,000,000/– லட்சம் கோடி |
| 2–ம் வருட இலக்கான 2 லட்சம் தேசிய பல்பொருட்கள் அங்காடிகள் நிறுவ தேவைப்பட்ட முதலீடு | = ரூ. 2,000,000,000,000/– லட்சம் கோடி |
| மீதி கையிருப்பு | = ரூ.138,450,000,000,000/– லட்சம் கோடி |
| 3–ம் வருட இலக்கான 2 லட்சம் தேசிய பல்பொருட்கள் அங்காடிகள் நிறுவ தேவைப்பட்ட முதலீடு | = ரூ. 2,000,000,000,000/– லட்சம் கோடி |
| மீதி கையிருப்பு | = ரூ.136,450,000,000,000/– லட்சம் கோடி |
| 3–ம் வருட முடிவிற்குள் 4 லட்சம் அங்காடிகள் மூலம் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வரி வருவாய் ஆதாயம் | = ரூ.276,800,000,000,000/– லட்சம் கோடி |
| மீதி கையிருப்பு | = ரூ.413,250,000,000,000/– லட்சம் கோடி |
| 4–ம் வருட இலக்கான எஞ்சியுள்ள 1 லட்சம் பல்பொருட்கள் அங்காடிகள் நிறுவ தேவைப்பட்ட முதலீடு | = ரூ. 1,000,000,000,000/– லட்சம் கோடி |
| மீதி கையிருப்பு | = ரூ.412,250,000,000,000/– லட்சம் கோடி |
| 5–ம் வருட முடிவிற்குள் அரசுக்கு 7 லட்சம் தேசிய பல்பொருட்கள் அங்காடிகள் மூலம் கிடைக்கப்பெற்ற வரி வருவாய் ஆதாயம் | = ரூ.277,457,000,000,000/– லட்சம் கோடி |
| 5–ம் வருட மொத்த வரி வருவாய் ஆதாயம் | = ரூ.689,707,000,000,000/– லட்சம் கோடி |

(ரூ.அறுநூற்று எண்பத்து ஒன்பது லட்சத்து எழுபதாயிரத்து எழுநூறு கோடி)

ஆக மொத்தம் நம் இந்திய அரசுக்கு, தனி ஒரு விதி செய்வோம் அடிப்படை கட்டமைப்பு வழிகாட்டுதல்படி செயல்படுத்தப்பட்டால் முதல் வருடம் முடிவில் இருந்து 5–ம் வருட முடிவிற்குள் மாபெரும் ஒரு பிரம்மாண்டமான வரிவருவாய் ரூபாய் ஏறத்தாழ அறுநூறு லட்சம் கோடிகளுக்கு மேல் வந்து 900 லட்சம் கோடி வரை கிடைப்பதற்குண்டான உண்மையான முகாந்திர ஆதாரம் இருப்பது மிகவும் நம்பகத்தகுந்த கட்டமைப்புகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆக இதன் மூலம் தெரிய வருவது என்னவென்றால் நம் நாட்டிற்குள்ளேயே ஒவ்வொரு வருடமும் இன்றைய விலைவாசியின் அடிப்படையில் சுமார் 500 லட்சம் கோடிகளுக்கு மேல் ஒவ்வொரு வருடமும் இன்றைய விலைவாசியின் அடிப்படையில் கைமாறி, கைமாறி கறுப்பு பணமாக பதுக்கப்படுவது தெரிய வருகிறது.

அறிவுசார் அறிஞர் பெருமக்கள் தனி ஒரு விதி செய்வோம் அடிப்படை கட்டமைப்புகளை நன்கு ஆய்வு செய்து உடனடியாக செயல் ஆக்க வடிவத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தால் இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் செய்யும் ஒரு மிகப்பெரிய உதவியாக அமையும். மேலும் நாடு முழுவதும் ஒரே குடையின்கீழ் ஆளுமை செய்ய வழிவகைகள் எவ்வித தடங்கலும் இன்றி எளிதாக நிறைவேறும் என்பதை பணிவுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

## தனி ஒரு விதி செய்வோம் – மாதிரி நிதிநிலை அறிக்கை வரைவு:

தனி ஒரு விதி செய்வோம் கோட்பாட்டு வழிகாட்டுதலின்படி பெறப்பட்ட வரி வருவாய் நிதி ஆதார அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை:

1. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வரும் 20 கோடி அடிப்படை உடல் உழைப்பு பணியாட்களுக்கு முதல் வருட ஒட்டு மொத்த அன்றாட வாழ்வாதார ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு = ரூ.12 லட்சம் கோடிகள்.

2. தேசிய கட்டமைப்புகள் உள்நாட்டு சேவைகள் சுற்றுவட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதிஒதுக்கீடு = ரூ.18 லட்சம் கோடிகள்.

3. தேசிய கட்டமைப்புத் திட்டங்கள் நீர் ஆதார சுற்று வட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.55 லட்சம் கோடிகள்.

4. தேசிய உணவு உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.35 லட்சம் கோடிகள்.

5. தேசிய ஜவுளி உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.15 லட்சம் கோடிகள்.

6. தேசிய வசிப்பிட உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட கட்டுமானத்திற்கு ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு (ஒரு முறை ஆகும் நிரந்தர செலவினம்) = ரூ.80 லட்சம் கோடிகள்.

7. தேசிய சுகாதார மருந்துகள் உற்பத்தி மேம்பாட்டு சுற்று வட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.5 லட்சம் கோடிகள்.

8. தேசிய கல்வி ஆராய்ச்சி உற்பத்தி மேம்பாட்டு சுற்று வட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.25 லட்சம் கோடிகள்.

9. தேசிய பொழுதுபோக்கு விளையாட்டு பங்களிப்பு உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட கட்டுமானத்திற்கு ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.15 லட்சம் கோடிகள்.

10. தேசிய போக்குவரத்து உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட ஒழுங்குமுறை மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.10 லட்சம் கோடிகள்.

11. தேசிய பாதுகாப்பு, பேரிடர் தடுப்பு உற்பத்தி மேம்பாட்டு சுற்றுவட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.25 லட்சம் கோடிகள்.

12. தேசிய இதர நானாவித பல்நோக்கு தேவைகள் மேம்பாட்டு சுற்றுவட்ட ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மேலாண்மை கட்டுமானத்திற்கு நிதி ஒதுக்கீடு = ரூ.5 லட்சம் கோடிகள்.

மொத்த நிதி ஒதுக்கீடுகள் = ரூ.300 லட்சம் கோடிகள்.

நாட்டின் மொத்த வருவாய் நிதி ஆதாரம் = ரூ.689,70,700 லட்சம் கோடிகள்.

நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு = ரூ.300,00,000 லட்சம் கோடிகள்

மீதி கையிருப்பு = ரூ.389,70,700 லட்சம்கோடிகள்.

தனி ஒரு விதி செய்வோம் பார்வையில் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுப்பதை எளிமைப்படுத்தும் விதமாக சதவீத அடிப்படையில் கணக்கிடப்படாமல் மணிக்கணக்கில் கணக்கிடப்பட்டு கொடுக்கும்படி மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அதாவது 1 மணி நேரத்திற்கு இவ்வளவு கூலி / ஊதியம் என்று கணக்கிடப்பட்டு 8 மணி நேரத்திற்கு, சில ஆபத்தான மற்றும் சிரமமான பணிகளுக்கு 6 மணி நேர கால வரை என்று ஒவ்வொரு நாளின் ஊதியம் கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட வேண்டும்.

## தேசிய உடல் உழைப்பு ஊதியங்கள் கணக்கிடுதல் மாதிரி வரைவு:

## அடிப்படை உடல் உழைப்பு பணியாளர்கள்:

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில்

உள்ள அடிப்படை உடல் உழைப்பு மக்களுக்கு வழங்கப்படும்

அன்றாட கூலி விவரம் (ஒரு மணி நேரத்திற்கு) = 25 ரூபாய்.

ஒரு மாதத்தின் 25 வேலை நாட்களுக்கு ஊதியம் = 200 ரூபாய். (மாத ஊதியம்)

300 வேலை நாட்களுக்கு (வருட ஊதியம்) = 60,000 ரூபாய்.

## அடிப்படை உடல் உழைப்பு சேவை, நிர்வாக சேவை பணியாளர்கள்:

ஒரு மணி நேரத்திற்கு = ரூ.50/–

6 / 8 மணி நேரத்திற்கு = ரூ.400/– (ஒரு நாளின் ஊதியம்)

ஒரு மாதத்தின் ஊதியம் = ரூ.10,000/–

300 வேலை நாட்களுக்கு (வருட ஊதியம்) = ரூ.1,20,000/–

## ஆராய்ச்சி மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப நிர்வாக சேவை, பணியாளர்கள்:

ஒரு மணி நேரத்திற்கு = ரூ.100/–

8 மணி நேரத்திற்கு (ஒரு நாளின் ஊதியம்) = ரூ.800/–

ஒரு மாதத்தின் ஊதியம் = ரூ.20,000/–

300 வேலை நாட்களுக்கு (வருட ஊதியம்) = ரூ.2,40,000/–

## ஆராய்ச்சி மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப நிர்வாக மேலாண்மை சேவை, பணியாளர்கள்:

| | |
|---|---|
| ஒரு மணி நேரத்திற்கு | = ரூ.200/– |
| 8 மணி நேரத்திற்கு (ஒரு நாளின் ஊதியம்) | = ரூ.1600/– |
| ஒரு மாதத்தின் ஊதியம் | = ரூ.40,000/– |
| 300 வேலை நாட்களுக்கு (வருட ஊதியம்) | = ரூ.4,80,000/– |

### குறிப்பு:

நாட்டில் நடைபெறும் அனைத்து வேலைகளுக்கும் ஆன ஊதியங்கள் மணிக்கணக்கில் கணக்கிடப்பட்டு ஒரு வருடத்தில் 300 வேலை நாட்கள் பணிபுரியும் படி மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதுபோன்ற ஏற்பாட்டில் பணி வரன் முறையிலோ, அல்லது ஊதியங்கள் கணக்கிடும் முறையிலோ எந்த குழப்பங்களும் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும். மேலும் இன்றைய காலக்கட்டத்தில் மின்னணு ஆளுமை கண்காணிப்பின் கீழ் நிர்வாகம் மிக சிறப்பாக நடைபெறுவதற்கு உண்மையாக நம்பகத்தன்மை அபரிதமாக உள்ளது கண்கூடாக தெரிய வரும்.

மேலும் அனைத்து நிர்வாக சேவை பணியில் உள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் நோக்கத்தில் இயல்பாக அவர்களது வேலைநாட்கள் மற்றும் அனுபவத்தை கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும். எந்த ஒரு பதவிக்கும் நேரடியாக பதவி உயர்வு வழங்க அனுமதிக்க கூடாது. எவ்வளவு உயர்ந்த கல்வி பெற்றவராக இருந்தாலும் நேரடியாக பதவி நியமனத்திற்கு அனுமதி அளிக்கக்கூடாது. தொழில்நுட்ப மேலாண்மை சேவையில் தங்களின் மேம்பட்ட சாதனைகளை நிரூபிப்பவர்களுக்கு வெகுமதி மற்றும் பாராட்டு பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட வேண்டும். இது ஒரு சிறப்பு தகுதியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள் – அனைத்து பணிகளுக்கும் வருகை பதிவு செய்தல் – வழிகாட்டுதல்:

அனைத்து உடல் உழைப்பு சேவை பாமர மக்கள் மற்றும் நிர்வாக சேவை உழைப்பு மக்கள் அனைவரும் தங்களின் அன்றாட வாழ்வாதார ஊதியத்திற்காக பணி செய்ய வேண்டி பணியிடங்களுக்கு சென்று பணிசெய்யும் பொருட்டு, அவரவர் தங்களின் “இந்தியர் பொது செலவின வரிவசூல்” பயோமெட்ரிக் மின்னணு பரிவர்த்தனை அட்டையை பணிபுரியும் இடத்தில் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ள பயோமெட்ரிக் மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாக பரிவர்த்தனைக் கருவியில் உள்நுழைத்து அதேசமயம் தங்களின் விரல்ரேகை பதிவையும் பதிவு செய்து உண்மையான வருகையை நிலை நிறுத்த வேண்டும். இப்படி செய்வதின் மூலம் ஒவ்வொரு பணிபுரியும் நிறுவனத்திலும் மிகச் சரியாக எத்தனை நபர்கள் அன்றைக்கு பணிக்கு வந்துள்ளனர் என்ற புள்ள விவரம் துல்லியமாக நிர்வாகத்திற்கு கிடைக்கப் பெற்று விடும். இந்த புள்ளிவிவரம் கொண்டு வருகை புரிந்துள்ள பணியாளர்களுக்கு அன்றைக்கு உண்டான பணி ஊதியம் வழங்க கணக்கிடுதல் வழிகாட்டுதலுக்கு மிகவும் உதவியாக இருக்கும். மேற்கொண்டு எந்தவித ஏமாற்று செயலுக்கும் அல்லது ஒழுங்கீனமான செயலுக்கும் வழிவகைகளுக்கு இடமில்லாமல் போகும்.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள்:

## நாட்டில் நடைபெறும் மக்கள் நலப்பணிகளுக்கு நிதி ஒதுக்குதல் – ஒழுங்கு முறைப்படுத்துதல்

நாம் பரவலாக அடிக்கடி கேள்விப்படும் செய்தியை இங்கு ஆய்வு செய்வோம். அதாவது மத்திய அரசு எங்களை (மாநில அரசுகளை) மாற்றாந்தாய் பிள்ளையைப் போல் நடத்துகின்றது. எங்களுக்கு நாங்கள் கேட்ட நிதியை ஒதுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்து நாங்கள் கொடுத்த நிதியை இவர்கள் (மாநில அரசுகள்) சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று இருதரப்பினரும் ஒருவரையொருவர் குற்றச்சாட்டுகள் கூறிக் கொள்வதிலும், அறிக்கை விடுவதிலும் தன்முனைப்பைக் காட்டுகின்றனரே தவிர உண்மையாக மக்கள் நலப் பணிகளைப் பற்றி இவர்களுக்கு (மத்திய மாநில அரசுகளுக்கு) உண்மையாகவே எந்த சிந்தனை இல்லை என்பதுதான் நிஜமான காட்சியாகும்.

இதற்கெல்லாம் ஒரே தீர்வு அனைத்து நடவடிக்கைகளையும் மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாகத்தின் கீழ் மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் நிதி ஒதுக்குவது மட்டுமே ஒரே தீர்வாக இருக்க முடியும்.

உதாரணமாக மாநில அரசுக்கு ஒரு குறிப்பிட்ட மக்கள் நலப்பணிக்கு தேவையான நிதி ஆதாரத்தை மத்திய அரசிடமிருந்து கோரப்படுகிறது. இந்த நடவடிக்கையை எப்படி நிர்வகிப்பது?

மாநில அரசுகள் தான் கோர விரும்பும் மக்கள் நலப்பணிக்கு ஆன ஒரு தலைப்பின் கீழ் (உதாரணமாக கழிவு நீர் வழித்தடப் பாதை அமைத்தல் நிர்வாக மேலாண்மை) என்று வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, அந்தக் கணக்கிற்குண்டான ஒரு பயோமெட்ரிக் மின்னணு பரிவர்த்தனை எண்கள் வழங்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அந்தப் பதிவேற்றம் செய்யப்பட்ட வங்கிக் கணக்கின் தகவல்களை உடனுக்குடன் மத்திய அரசின் நிர்வாகத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இப்பொழுது மத்திய அரசு முறைப்படி திட்டம் சார்ந்த அனைத்து பதிவேடுகளையும் சரிபார்த்து ஒப்புதல் வழங்கிய பின்னர் திட்டத்திற்கான நிதிகளை மாநில அரசின் திட்டம் சார்ந்த பயோமெட்ரிக் மின்னணு பரிவர்த்தனை வங்கிக் கணக்கீட்டிற்கு நிதிகளை ஒதுக்கீடுதல் செய்யப்பட வேண்டும்.

நடைபெற்று வரும் மக்கள் நலத்திட்டங்களுக்கு அன்றாடம் நடைபெற்று வரும் பணிகளுக்கேற்ப செய்யப்படும் செலவினங்களை மட்டுமே அன்றன்றைக்கு பயோமெட்ரிக் மின்னணு பரிவர்த்தனை அட்டை மூலம் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். மேற் கொண்டு எந்த செலவினங்களையும் செய்து கொள்வதற்கு முடியாது. மேலும் அன்றாடம் எந்த அளவிற்கு பணிகள் நடைபெற்றன, அந்த பணிகளுக்குண்டான செலவினங்கள் எந்த அளவில் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற அனைத்து தகவல்களும் உடனுக்குடன் அரசின் மையக் கட்டுப்பாட்டிற்கு மின்னணு பரிவர்த்தனை மூலம் துல்லியமாக தெரிந்து விடும். இதன் மூலம், இதற்கு பிறகு போடப்படும் அனைத்து திட்டங்களும் மிகவும் எளிதாகவும், உண்மையாகவும் கையாள முடியும் என்பது கூடுதல் சிறப்பாகும்.

## கணக்கீடு முறை உதாரணம்:–

| | | |
|---|---|---|
| திட்டம் சார்ந்த பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் ஒரு இயந்திரத்தின் (ஜேசிபி) 1 மணிநேர உழைப்பிற்கான கூலி (ஓட்டுநர் பணியும் சேர்த்து) | = | சுமார் 100 ரூபாய். |
| 8 மணிநேர உழைப்பிற்கான கூலி | = | சுமார் 800 ரூபாய். |
| திட்டம் சார்ந்த பணிகளுக்கு பெறப்படும் மனித அடிப்படை உடல் உழைப்பிற்கான அன்றாட தனி நபர் கூலி | = | சுமார் 200 ரூபாய். |

## திட்டம் சார்ந்த பணிகளுக்கு ஒரு நாளைய மொத்த கூலி கணக்கிடுதல்:

| | | |
|---|---|---|
| திட்டம் சார்ந்த பணிகளுக்கு பெறப்படும் அடிப்படை மனித<br>உடல் உழைப்பிற்கான தனிநபர் அன்றாட கூலி | = | 200 ரூபாய். |
| 50 அடிப்படை உடல் உழைப்பு பாமர<br>மக்கள் அன்றாட கூலி | = | 10,000 ரூபாய். |
| இயந்திரத்திற்கான ஒருநாள் கூலி<br>(ஓட்டுநர் கூலி, எரிபொருள் செலவினம் சேர்த்து | = | 800 ரூபாய். |
| திட்டத்தில் பணிபுரியும் சுமார்<br>திட்டத்தில் பணிபுரியும் தொழில்நுட்பம்,<br>நிர்வாக சேவை பணியாளர்கள் சுமார்<br>10 நபர்களின் அன்றாட கூலி | = | 8,000 ரூபாய் |
| இதர நானாவித செலவினக் கூலி தோராயமாக | = | 2,000 ரூபாய் |
| ஒட்டு மொத்த ஒரு நாளைய செலவினக்கூலி | = | 21,000 ரூபாய் |

ஆக எந்தவொரு திட்டம் சார்ந்த பணிகளுக்கும் கணக்கிடப்பட்டு வரும் தொகைகளுக்கு மேல் வேறு எந்த செலவினங்களுக்கும் பரிவர்த்தனை செய்யவே முடியாது. ஆகையால் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையில் எந்தவித கருத்து பேதங்கள், சர்ச்சைகள் எழுவதற்கு வாய்ப்பில்லை என்பது உறுதியாக தெரியவரும். மேலும் மேற்கண்ட இந்த ரூ.21,000/–க்குண்டான பணிகளின் அளவீடுகள் அடங்கிய தகவல்கள் உடனுக்குடன் அரசின் கட்டுப்பாட்டிற்கு சென்றுவிடுவதால் மேற்கொண்டு செய்ய வேண்டிய திட்டப்பணிகளை மிக எளிதில் கணக்கிட்டு கையாள முடியும் என்பது கூடுதல் சிறப்பாகும்.

மேலும் ஒரு கூடுதல் தகவலாக அன்றன்றைக்கு செய்து முடிக்கப்பட்ட பணிகளின் அளவீடுகளை முறைப்படி, அதற்குண்டான செலவினங்களை கணக்கிட்டு மத்திய கட்டுப்பாட்டிற்கு அனுப்பப்பட்டு அடுத்த கட்டமான செய்ய வேண்டிய பணிகளுக்கு உடனுக்குடன் முறைப்படியான அனுமதி பெற்று அதற்குண்டான செலவினங்களை எடுத்துக் கொள்ளும்படி மின்னணு நிர்வாக ஆளுமையின் கீழ் துல்லியமான நிர்வாக மேலாண்மை அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## <u>தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள்:</u>

### <u>ஊழல் பற்றிய தன்னிலை விளக்கம்</u>

நாட்டில் ஊழலை ஒழித்துவிடுவோம் வேறொடு அழித்துவிடுவோம் என்று வாய் மூலம் பேசிவரும் சக்திவாய்ந்த மனிதர்களுக்கு கூற விரும்புவது முதலில் நீங்கள் தெளிவு பெறுங்கள் எது ஊழல் என்று?

என்னைப் பொறுத்தவுரை தற்போது புழக்கத்தில் இருக்கும் ரொக்க ரூபாய் நாணயங்கள் அனைத்தும் ஊழலின் மறு உருவமே ஆகும். எவரிடமிருந்து எவருக்கு எப்படி கைமாறும், எப்போது கைமாறும் என்பது வெளிப்படையாக எவருக்குமே தெரியாது. அதனால்தான் ரொக்க ரூபாய் நாணயங்களை வெளிப்படைத்தன்மையற்றது என்று கூற வருகிறேன். எங்கெல்லாம் வெளிப்படைத்தன்மை மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு நிகழ்வுகள் பரிமாறப்படுகிறதோ அந்த நிகழ்வுகளுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக உள்ள ஒரே பெயர்தான் “ஊழல்” என்பதாகும். இந்த ஊழல்களுக்கு ஒட்டுமொத்த சொந்தக்காரர்தான் இப்போது புழக்கத்தில் உள்ள “ரொக்க ரூபாய் நாணயங்கள்” ஆகும். ஆகையால்தான் இந்த ரொக்க ரூபாய் நாணயங்களை முற்றிலும் புழக்கத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். இதை நீக்காத வரை எவரும் இந்த பூமியில் தங்களின் அன்றாட வாழ்க்கையில் ஊழல்களே செய்யாமல் இருக்க முடியாது.

இவர்களால் (அரசியல்வாதிகள், அரசு அலுவலகங்கள்) ஒருபோதும் ஊழலை ஒழித்துக்கட்டவே முடியாது. வெறும் வாய்ஜாலத்தில் பேசிக் கொண்டே நாட்களை கடத்திக் கொண்டே செல்ல முடியுமே தவிர வேறு எதையும் உண்மையாக சிந்தித்து சாதித்து காட்ட முடியாது. “உண்மையான நாட்டுப்பற்று சிந்தனை உள்ளவர்களால் மட்டுமே இந்த நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் உண்டான நல்ல நிகழ்வுகளைப் பற்றி ஓய்வின்றிய தேடுதலில் சிந்திக்கவும் அதை செயல் வடிவத்தில் கொண்டு வரவும் சதாகாலமும் தேடுதலில் தங்கள் வாழ்நாட்களின் பெரும் பகுதியை செலவிட்டுக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்களை பற்றி இந்த சமூகம் எப்போது தெரிந்து கொள்ளும் என்பது கால நேரத்திற்கு மட்டுமே தெரிந்த உண்மையாகும்.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள்:

## மின்னணு ஆளுமை கண்காணிப்பு நிர்வாகம் செயல்படும் கட்டமைப்புகள் – தன்னிலை விளக்கம்:

அறிவிற் சிறந்த இந்திய நாட்டு குடிமக்களே! நாம் இத்தனை ஆண்டு காலம் பல சரித்திர நிகழ்வுகளை வெள்ளைத்தாளில் எழுது பொருள் கொண்டு பதிவு செய்து பல்வேறு சாதனைகளை செய்து வந்துள்ளோம். இதன் விளைவாக காடுகளில் வளர்க்கப்பட்ட பசுமையான மரங்கள் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு காகித தயாரிப்பு உற்பத்திக்காக, இயற்கை வளங்களான காடுகள் அழிக்கப்பட்டு இயற்கையாக பெறப்படும் மழைநீர் ஆதாரம் முழுமையாக கிடைக்கப்பெறாமல் செய்து விட்டோம் என்பது வெட்கக்கேடாகும்.

இதை முற்றிலும் தடுத்து நிறுத்தி மேம்பட்டதொரு அறிவியல் முயற்சியாக கணினிவியல் மற்றும் மின்னணுவியல் போன்ற ஒப்பற்ற சாதனங்களைப் பயன்படுத்தி வந்தோமானால் மேற்சொல்லப்பட்ட சீரழிவிற்கு காரணமாக இருக்க மாட்டோம் என்பது ஒப்பற்ற உண்மையாகும்.

நாம் வாழும் காலத்திலும், இனி வரும் காலத்திலும் அனைத்து நிகழ்வுகளையும் கணினிவியல் மின்னணு கையடக்க சாதனமான "பென்டிரைவ், கார்டு ரீடர்" போன்ற மேம்பட்ட பொருட்களை உபயோகித்து தற்போது புழக்கத்தில் இருக்கும் காகித எழுத்து பயிற்சிகளை நிறுத்தி முற்றிலும் முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் என்பது சிறப்பான செய்தியாகும்.

உதாரணமாக தற்போது பள்ளிக்கு செல்லும் குழந்தைகளைப் பார்த்தால் அவர்கள் சுமந்து செல்லும் புத்தக மூட்டையைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. மேலும் அந்தப் புத்தக மூட்டையுடன் நகர்ப்புற பயணிகள் பேருந்தில் அடைத்துக் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டும், தொங்கிக் கொண்டும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி பள்ளிக்கு சென்று வருவது அனைத்து மக்களுக்கும் நன்றாகவே தெரியும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையை மாற்ற வேண்டும் எனில் அனைத்துக்கல்வி

கற்கும் பாடப்பயிற்சி நிகழ்வுகளை மின்னணு, கணினிவியல் முறையிலான பயிற்சிக்கு மேம்படுத்தப்பட்டு மாற்றியே ஆக வேண்டும். அதாவது எடுத்துச் செல்லும் கையேடுகள் அனைத்தும் இனி வரும் காலங்களில் கையடக்க மின்னணு கருவி பொருளான ‘‘பென்டிரைவ் மற்றும் கார்டு ரீடரில்’’ பதிவேற்றம் செய்யப்பட்டு பள்ளிக்கு வருகை புரிந்து வகுப்பறைக்குள் செல்லும்போது கல்வி பயிற்சி பயில வருகை புரிந்திருப்பவர்களுக்கு வழங்கிவிட வேண்டும். இதன் மூலம் அவர்கள் இனிவரும் காலங்களில் புத்தக மூட்டை சுமையை எடுத்துசெல்ல அவசியம் இருக்காது. மேலும் இதன் விளைவாக காகித தயாரிப்புகளுக்கும் அவசியம் இருக்காது, பசுமைகளை அழிக்கவும் தேவை இருக்காது.

பள்ளியில் வழங்கப்படும் மின்னணு பாடக்கருவியை கல்வி பயில்பவர்கள் அந்த மின்னணு பொருளை வீட்டிற்கு எடுத்து வந்தும் பயிற்சி எடுத்துக் கொள்ளும்படி கொடுத்து அனுப்ப வேண்டும். மேலும் இதுபோன்ற பொருள்களில் பாதுகாப்பு நலன் கருதி எவரும் பதிவேற்றத்திற்குள் நுழைந்து திருத்தம் செய்யவோ அல்லது குழப்பம் செய்யவோ முடியாதபடி மின்னணு பாட கருவியை மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் தயாரித்து இருக்க வேண்டும் என்பது கூடுதல் சிறப்பாகும்.

இனி நம் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் மின்னணு கையடக்க பொருளான பென்டிரைவ், கார்டு ரீடர் ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டி, இதற்காக மேம்பட்டதொரு நிலைப்பாடான பாடங்களின் காணொளி பேச்சுப்பதிவுகளை பதிவேற்றி பின்னர் படிக்கும்படி, காணும்படி பதிவிறக்கப்படும்படியாகவும் மேம்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் அடுத்த தலைமுறையினர் மிகவும் எளிதாக இந்த நிலைப்பாட்டில் இருந்து இன்னும் மேம்பட்டதொரு நிலைப்பாட்டிற்கு எடுத்து சென்று சாதிப்பார்கள் என்பது எதிர்காலம் காணப்போகும் உண்மையாகும்.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள்:

## அனைத்து வித பணிகளுக்குமான ஊதிய கட்டமைப்புகள் – வகைப்படுத்துதல் – வழிகாட்டுதல்:

நாட்டில் நடைபெற்று வரும் அனைத்து வித பணிகளிலும் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் ஊதிய வரம்புகளை வகைப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்த வேண்டி கீழ்க்கண்டவாறு கையாளப்பட வேண்டிய எளிய நடைமுறைகள்.

1. முதல் நிலைப் பணியாளர்கள் : தொழில்நுட்ப வல்லுநர், நிர்வாக மேலாண்மை பணியாளர்கள்.

ஊதிய வரம்புகள் : அன்றாடம் ரூ.1600/–

2. 2–ம் நிலைப் பணியாளர்கள் : இத்தொழில் நுட்ப வல்லுநர், கண்காணிப்பு மேலாண்மை நிர்வாகப் பணியாளர்கள்.

ஊதிய வரம்புகள் : அன்றாடம் ரூ.800/–

3. 3–ம் நிலைப் பணியாளர்கள் : தொழில்நுட்ப வல்லுநர், பராமரிப்பு நிர்வாகப் பணியாளர்கள்.

ஊதிய வரம்புகள் : அன்றாடம் ரூ.600/–

4. 4–ம் நிலைப் பணியாளர்கள் : அடிப்படை பராமரிப்பு தொழில்நுட்ப உதவிப் பணியாளர்கள்.

ஊதிய வரம்புகள் : அன்றாடம் ரூ.400/–

5. 5–ம் நிலைப் பணியாளர்கள் : அடிப்படை பராமரிப்பு சேவை உதவிப் பணியாளர்கள்.

ஊதிய வரம்புகள் : அன்றாடம் ரூ.200/–

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் – நெறிமுறைகள்:

## கழிவுநீர் வழித்தட பாதை அமைத்தல் திட்டமிடுதல்:

நம்மிடம் 18 வகைகளான தேசிய கட்டமைப்பு உள்நாட்டு சேவைகள் மேலாண்மை வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கண்டறியப்பட்டால் வகைப்படுத்தப்படும். இதில் ஒன்றுதான் உதாரணமாக மேற்சொல்லப்பட்ட கழிவுநீர் வழித்தட பாதை அமைத்தல்.

## மாதிரி வரைவு நிதி ஒதுக்கீடுகளை இப்போது கணக்கிட்டுப் பார்ப்போம்:

இந்த திட்டத்திற்காக தேவைப்படும் மொத்த பணியாளர்கள் வகைப்படுத்துதல்.

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் நிலைப் பணியாளர்கள் | = | 10 நபர்கள் |
| 2. | 2–ம் நிலைப் பணியாளர்கள் | = | 30 நபர்கள் |
| 3. | 3–ம் நிலைப் பணியாளர்கள் | = | 60 நபர்கள் |
| 4. | 4–ம் நிலைப் பணியாளர்கள் | = | 100 நபர்கள் |
| 5. | 5–ம் நிலைப் பணியாளர்கள் | = | 300 நபர்கள் |
| | மொத்தம் | = | 500 நபர்கள். |

இத்திட்டத்தின் காலவரம்பு = 300 வேலை நாட்கள்.

இத்திட்டத்தின் இலக்கு = பொருளியல் நிபுணத்துவப்படி கணித்து வரையறுக்கப்பட்டு நிர்ணியக்கப்பட்டது.

= சுமார் 20 அடி அகலம் 10 கி.மீ நீளம்

திட்ட மதிப்பீடு சுமார் = ரூ.1100/– கோடிகள்.

வ.எண்.1 பணியாளர்களுக்கு

வழங்கப்படும் திட்ட இலக்கு ஊதியம் (10x300x1600)

= ரூ.48,00,000/-

இந்தியர் பொது செலவின வருட வரிவசூல்

10% பங்களிப்பு வரம்பு = ரூ.4,80,000/-

வ.எண்.2 பணியாளர்களுக்கு வழங்கப்படும்

திட்ட இலக்கு ஊதியம் (30x300x800) = ரூ.24,00,000/-

இந்தியர் பொது செலவின வருட வரிவசூல்

10% பங்களிப்பு வரம்பு = ரூ.2,40,000/-

வ.எண்.3 பணியாளர்களுக்கு வழங்கப்படும்

திட்ட இலக்கு ஊதியம் (60x300x600) = ரூ.108,00,000/-

இந்தியர் பொது செலவின வருட வரிவசூல்

10% பங்களிப்பு வரம்பு = ரூ.18,00,000/-

வ.எண்.4 பணியாளர்களுக்கு வழங்கப்படும்

திட்ட இலக்கு ஊதியம் (100x300x400) = ரூ.120,00,000/-

இந்தியர் பொது செலவின வருட வரிவசூல்

10% பங்களிப்பு வரம்பு = ரூ.12,00,000/-

வ.எண்.5 பணியாளர்களுக்கு வழங்கப்படும்

திட்ட இலக்கு ஊதியம் (300x300x200) = ரூ.180,00,000/-

இந்தியர் பொது செலவின வருட வரிவசூல்

10% பங்களிப்பு வரம்பு = ரூ.18,00,000/-

| | | |
|---|---|---|
| தளவாடங்கள் மற்றும் மூலப்பொருள்கள் | | |
| கொள்முதல் தேவையின் தோராயமான மதிப்பீடு | = | ரூ.540,00,000/– |
| இந்தியர் பொது செலவின வருட வரிவசூல் | | |
| 10% பங்களிப்பு வரம்பு | = | ரூ.54,00,000/– |
| இயந்திர உழைப்பு மற்றும் தேய்மான | | |
| மொத்த மதிப்பீடு | = | ரூ.1000,00,000/– |
| மொத்த செலவீடு | = | ரூ.1020,00,000/– |
| இந்த திட்டத்தின் வாயிலாக அரசுக்கு கிடைக்கும் | | |
| வரிவசூல் | = | ரூ.102/– கோடி |

ரூபாய் ஆயிரத்து இருபது கோடிகள் செலவினங்கள் ஆகியிருப்பது தெரிய வருகிறது. ஆக சரியான திட்டமிடுதலாலும் மின்னணு கண்காணிப்பு நிர்வாக ஆளுமையின் கீழ் ஊழலற்ற சீரான பணிகள் நடைபெற்றதால் நாட்டிற்கு இந்த ஒரு திட்டத்தின் மூலம் ரூ.20/– கோடி வரை கூடுதலாக செலவாகியுள்ளது. இந்த தொகையானது ஒரு பெரும் இழப்பல்ல. மக்களின் அன்றாட வாழ்வாதார நலப்பணிகளுக்காக செலவிடும் நோக்கத்தில் இன்னும் துல்லியமாக வரைவு செய்யப்பட்டால் நமக்கு செலவினங்கள் போக திட்ட மதிப்பீட்டில் மிகுதியாக கையிருப்பு இருக்கும்படி வரக்கூடும் என்பது உறுதி.

இது ஒரு திட்டமாதிரி வரைவு மட்டுமே.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல்

## நெறிமுறைகள்:

## தன்னிலை விளக்கம் தேடுதல் – அறிய முனைதல்:

நம்மில் எவருக்காவது "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்பதற்கு உண்டான உண்மையான பொருள் என்னவென்று தெரியுமா? என்னைப் பொறுத்தவரை நான் அன்றாடம் காணுகின்ற நிகழ்வுகளின் தோற்றங்களை அடிப்படையாக வைத்து கணித்து பார்க்கும்போது ஆறறிவு படைக்கப்பட்ட மனித குலத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் எவரிடமும் மேற்சொன்ன மூன்று ஒழுக்கங்களும் எவரிடம் இருந்தும் பரிபூரணமாக காணப்படவும் இல்லை. வெளிப்படுத்தப்பட்டதாக அறியப்படவும் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும்.

முதலில் கடமை என்பதற்கு பொருள் காண ஆய்வு செய்வோம். நான் புரிந்துணர்வு செய்து வைத்துள்ள வகையில் கூற விரும்புவது கடமை என்பதின் பொருள் "கட்டளையை நிறைவேற்று" என்பதாகும். கட்டளை என்பது ஆறறிவு படைத்த மனிதர்கள் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளை இரவு உறங்கி காலை விழித்தெழுந்து பின்னர் இரவு உறங்க செல்லும் வரை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகும். உதாரணப்பட்டியல்

1. சூரிய உதயம் முன்னர் விழித்தெழுவது.
2. பற்கள் வாய் சுத்தம் செய்வது.
3. உடற்கழிவுகள் வெளியேற்றுவது.
4. நீராகாரம் அருந்துவது.
5. இலகுவான உடற்பயிற்சி செய்வது.
6. சிறிது ஓய்வு கொடுப்பது.
7. இதமான நீரில் நீராடுவது.
8. முன்னோர்களை நினைத்து வழிபடுவது.
9. காலை உணவு உட்கொள்வது.
10. சிறிது ஓய்வாக இருப்பது.

11. வாழ்வாதார பணிகளுக்கு செல்ல ஆயத்தமாவது.

11ஏ. கல்விச் சாலைகளுக்கு செல்ல ஆயத்தமாவது.

12. பணிகள் / கல்விச்சாலைகளுக்கு செல்வது.

13. பணிகளை விசுவாசத்துடன் சீராக செய்வது.

13ஏ. கல்விப் பாடங்களை முழுமனதுடன் படித்தறிவது.

14. மனதிற்கு இடைவேளை விட்டுக் கொள்வது.

15. மதிய உணவு உட்கொள்வது.

16. உண்டபின் களைப்பாறுவது.

17. பணிகள் தொடர்ந்து செய்வது.

18. அன்றைய பணிகளை முடித்துக் கொடுப்பது.

19. மாலைப் பொழுது போக்கில் ஈடுபடுவது.

20. சூரிய மறைவிற்கு முன் வீடு திரும்புவது.

21. மனைவி, மக்களுடன் மனமகிழ்ந்து கலந்துரையாடல் செய்வது.

21ஏ. முதியோர் கல்வி கற்பது.

22. மனதை இலகுவாக்கிக் கொள்வது.

23. இரவு உணவு உட்கொள்வது.

24. முன்னோர்களை நினைத்து வழிபடுவது.

25. உறங்கும் முன் நடைபயிற்சி செய்வது.

26. உறங்க செல்வது.

27. உறங்கிவிடுதல், அமைதி காத்தல்.

மேற்சொல்லப்பட்ட கடமைகள்தான் “6 அறிவு” படைக்கப்பட்ட மனித மக்களின் இயல்பான அன்றாட வாழ்வியல் நடைமுறை ஒழுக்கங்களாக இருக்க வேண்டும். ஆனால் நம்மில் பலகோடி மக்கள் இன்றளவும் கடைப்பிடிக்க முடியாமல் ஏனோதானோவென்று வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது எவரும் மறுக்க முடியாத

செய்தியாகும்.

மேற்கண்ட வாழ்வியல் தர்மங்களை நாம் சீராக செய்து வந்தோமானால் ‘‘கண்ணியம்’’ நம்மைத் தானாக தேடி வந்து சேர்ந்து கொள்ளும். கண்ணியம் நம்மை வந்து சேர்ந்த பிறகு கட்டுப்பாடு என்பது நம்முடன் ஒட்டி உறவாடும் ஒன்றிப்போன செய்தியாக மாறிவிடும் என்பது கூடுதல் சிறப்பாகும்.

‘‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’’ போன்ற உயர்ந்த வாழ்வியல் தத்துவங்கள், நம்மிடம் எவருக்கும் ஏன் இல்லை? என்பது அறிந்தும் அறியாத புதிராக உள்ளது. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது ‘‘கலிகாலம்’’ எனப்படும் கர்மாக்களின் உச்சக்கட்ட காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவங்களின் பதிவுகளை முடிந்தளவு நாம் தனியாகவோ அல்லது குழுவாகவோ சேமித்து சுமந்து கொண்டு செல்கிறோம் என்பதுதான் இப்போதைக்கு, இன்றளவிற்கு உண்மையான வாழ்வியல் நிகழ்வுகள் ஆகும்.

முன்னோர்கள் காலத்தில் ஒரு நாட்டின் அரசர் தெய்வத்திற்கு சமமானவராக கருதப்பட்டவர் ஆவார். ஆனால் இன்று கொடுங்கோலர்களின் மறு உருவமாக கருதப்படுபவர்கள் மக்களை ஆண்டு கொண்டிருக்கின்றனர். இவர்கள் காலத்தில் எப்படி ஒரு அரசானது மக்கள் நலனை பேண முடியும்? முடியவே முடியாது. காரணம் ‘‘தன்னலம், தன் குடும்ப நலம்’’ என்ற சுயநல மாயைக்குள் சிக்கி சீரழிந்து தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் மற்ற பொது மக்களையும் சொல்ல வொண்ணா கொடுமைகளுக்கு ஆளாக்கி பழக்கப்படுத்திக் கொண்டு வந்து இதுதான் ‘‘இன்றைய நிலை’’ என்று தங்களின் கையாளாகாத தன்மையை சிறிதும் கூச்சப்படாமலும், அச்சப்படாமலும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

மாயை என்ற சுயநல சுகபோகத்திற்குள் இருக்கும் வரை இவர்களால் தன்னிலை தவற்றை உணர்ந்து மீண்டு வெளியே வரவே முடியாது. தவித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை நாம் அன்றாடம் ஊடகங்கள் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

அவரவர் தாம் உண்டு, தம் வேலை உண்டு என்று வாழப் பழகிவிட்டால் நாம் மட்டுமல்ல, நம் வருங்கால சந்ததி மக்களும் உலக அரங்கில் இந்த நாடு முதன்மை நாடாக மாறி வருவதை தடுத்து நிறுத்தவே முடியாது. மக்களை ஒரே ஒரு முறை இந்த புதிய சித்தாந்த புத்தகத்தை திறந்து படித்து உணர்ந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். பின் எவருக்கும் நீங்கள் அடிமையாகி ‘‘மூளைச்சலவைக்குள்’’ சிக்கி சீரழிய மாட்டீர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## தனி ஒரு விதி செய்வோம் – கோட்பாட்டு வழிகாட்டுதல் நெறிமுறைகள்:

## வாழ்வியல் தத்துவங்கள் – மின்னணு ஆளுமைக்குள் கொண்டு வரும் வழிகாட்டுதல்:

நாட்டில் மக்கள் வாழும் பகுதிகளை மின்னணு ஆளுமைக்குள் வகைப்படுத்தும் நோக்கத்தின் முதல் முயற்சியாக மேம்பட்ட கட்டமைப்புகளை ஏற்படுத்தி கண்காணிப்பு நிர்வாகம் செய்ய வேண்டி முதலில் (“ஹைடெக்”) “உயர்ந்த தொழில்நுட்பம்” என்று சொல்லப்படும் மின்னணு ஆளுமையின் கீழ் பசுமை இல்லங்களாக நாட்டில் உள்ள மக்களுக்கு, ஏற்கனவே கணிக்கப்பட்டு சொல்லப்பட்டுள்ள சுமார் 25 லட்சம் வீடுகள் கட்டுமானங்கள் செய்து முடிக்கப்பட வேண்டும்.

இந்த வீடுகள் அனைத்தும், கீழ்த்தளத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கும், முதல் மற்றும் 2–ம் தளம் மக்கள் குடியிருக்க ஏற்ற வகையிலும் குடியிருப்புகள் கட்டுமானம் செய்யப்பட வேண்டும். அனைத்து குடியிருப்புகளின் கீழ்தளத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக சிறு மற்றும் மிதரக அழைத்துச்செல் வாகனங்கள் (பிக்அப் டாக்ஸி) நிறுத்துவதற்கு ஏதுவாக கட்டுமானங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த வாகனங்கள் மக்கள் சேவையில் தொடர்பணிகள் நடைபெறும்படி கண்காணிப்புக்குள் இருக்க வேண்டும்.

இந்த வாகனங்களின் ஓட்டுநர்கள் மிகவும் பொறுப்பாக தொடர்பணி செய்ய வேண்டி இருப்பதால் இவர்கள் பணியின் வரன்முறையை 8 மணி நேரப்பணிக்கு பதிலாக 6 மணி நேர சுழற்சிப்பணியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இந்த வாகனங்கள் அனைத்து தெருக்களின் வழியாக பொது மக்களின் வசதி கருதி இயக்கப்பட இருப்பதால் அனைத்து தெருக்களின் குறுக்களவு 30 அடிகளுக்கு குறையாமல் கட்டுமானம் செய்வதை கண்காணிக்கப்பட வேண்டும்.

## மக்களின் இயல்பு வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய காலநேர ஒழுக்கங்கள்:

அனைத்து மக்களும் அவரவர் வாழும் குடியிருப்புகளில் காலையில் சூரிய உதயத்திற்கு முன் விழித்தெழ வேண்டி அனைத்து குடியிருப்புகளுக்கும் தனித்தனியாக ஒரு மின் ஓசை எழுப்பும் கருவி பொருத்தப்பட்டு மக்களை விழித்தெழச் செய்ய வேண்டும். இந்தப் பணியானது காலை 5 மணிக்கு செய்ய வேண்டிய பணியாகும். மேலும் ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு கீழ்த்தள தொடர்பு தொலைபேசி செய்தி தொடர்புக்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் கீழ்த்தளத்தில் இருந்து ஒவ்வொரு குடியிருப்பில் உள்ளவர்களை, குடியிருப்பின் கீழ்த்தளத்தில் இருந்தவாரே தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடும் அளவிற்கு மேம்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும் கீழ்த்தளத்தில் ஒவ்வொரு குடியிருப்புக்குமான தபால் பெட்டி அந்தந்த கதவிலக்க எண் பதிக்கப்பட்டு கட்டமைப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் அந்தந்த குடியிருப்புக்கு வரும் அஞ்சல்கள் அந்தந்த குடியிருப்பின் அஞ்சல் பெட்டியில் போட்டுவிட வசதியாக இருக்கும்.

மக்கள் அனைவரும் காலை விழித்தெழுந்த உடன் தங்கள் காலைக்கடன்களை முடித்த பிறகு குடியிருப்புகளின் கீழ்த்தளத்திற்கு இலகுவான உடற்பயிற்சிக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக வேண்டி காத்திருக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் மக்களை வகைப்படுத்தி, மக்களின் 6 அறிவை பேணிக்காக்கும் வகைகளான இலகுவான உடற்பயிற்சிகளை கற்றுத்தந்து விடுவார்கள். இந்த உடற்பயிற்சிகள் அனைத்தும் காலை 6 மணியில் இருந்து 6½ மணிக்குள் முடித்தாக வேண்டும்.

உடற்பயிற்சி முடிந்த பிறகு காலை 7 மணிக்குள் இதமான நீராடுதல் செய்து முடித்து முன்னோர்களை நினைத்து சிறிது நேரம் வழிபட வேண்டும். பிறகு காலை 7½ மணி முதல் 8 மணிக்குள் காலை உணவை உட்கொண்டு முடித்துக் கொள்ள வேண்டும். சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர் காலை வாழ்வாதார பணிகளுக்கும் – கல்வி பயில செல்வதற்கும் ஆயத்தமாகி கிளம்பி செல்ல கீழ்த்தளத்திற்கு வந்துவிட வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்கள் செல்ல இருக்கும் வாகனத்தில் ஏறி அமர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு முன்னர் தங்களின் “இந்தியர் பொது செலவின வரிவசூல் பயோமெட்ரிக் ரொக்கப் பரிவர்த்தனை அட்டை” யைக் கொடுத்து அன்றாட வாகனப் பயணத்தின் கட்டணத்தை வரிவசூலுடன் கழிவு செய்து கொள்வதை உறுதி செய்து கொண்ட பின்னர் இருக்கையில் அமர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த கட்டமைப்பு ஏற்பாட்டில் ஒரு விதி விலக்காக மூத்த குடிமக்களுக்கும், 10 வருடங்கள் ஆயுள் முடிந்த சொந்த வாகனங்களை உலோக மறு சுழற்சிக்காக ஒப்படைக்கும் உரிமையாளர்களுக்கும் இலவச அனுமதி அட்டையை வழங்கி பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

## மின்னணு ஆளுமை நிர்வாக சீரமைப்பு ஏற்பாட்டில் அடுத்த கட்டடமைப்பு:

இனிவரும் காலங்களில் கல்வி பயில செல்லும் காகித புத்தக மூட்டையை சுமந்து செல்லும் வேதனைகள் இருக்காமல் இருக்க அனைத்து கல்வி முறைகளும் இனி வரும் காலங்களில் மின்னணு கணினிவியல் கல்வி முறையாக மேம்படுத்த வேண்டும்.

இதற்காக வேண்டி அனைத்துப் பாட திட்டங்களையும் மின்னணு கையடக்கப் பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு பின்னர் பதிவிறக்கி கல்வி பயிலும்படி மேம்படுத்தப்பட வேண்டும்.

பணிக்கு செல்பவர்களின் அலுவலகம் சென்று பணிபுரியும் நோக்கத்தை மேம்படுத்த வேண்டி அவர்கள் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் மின்னணு கணினிவியல் முறையில் வீட்டில் இருந்தபடியே செய்யும்படி மேம்படுத்த வேண்டும்.

உலகில் இதுபோன்ற நடைமுறைகள் எங்கெல்லாம் செயல்படுகிறது என்று தெரியவில்லை. நாம்தான் கணினியை கையாள்வதில் உலகளவில் முன்னிலையில் இருப்பதாக கூறிக் கொண்டாலும், இல்லாவிட்டாலும் கணித பயிற்சியில் சிறப்பாக செய்துவரும் நம் மக்களைக் கொண்டு புதிய சித்தாந்த புத்தகங்களை உருவாக்குவோம். உலகிற்கு செய்து காட்டுவோம். முன்னிலை வகிப்போம். உட்கார்ந்த இடத்தில் இருந்தே விரல் நுனியில் உலகை வலம் வந்து மேம்பட்டதொரு மின்னணு கணினிவியல் நிலைப்பாட்டில் உலகை ஆள்வோம். இப்போதைக்கு நோயுற்ற மாணவருக்கு பதில் மின்னணு இயந்திரப் பொருளான “ரோபோ” கல்விச் சாலைக்கு சென்று பாடங்களை தெரிந்து கொண்டு நோயுற்ற மாணவருக்கு தெரிவிக்கும்படி மின்னணு கணினிவியல் மேம்படுத்தப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதுதான் ஆரம்பம். நாம் உண்மையாகவும்

விசுவாசமாகவும் உழைத்தால் நாம் நாட்டின் கவுரவத்தை தலைநிமிரச் செய்து எங்கோ கொண்டு சென்று விடுவோம் என்பது உண்மை. இத்துடன் என்னுடைய சீரிய சிந்தனையில் தொடர் தேடுதலில் கிடைக்கப் பெற்ற தனித்துவ கோட்பாட்டு வழிகாட்டுதலான **“தனி ஒரு விதி செய்வோம்”** தாற்காலிகமாக நிறைவு செய்கிறேன்.

நன்றி ! வணக்கம்.

வாழ்க வையகம்! குரு வாழ்க! குருவே துணை! வாழ்க வளமுடன்!

இவன்,

ஆர்வலர்.

“தனி ஒரு விதி செய்வோம்”

(முத்தியால்சாமி அண்ணாதுரை)

முன்னாள் படைவீரர் இடைவிலகல்

சேலம்.

தமிழ்நாடு – இந்தியா.

கைபேசி : 96009–10320

இமெயில் : mad.foundations2013@gmail.com.